விலை: 50.00 Viber : 076 636 3378
பக்கங்கள் : இருபத்து நான்கு

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com, valampurii@sltnet.lk

UNION
moving money for better
உலகெங்குமுள்ள உறவுகளுக்கு துரித நாணயங்கள், பொதிகள் சேவை உடனுக்குடன் அனுப்ப நாடுங்கள்
உறவுகளிடமிருந்து WESTERN UNION மூலம் அனுப்பிய பணத்தை ஒருசில நிமிடங்களில் நீங்கள் பெற்றுக்கொள்ள.
இவையனைத்தையும் ஒரே கூரையின் கீழ் அதிவிரைவு, பாதுகாப்பு, நம்பகத்தன்மை
Authorised Agent
SRI MURUGAN
TELE COMMUNICATION & AGENCY POST OFFICE
# 303, K.K.S.ROAD, JAFFNA.
TEL: 021 222 5392, 021 222 2670, FAX: 021 222 3214
E-mail:srimurugan303@gmail.com, E-mail:srimurugan09@gmail.com
(C-114)

சங்கு 21 வள்ளுவர் ஆண்டு 2051 ஆவணி 12 வெள்ளிக்கிழமை (28.08.2020) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 253

## யாழ்.பல்கலைக்கழகத்தின் புதிய துணைவேந்தராக



### பேராசிரியர் சிறிசற்குணராஜா நியமனம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் புதிய துணைவேந்த 23

## விக்னேஸ்வரன் பாராளுமன்றில் விரும்பியதைச் சொல்ல உரிமை உண்டு

### சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்தன



(கொழும்பு)

பாராளுமன்றத்துக்குள் எந்தவொரு பாராளுமன்ற உறுப்பினருக்கும் தமது கருத்துக்களை தெரிவிக்க சுதந்திரம் உள்ளதாக சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்தன தெரிவித்துள்ளார்.

பாராளுமன்ற உறுப்பினர் சி.வி.விக்னேஸ்வரன் பாராளுமன்றின் முதல் அமர் 23

# விக்னேஸ்வரனை சபையை விட்டு உடன் வெளியேற்றுங்கள்

## முள்ளிவாய்க்காலில் சத்தியப்பிரமாணம் செய்ததற்கு விசாரணையும் நடத்த வேண்டும்

### சிங்கள எம்.பிக்கள் பாராளுமன்றத்தில் போர்க்கொடி

(கொழும்பு)

இலங்கையின் பூர்வீகக் குடிகள் தமிழ் மக்களே. உலகின் மூத்த மொழிகளில் தமிழும் ஒன்று என நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் பாராளுமன்றில் உரையாற்றியதற்காக அவரை சபையை விட்டு உடன் வெளியேற்றுங்கள் என சிங்கள எம்.பிக்கள் நேற்று பாராளுமன்றில் போர்க்கொடி உயர்த்தினர்.

முள்ளிவாய்க்காலில் சத்தியப்பிரமாணம் செய்ததற்காக அவர் மீது விசாரணை நடத்த வேண்டும் என்றும் கூச்சல் இட்டனர். (23ஆம் பக்கம் பார்க்க)

## 2 பேருக்கு கொரோனா

(கொழும்பு)

இலங்கையில் மேலும் 2 பேருக்கு கொரோனா வைரஸ் (கோவிட்-19) தொற்றுக்கு உள்ளாக்கியுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

ஐக்கிய அரபு இராச்சியத்தில் இருந்து வருகை தந்த ஒருவர் மற் 23

## தமிழ் மொழிக்கு உரிமை இல்லா தொழிக்க சூழ்ச்சி

முன்னாள் அமைச்சர் ஹர்ஷ



03

### விக்னேஸ்வரனின் கன்னி உரைக்கு

## பாராளுமன்றில் நேற்று காரசாரமான விவாதம்

(கொழும்பு)

பாராளுமன்றத்தில் கடந்த வாரம் விக்னேஸ்வரன் ஆற்றிய உரை தொடர்பில் நேற்று சபையில் கடும் வாதப் பிரதிவாதங்கள் இடம் 23

## சாவகச்சேரியில் சக்தி வாய்ந்த நிலக்கண்ணிவெடி

(சாவகச்சேரி)

கவச வாகனங்களை தகர்க்கக்கூடிய அதிசக்தி வாய்ந்த நிலக்கண்ணி வெடி ஒன்று சாவகச்சேரி 23

## புதிதாக நியமிக்கப்படுவோரை அலுவலகத்துக்குள் முடக்கோம்

### சபையில் பிரதமர் மகிந்த

(கொழும்பு)

நாங்கள் இப்போது உருவாக்கியுள்ள ஒரு இலட்சத்து 60 ஆயிரம் பேர் கொண்ட புதிய தொழிற்படையை வழமையாக வேலைவாய்ப்பு வழங்குவது போன்று அலுவலங்களுக்குள் மட்டுப்படுத்த 02

## வாள்வெட்டுக் குழுவை சேர்ந்த 6 பேர் கைது

(யாழ்ப்பாணம்)

வாள்வெட்டுக் குழுவைச் சேர்ந்த 6 பேர் சந்தேகத்தின் அடிப்படையில் நேற்று கைது செய்யப்பட்டுள்ளனர்.

பிறந்தாள் கொண்டாட்டம் ஒன்றுக்காக 12 பியர் ரின்களுடன் மானிப் 02

## கோட்டா அரசுக்கு அழுத்தம் கொடுத்து சர்வதேசம் தீர்வைப் பெற்றுத்தர வேண்டும்

### வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள்

(கிளிநொச்சி)

கோட்டா அரசுக்கு கால அவகாசம் எதுவும் கொடுக்காமல் சர்வதேசம் எமக்கு தீர்வை பெற்றுத் தர வேண்டும் என வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் தெரிவித்துள்ளனர்.

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் சங்கம் நேற்றைய தினம் கிளிநொச்சியில் ஊடக சந்திப்பு ஒன்றினை ஏற்பாடு செய்திருந்தது. 23

## யாழில் மீண்டும் டெங்குத் தாக்கம் 6 பேர் யாழ்.போதனாவில் அனுமதி


### பணிப்பாளர் சத்தியமூர்த்தி தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் மீண்டும் டெங்கு காய்ச்சல் பாதிப்பு ஏற்பட்டுள்ளதையடுத்து கடந்த வாரத்தில் 6 பேர் யாழ். போதனா வைத்திய 02

## இலங்கையுடன் இணைந்து பயணிக்க நோர்வே தயார்

### பிரதமர் மகிந்தவிடம் நோர்வே தூதுவர்



(கொழும்பு)

இலங்கையுடன் இணைந்த 02

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# கண்ணீர் அஞ்சலி



எமது கல்லூரியின் ஆசிரியை
திருமதி பற்றீசியா தேவா
அவர்களின் அன்புத் தாயார்

அமரர்
மேரி ஜெயசீலி
யோசேப் இரத்தினம்

அவர்கள் இறைபதம் அடைந்த செய்தி அறிந்து துயரடைவதுடன் அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(C-163)

ஆசிரியர் கழகம்
யா/யாழ். இந்து மகளிர் கல்லூரி


# வேலை வெற்றிடம்



1. BEAUTICIAN தேவை (பெண்)
பியூட்டி பார்லர் பணியாளர்
(ஐபுறோ திரெட்டிங், ஃபேஷியல் மற்றும் அழகுக்கலை பணிகள்)
2. திறுவனர் பணியாளர் தேவை (பெண்)
தமிழ்,ஆங்கில உறுப்பெழுத்து.
மற்றும் எந்தவொரு பணியையும் பழகிச் செய்யத் தயாராயிருத்தல்.

பணியிடம்: வடமராட்சி - நெல்லியடி

பொருளாதார ரீதியான தேவையுடையவர்கள் மட்டும் வருகை தரவும்.
முழு விபரங்களையும் நேரில் வந்து பெற்றுக் கொள்ளலாம்.
30.8.2020 ஞாயிறு காலை 10 மணிக்கு நேரடியாக வருகை தரவும்.

(C-162)

இல. 11, பொன் கந்தையா பாதை,
ம. ம. வித்தியாலய வீதி, நெல்லியடி.

இயக்குநர்
077 914 3171


## யாழில் மீண்டும்...

சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

யாழ். போதனா வைத்தியசாலை பணிப்பாளர் த.சத்தியமூர்த்தி வெளியிட்ட அறிக்கையில் இவ்விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது. அதில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

கடந்த 17ஆம் திகதி முதல் 23ஆம் திகதி வரையான ஒரு வாரகாலத்தில் யாழ். மாவட்டத்திற்குட்பட்ட பிரதேசங்களைச் சேர்ந்த 6 பேர் டெங்கு காய்ச்சல் தொற்றால் பீடிக்கப்பட்ட நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணம் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் ஒருவரும், சண்டிலிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் ஒருவரும், உடுவில் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் ஒருவரும், நல்லூர் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் ஒருவரும், ஊர்காவற்துறை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் இருவருமாக ஆறு பேர் இவ்வாறு டெங்கு காய்ச்சலால் பாதிக்கப்பட்டு சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என்றுள்ளது.(ம-3)

## புதிதாக நியமி...

போவதில்லை. அவர்களை பொருளாதார நடவடிக்கைகளுக்கு நேரடியாக பங்களிப்பு செய்யும் வகையில் விவசாயத் துறை, நிர்மாணத்துறை போன்ற துறைகளில் ஈடுபடுத்துவோம். அவர்களை சிறந்த நிபுணத்துவம் கொண்டவர்களாக மாற்றுவோம். அதன் மூலம் சமூகத்தில் வறுமைக் கோட்டின் கீழுள்ள குடும்பங்களை வளப்படுத்துவோம்.

இவ்வாறு பிரதமர் மகிந்த ராஜபக்ச பாராளுமன்றில் நேற்று தெரிவித்தார்.

இடைக்கால கணக்கறிக்கையை நேற்று பாராளுமன்றில் சமர்ப்பித்து உரையாற்றிய போதே பிரதமர் இதனைத் தெரிவித்தார். (ம-3)

## வாள்வெட்டுக் குழுவை...

பாய் பொன்னாலை வீதியில் சென்று கொண்டிருந்த போது சந்தேக நபர்கள் 6 பேரும் மானிப்பாய் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அத்துடன் வாள்வெட்டுக் குழு சந்தேக நபர்களுக்கு நீதிமன்றில் பிணையாக கையொப்பமிட்ட ஆண் ஒருவரும் பெண் ஒருவரும் தலா 3 வழக்குகளில் பிடியாணை பிறப்பிக்கப்பட்ட நிலையில் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று மானிப்பாய் பொலிஸார் கூறினர்.

அத்தோடு பீடிக்குள் கஞ்சா போதைப் பொருளை மறைத்து நுகர முயன்ற குற்றச்சாட்டில் ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளதாக மானிப்பாய் பொலிஸாரால் தெரிவிக்கப்பட்டது. (ம-3)

## இலங்கையுடன் இணைந்து...

பயணிக்க நோர்வே அரசு தயாராக இருப்பதாக பிரதமர் மகிந்த ராஜபக்சவிடம் நோர்வே தூதுவர் தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கான நோர்வே தூதுவர் ட்ரீன யுரன்லி எஸ்கடேல், பிரதமர் மகிந்த ராஜபக்சவுடன் சந்திப்பை மேற்கொண்டார். கொழும்பு அலரி மாளிகையில் இந்தச் சந்திப்பு நேற்றைய தினம் (27) இடம்பெற்றது.

பாராளுமன்ற தேர்தலில் வெற்றியீட்டியமைக்காக பிரதமர் மகிந்த ராஜபக்சவுக்கு வாழ்த்துத் தெரிவித்திருந்ததுடன், தேர்தலை முறையாக ஏற்பாடு செய்து. சமாதானமான முறையில் கோவிட்-19 பாதுகாப்பு வழிமுறைகளுக்கமைய முன்னெடுத்திருந்தமையையும் பாராட்டியிருந்தார். ஆரம்ப கட்டத்தில் இனங்கண்டு, துரித கதியில் தடுப்பு நடவடிக்கைகளை முன்னெடுத்திருந்ததனூடாக கோவிட்-19 தொற்றுப் பரவலை கட்டுப்படுத்துவதில் இலங்கை வெற்றிகரமாக செயலாற்றியிருந்ததாகவும் அவர் குறிப்பிட்டார்.

புதிய அரசாங்கத்துடன் இணைந்து செயலாற்ற நோர்வே எதிர்பார்ப்பதாக பிரதமரிடம் தூதுவர் எஸ்கடேல் குறிப்பிட்டதுடன், இலங்கையுடன் நீண்ட காலமாக பேணிவரும் பங்காண்மை மற்றும் பரஸ்பர உறவுகளையும் பாராட்டியிருந்தார். (ம-3)

# நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய நிகழ்வும்



பிறப்பு
25.05.1961

இறப்பு
01.05.2020

கடந்த 01.05.2020 அன்று இறைபதமடைந்த எங்கள் அன்புத் தெய்வம்

அமரர்

ராஜேஸ்வரன் செல்வரட்ணம் (புழும்)

அன்னாரின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை 29.08.2020 சனிக்கிழமை காலை 07.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையிலும் வீட்டுக் கிருத்தியக் கிரியைகள் 31.08.2020 திங்கட்கிழமை அன்று பகல் 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்திலும் நடைபெறவுள்ளது. அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

(3712)

யாழ்ப்பாணம்
தொலைபேசி- 077 981 5682

தகவல் :
செல்வதியம்மா செல்வரட்ணம்



யாழ். நகரில் அமைந்துள்ள நர்மதா நகையகத்தின் ஐந்தாம் ஆண்டு பூர்த்தியை முன்னிட்டு கடந்த ஞாயிற்றுக்கிழமை இரத்ததானம் வழங்கும் நிகழ்வு இடம்பெற்றது இதன்போது இந்நிகழ்வில் 74 பேர் கலந்துகொண்டு இரத்ததானம் வழங்கினர்.

# ஈராண்டு நினைவலை...



சுவர்க்க ஸ்ரீமதி
நாகபூஷணி
சோமசுந்தரக் குருக்கள்

திதி – ஆவணித் திங்கள் வளர்பிறை ஏகாதசி

கனவிலும் இழக்கமுடியா உறவு நீ - எனினும்
நிஜயமாய் இழந்துவிட்ட கனவு நீ - என்றும்
நிஜத்திலும் கனவிலும் நாம்தேடும் உள்ளம் நீ - அம்மா!
உம் அன்பு உள்ளமது என்றுமே துணையிருக்கும்
நம்பிக்கையில் வாழ்ந்திருப்போம் உம் ஆசி வேண்டிநிற்போம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

"சோமராகம்", 323/8D, கோவில் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.
021 222 5685

(C-158)

உம் நினைவில்
குடும்பத்தினர்

# தமிழுக்கான உரிமை இல்லாதொழிக்க சூழ்ச்சி

## முன்னாள் அமைச்சர் ஹர்ஷ சந்தேகம்

(கொழும்பு)

**அரசியல் அமைப்புத் திருத்தங்கள் ஊடாக தமிழ் மொழிக்கான உரிமையை இல்லாது செய்வதற்கு சூழ்ச்சிகள் முன்னெடுக்கப்படுவதாக முன்னாள் அமைச்சர் ஹர்ஷ டி சில்வா தெரிவித்துள்ளார்.**



19 ஆவது அரசியலமைப்பு திருத்தச் சட்டம் இரத்துச் செய்யப்பட்டு 20 ஆவது திருத்தச் சட்டம் உருவாக்கப்படும் என கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கம் அறிவித்துள்ளது. இந்த விடயமே தற்போது அரசியலில் பேசும் பொருளாக மாறியுள்ளது.

இந்த நிலையில் இந்த விடயம் குறித்து ஐக்கிய மக்கள் சக்தியின் தலைமையகத்தில் நேற்று முன்தினம் ஊடகங்களுக்குக் கருத்து வெளியிடும் போதே ஹர்ஷ டி சில்வா இதனைத் தெரிவித்துள்ளார்.

19 ஆவது அரசியல் அமைப்பில் திருத்தம் செய்ய முன்னெடுக்கப்படும் முயற்சியில் 13 ஆவது திருத்தம் உள்ளிட்ட மேலும் சில அரசியல் அமைப்புக்களையும் திருத்தம் செய்வதன் ஊடாகத் தமிழ் மொழிக்கான உரிமையை இல்லாது செய்வதற்கு சூழ்ச்சிகள் முன்னெடுக்கப்படுவதாக அவர் தெரிவித்துள்ளார்.

மேலும் இலங்கையில் மொழி அடிப்படையிலான பிரச்சினைகள் அதிகம் எழுந்துள்ள நிலையில், தமிழ் மக்கள் வாழும் பிரதேசங்களில் தமிழ் மற்றும் சிங்கள மொழியில் நிர்வாகம் செய்வதற்கான வாய்ப்பை ஏற்படுத்த வேண்டும் என அவர் வலியுறுத்தியுள்ளார்.

அதனைவிடுத்து தற்போதைய சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தித் தமிழ்மொழி பயன்படுத்தப்படும் சந்தர்ப்பத்தை இல்லாதொழிக்கக் கூடாது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் சிங்கள பத்திரிகையொன்றில் காணப்பட்ட ஆளுந்தரப்புப் பாராளுமன்ற உறுப்பினர்கள் சிலரது நேர்காணல் இனவாதத்தைத் தூண்டும் விதத்தில் இருந்ததாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

குறிப்பாக வடக்கில் எவ்வாறு தமிழ் மொழியில் வழக்கு விசாரணை செய்ய முடியும்? வடக்கில் சிங்கள மொழியிலேயே வழக்கு விசாரணை செய்யப்பட வேண்டும் என ஆளுந்தரப்புப் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் கூறியுள்ளதோடு, 16 ஆவது திருத்தத்தை நீக்க வேண்டும் எனக் கூறியுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

எனவே, தற்போது முன்னெடுக்கப்படும் திருத்தமானது, 19 ஆவது திருத்தத்தில் மட்டுமல்லாது மாறாக 13, 14, 16, 17 மற்றும் 19 ஆகிய அனைத்து திருத்தங்களிலும் திருத்தங்களை முன்னெடுக்கும் மிகப் பெரிய சூழ்ச்சியே அரங்கேற்றப்படுவதாகவும் முன்னாள் அமைச்சர் ஹர்ஷ டி சில்வா தெரிவித்துள்ளார். (2-7)

# இலங்கையின் ஆதிக்குடிகள் தமிழர்களே! இதில் மாற்றுக்கருத்திற்கு இடமே இல்லை

## தெற்கின் சலசலப்பிற்கு சிவசக்தி ஆனந்தன் முற்று



(நெளுக்குளம்)

வரலாற்றை திரிபுபடுத்தி இலங்கையை சிங்கள, பௌத்த நாடாக பிரகடனப்படுத்த வேண்டும் என்ற திட்டமிட்ட நிகழ்ச்சி நிரலில் பயணிக்கின்ற பேரினவாதிகள் விக்னேஸ்வரனின் கூற்றை ஜீரணிக்க முடியாது கூச்சலிட்டு வருகின்றனர் என்று தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் பொதுச்செயலாளர் சிவசக்தி ஆனந்தன் தெரிவித்துள்ளார்.

ஊடகங்களுக்கு அனுப்பி வைத்த அறிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவ் அறிக்கையில்,

தேர்தல் நிறைவடைந்தவுடன் தமிழ்த் தேசியக் கட்சிகள் ஒற்றுமையாகச்செயற்பட வேண்டும் என்று கோரிநின்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வரலாற்று உண்மைக்கு எதிராக கோசங்கள் எழுந்தபோது மௌனித்து நிற்கின்றது என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஒன்பதாவது பாராளுமன்ற கன்னி அமர்வன்று சபாநாயகருக்கான கட்சித்தலைவர்கள் வாழ்த்துரையின்போது தமிழ் மக்கள் பூர்விக குடிகள், தமிழ் மொழி தொன்மையானது என்ற உண்மையைத் தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் தலைவரும் யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான நீதியரசர். சி.வி.விக்னேஸ்வரன் பாராளுமன்றில் வெளிப்படுத்தினார்.

தமிழ்மொழியானது உலகத்தில் உள்ள மிகத் தொன்மையான மொழிகளில் ஒன்றாகும். அதேபோன்று உலகத்தில் உள்ள இனங்களில் தமிழினத்திற்கும் தொன்மையான வரலாறுகள் காணப்படுகின்றன.

இந்தப் பின்னணியில் இலங்கையினை எடுத்துக்கொள்கின்றபோது, இலங்கையின் தமிழர்கள் ஆதிக்குடிகள் என்பதற்கும் தமிழ்மொழி பழம் பெரும் மொழி என்பதற்கும் ஆயிரமாயிரம் சான்றாதாரங்கள் காணப்படுகின்றன.

ஆனால் அவற்றை மகாவம்சம், சூளவம்சம் போன்ற வரலாற்று நூல்களை பயன்படுத்தி முழுமையாகத் திரிபுபடுத்தியுள்ளவர்கள் பேரினவாதச் சிங்களவர்களே. அதுமட்டுமன்றி தற்போதும் கூட, தமிழர்களின் பூர்வீகத்தாயகமான வடக்கு-கிழக்கின் வரலாற்றை மாற்றுவதற்கான திட்டமிடல்களை முன்னெடுக்கின்றனர்.

தமிழர்களை வந்தேறு குடிகளாக சித்திரித்து இலங்கையை முழுமையான சிங்கள, பௌத்த நாடாக பிரகடனப்படுத்துவதே பேரினவாதிகளின் நிகழ்ச்சி நிரலாக இருக்கின்றது. அதன் ஒரு அங்கமாகவே, கிழக்கு மாகாணத்திற்கான தொல்பொருள் ஜனாதிபதி செயலணி அதற்கு முழுமையான ஆதாரமாக அமைகின்றது.

இவ்வாறு தமிழினத்தின் அடையாளங்களை அழித்து, பூர்வீக நிலங்களைக் கையகப்படுத்தி பௌத்த, சிங்கள சித்தாந்தத்தினை நிறுவுவதற்கு விளைந்து வருகின்ற ஆட்சியாளர்களுக்கு தமிழர்களும் தமிழும் பூர்வீகமும் தொன்மையும் கொண்டது என்ற உண்மையைக் கூறுகின்றபோது அது கசக்கவே செய்யும். அதன் வெளிப்பாடாகவே தென்னிலங்கையில் விக்னேஸ்வரனுக்கு எதிரான கூச்சல்கள் அதிகரித்துள்ளன.

கூச்சல்களுக்கும் எதிர்ப்புக்களுக்கும் அச்சப்பட்டு உண்மைகளை வெளிப்படுத்தாமல் இருக்க முடியாது. தமிழ் மக்கள் வழங்கிய ஆணைக்கான பணியை விக்னேஸ்வரன் தொடர்ந்தும் முன்னெடுப்பதில் பின்னடிப்புக்களைச் செய்யமாட்டார் என்பது உறுதியான விடயமாகும் என அவரது அறிக்கையில்சுட்டிக் காட்டப்பட்டுள்ளது (ஜ-4-250-299-350)

# பிள்ளையான் உட்பட 9 பேருக்கு ஜனாதிபதி ஆணைக்குழு அழைப்பு

(கொழும்பு)

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் ஆராயும் ஜனாதிபதி ஆணைக்குழுவில் முன்னிலையாகுமாறு பிள்ளையான் உட்பட 9 பேருக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் தெரிய வருவதாவது.

பாராளுமன்ற உறுப்பினர்களான பிள்ளையான் எனப்படும் சிவநேசதுரை சந்திரகாந்தன், சுனில் ஹந்துன்நெத்தி, அகிலவிராஜ் காரியவசம், ஆசு மாரசிங்க, ரஞ்சித் மத்தும பண்டார, மங்கள சமரவீர, திலும் அமுனுகம, அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல மற்றும் ஹலீம் ஆகியோருக்கு ஜனாதிபதி ஆணைக்குழுவில் முன்னிலையாகுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இதனைவிட ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் அகிலவிராஜ் காரியவசத்தினை எதிர்வரும் 31 ஆம் திகதி ஜனாதிபதி ஆணைக்குழுவில் முன்னிலையாக வேண்டும் என அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.



மேலும் முன்னாள் ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ஆசு மாரசிங்க மற்றும் முன்னாள் சட்டம் மற்றும் ஒழுங்கு அமைச்சர் ரஞ்சித் மத்தும பண்டார ஆகியோரிடம் எதிர்வரும் செப்டெம்பர் 2 ஆம் திகதி வாக்கு மூலம் பதிவு செய்யப்படவுள்ளது.000

இதேவேளை முன்னாள் நிதியமைச்சர் மங்கள சமரவீர மற்றும் முன்னாள் கிழக்கு மாகாண முதலமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன் ஆகியோரிடம் செப்டெம்பர் 3 ஆம் திகதி வாக்குமூலம் பதிவு செய்யப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஜ-6)

# நாட்டின் அணையா விளக்கான மாணவர்கள் போதைப்பாவனையால் திசைதெரியாது செல்கின்றனர்

## கிளி.வைத்தியசாலைப் பணிப்பாளர் இராகுலன் கவலை

(கண்டாவளை)

**ஓர் நாட்டின் அணையா ஒளிவிளக்குகளான மாணவர்கள் போதைப் பொருட்களுடன் கைதுசெய்யப்பட்டமையானது மிகுந்த மனவருத்தத்தை தருவதுடன்,இளையோர் கண்மூடி திசைதெரியா வழியில் சென்று கொண்டிருப்பதை கட்டியம் போட்டுக் காட்டுகிறது என கிளிநொச்சி வைத்தியசாலைப் பணிப்பாளர் க.இராகுலன் தெரிவித்துள்ளார்.**

இளையோரிடையே அதிகரித்துவரும் போதைப்பொருள் பாவனையைக் கட்டுப்படுத்துவதற்கான தகவல் மற்றும் ஆலோசனைகளிலே இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,தற்கால நவீன சமுதாயத்தில், சமூகக் கட்டமைப்பிலேற்படும் மாற்றம் அதன் உறுதித்தன்மையை கேள்விக் குறியாக்குவதுடன் சமூகமட்ட பிரச்சினைகள் கிரமமாக அதிகரித்துச்செல்ல வழிகோலுகின்றது.

போதைக்கு அடிமையாதல் மிகப்பெரும் சமூகப்பிரள் வாக உலகளவில் அடையாளம் காணப்பட்டுள்ளது. போதைப் பாவனையானது நாடளாவிய ரீதியில் அதிகரித்து வரும் அதே வேளை 2009 இற்கு பிற்பட்ட காலத்தில் வட மாகாணத்தில் அதிவேகமாக பரவியுள்ளது. போதைப்பொருள் பாவனை மற்றும் அதற்கு அடிமையாதல், சமூக ஒற்றுமை மற்றும் முன்னேற்றத்தின் மிகப்பெரும் எதிரியாகின்றது.

மேலும் பாரிய சமூகச் சீரழிவுகளான குற்றச்செயல்கள் அதிகரித்தல், பொதுச்சுகாதார சீர்கேடு, தனிமனித ஒழுக்கவீனம், பட்டினி, நோய்களின் பெருக்கம் மற்றும் குடும்பங்களின் சிதைவு போன்றவற்றிற்கு மூலகாரணமாகின்றது. ஒருநபரின் தனிப்பட்ட சுகாதாரம், உடற்தகுதி, உள நலன், பொருளாதாரம் மற்றும் குடும்பம் - சமூகத்துடனான உறவு நிலை அனைத்தையும் பாதிக்கின்றது.

ஓர் நாட்டின் அணையா ஒளிவிளக்குகளான மாணவர்கள் போதைப்பொருட்களுடன் கைதுசெய்யப்பட்டமையானது மிகுந்த மனவருத்தத்தை தருவதுடன்,இளையோர் கண்மூடி திசைதெரியா வழியில் சென்று கொண்டிருப்பதை கட்டியம் போட்டுக் காட்டுகிறது.கலாசாரம், கல்வி இரண் டும் இரு கண்களெனக் கொண்ட வடமாகாண சமூகக் கட்டமைப்பு படிப்படியாகப் பார்வை இழந்து செல்வதன் இன்னோர் நிகழ்வே மேற்கூறிய மாணவர்களின் கைதாகும்.

மதுபானம் புகைப்பாவனைக்கு அப்பால் பல வகையான போதைப்பொருட்கள் உலக சந்தையிலும், இலங்கையிலும் காணப்படுகின்ற போதும் கஞ்சா, ஹெரோயின் வடமாகாணத்தில் முதன்மையானதாக காணப்படுகிறது.


1- பாதாள உலகக்குழு வினர்.

2-போதைக்கு அடிமை யானவர்கள்.

மேற்கூறப்பட்ட இருபிரிவினருக்கும் இடையிலான முகம் புலப்படாது வடிவமைக்கப்பட்ட சீரான கட்டமைப்பு மற்றும் வலையமைப்பினூடாக போதைப் பொருள் விநி யோகிக்கப்படுகிறது. நபர்களின் நேரடி பிரசன்னம் அற்ற வகையில் போதைப் பொருள் விநியோகம் இடம் பெறுகின்றமை அவர்களை அடையாளம் காண்பதில் பொலிஸாருக்கு பெரும் தலையிடியாக உள்ளது.

போதைப்பொருள் முகவர்களால் சமூக,பொருளாதார மட்டத்தில் நலிவுற்றவர்களே குறிவைக்கப்படுகின்றார்கள். இக்கட்டமைப்பு கடுமையாக சிதைவடைந்துள்ள பிரதேசங்களில் கிளிநொச்சி முதன்மையாகவுள்ளமை முகவர்களுக்கு மிகவாய்ப்பாக அமைந்துள்ளது.மேலும், சமூகத்தில் இளை யோர் மற்றும் பாடசாலை மாணவர்கள் போதைப் பொருள் முகவர்களால் பிரதானமாக குறிவைக்கப்படுகிறார்கள் என அவர் குறிப்பிட்டார். (ஜ-4-315)

## திடீர் மின் துண்டிப்பு முழுமையான அறிக்கையின் பின்னரே நடவடிக்கை



(கொழும்பு)

நாடளாவிய ரீதியில் ஏற்பட்ட திடீர் மின்துண்டிப்பு தொடர்பில் ஆராய்வதற்காக நியமிக்கப்பட்ட குழுவினால் அதுபற்றி இடைக்கால அறிக்கை மாத்திரமே தற்போது சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மின் துண்டிப்பு ஏற்பட்டமைக்கான காரணம், இவ்வாறான நிலைமைமீண்டும் ஏற்படுவதைத் தடுப்பதற்காக மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள், தற்போது ஏற்பட்டுள்ள சிக்கலை திருத்தியமைப்பதற்கு முன்னெடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் ஆகியவையே உள்ளடக்கப்பட்டிருக்கின்றன.

ஆகவே முழுமையான அறிக்கை சமர்ப்பிக்கப்படும் வரையில் நாம் காத்திருக்க வேண்டும் என்பதுடன் இடைக்கால அறிக்கையிலுள்ள விடயங்கள் தொடர்பில் ஆராய்வதற்கு மின்சக்தி அமைச்சிற்கு கால அவகாசத்தைப் பெற்றுக்கொடுக்க வேண்டும் என்றும் அரசாங்கம் தெரிவித்துள்ளது.

அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பு நேற்று வியாழக்கிழமை கொழும்பிலுள்ள அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நடைபெற்றது.

இச்சந்திப்பின் போது அண்மையில் நாடளாவிய ரீதியில் ஏற்பட்ட திடீர் மின்துண்டிப்பிற்கான காரணம் என்னவென்பதைக் கண்டறிவதற்கான விசேட குழுவொன்று நியமிக்கப்பட்டிருந்த நிலையில், அவர்களால் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையில் ஒரு அதிகாரியின் கவனக்குறைவினாலேயே மின்துண்டிப்பு இடம்பெற்றதாக சுட்டிக்காட்டப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஜ-4)

## மரத்திலிருந்து பாய்ந்த சிறுத்தை இரு பெண்கள் வைத்தியசாலையில்

(கொழும்பு)

மரத்திலிருந்து சிறுத்தை ஒன்று பாய்ந்ததால் இருபெண் தொழிலாளர்கள் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் பொகவந்தலாவை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கிவ் தோட்டத்தில் பணிபுரிந்து கொண்டிருந்த பெண் தொழிலாளர்கள் மீது மரத்தின் மேல் இருந்த சிறுத்தை பாய்ந்ததால் அங்கு தொழில் புரிந்த பெண் தொழிலாளர்கள் இருவர் காயமுற்ற நிலையில் பொகவந்தலாவ கிராமிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

சிறுத்தையைக் கண்டு பயந்த அவர்கள் தப்பித்துக் கொள்ள முயற்சித்த வேளையில் இவர்கள் காயமடைந்ததாக கூறியதுடன், வனப்பகுதியில் உள்ள சிறுத்தைகள் ஏனைய வனவிலங்குகளை வேட்டையாடுவதினாலும் பெருந்தோட்டப் பகுதியில் அதிகளவு தேயிலை தோட்டங்கள் காடாகி வருவதாலும் இவ்வாறான சிறுத்தைகள், புலி ஏனைய வனவிலங்குகளினால் இவ்வாறான பாதிப்புகள் ஏற்படுவதாக குறித்த பெண் தொழிலாளர்கள் தெரிவித்தனர். (ஜ-4)

## மீனவர்களின் பிரச்சினைகள் தொடர்பில் கலந்துரையாடல்

(மன்னார்)

நாடளாவிய ரீதியில் சிறு மீனவர்கள் மற்றும் மீனவப் பெண்களின் சமூக, பொருளாதார சுற்றாடல் மற்றும் அரசியல் நிலைமைக்குள் நீலப் பொருளாதாரத்தின் தாக்கம் மற்றும் அதன் நிலைபேறு தொடர்பான விடயங்களை மன்னார் மாவட்ட ரீதியில் இயங்கும் மீனவ பெண்கள் குழு மற்றும் மீனவர்களுக்கு தெளிவுபடுத்தும் கலந்துரையாடல் நேற்று முன் தினம் புதன்கிழமை தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கத்தின் ஏற் பாட்டில் அதன் மன்னார் இணைப்பாளர் பெனடிற் குரூஸ் தலைமையில் இடம் பெற்றது.

குறித்த கூட்டத்தில் சட்ட விரோத மீன்பிடி இயற்கையான வளங்களை சூறையாடுதல், கடல் ஆய்வுகள், மணல் ஆய்வுகள் தொடர்பான விடயங்களால் ஏற்படும் ஆபத்துக்கள் தொடர்பாக ஆராயப்படாததுடன் இவ்வாறன செயற் பாடுகளால் ஏற்படக்கூடிய குறுகிய கால மற்றும் நீண்ட காலப்பிரச்சினைகள் தொடர்பாக விரி வாக கலந்துரையாடப்பட்டது

இக் கலந்துரையாடலில் ஆசிய நாடுகளை சேர்ந்த இந்தோனேசியா, தாய்லாந்து, இந்தியா, பங்களாதேஷ் போன்ற நாடுகளை சேர்ந்த பிரதிநிதிகள் இணையத்தளத்தின் ஊடாக கலந்து கொண்டு கருத்துக்களையும் விரிவுரைகளையும் பகிர்ந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. (ஜ-285)

## மோதலில் இருவர் காயம்

(சாவகச்சேரி)

கொடிகாமம் பகுதியில் நேற்று முன்தினம் புதன் கிழமை இரவு இடம்பெற்ற மோதல் சம்பவத்தில் இருவர் காயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இச் சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது.

வீதியால் சென்ற இளைஞனை மற்றொரு இளைஞன் வழிமறித்து தாக்கியுள்ளார். இதன் போது தாக்குதலுக்கு இலக்கான வரும், தாக்குதல் நடத்திய வரும் காயமடைந்த நிலையில் சிகிச்சைக்காக சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இதில் வெள்ளாம் போக்கட்டி மற்றும் கொடிகாமம் நாவலடிப் பகுதியைச் சேர்ந்த 17மற்றும் 18 வயதான இரு இளைஞர்களே காயமடைந்த நிலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். (ஜ-30)

# இராசிபலன்

**28.08.2020**
**ஆவணி 12, வெள்ளிக்கிழமை**
**தசமி முற்பகல் 11.44 மணிவரை**
**மூலம் பிற்பகல் 4.10 மணிவரை**
**சுபநேரம் 6.05-7.35 மணிவரை**
**இராகுகாலம் 10.35-12.05 மணிவரை**
**சந்திராஷ்டமம் -கார்த்திகை, ரோகினி**

வளவன்

**மேஷம்** — அச்சுறுத்தல்கள் அகன்று ஆனந்தம் கூடும் நாள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், வீட்டை அழகாக வைத்தி ருப்பதில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**ரிஷபம்** — உறவினர், நண்பர்களை அனுச ரித்துச் செல்வது நல்லது, வெளியூர் பய ணங் களால் மன சேர்வு ஏற்படலாம், உடல் நலன் பற்றிய கவலை உருவாகி மறையும்.

**மிதுனம்** — விருந்தினர்களின் வருகையால் குடும் பத்தில் கலகலப்பான சூழ்நிலை உரு வாகும், நண்பர்கள் நம்பிக்கைக்குரிய வர்களாக நடந்து கொள்வர், போசன சுகமுண்டு.

**கடகம்** — பழைய கடன்களை அடைக்க புதிய வழியைக் கையாள்வீர்கள், பகை யொன்று நட்பாகலாம், செய் தொழில் மேன்மை யுண்டு, எடுத்த காரியங்கள் எளிதில் கைகூடும்.

**சிம்மம்** — அதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள் வர், உதிரி வருமானங்கள் வந்து சேரலாம், பிரியமானவர்களின் சந்திப்பு இடம் பெறலாம், வழிபாட் டுச் சிந்தனை மேலோங்கும் நாள்.

**கன்னி** — விரதம் வழிபாடுகளில் நம்பிக்கை கூடும்நாள், இல்லத்தில் சுகங்களும், சந் தோசங்களும் அதிகரிக்கும் நாள், சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு.

**துலாம்** — உறவினர் வழியில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கலாம், நீண்ட நாளைய விருப்ப மொன்று நிறை வேறும் வாய்ப்புண்டு, நல்லவர்க ளின் தொடர்புகள் அதிகரிக்கும்.

**விருச்சிகம்** — தொழில் வளர்ச்சி கூடும் நாள், வாக்கு மேன்மையுண்டு, அனைத் திலும் வெற்றி பெற அம்பிகையை வழிபட வேண்டிய நாள், நண்பர்க ளின் ஒத்துழைப்பு கிடைக்கும்.

**தனுசு** — விருப்பங்கள் நிறைவேற விநாய கரை வழிபட வேண்டிய நாள், சவால் களை சாமர்த்தியமாகச் சமாளிப்பீர் கள், உடல்நலனில் கவனம் தேவை, வழி பாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள்.

**மகரம்** — குடும்ப ஒற்றுமைக்கு பெரியவர்க ளின் ஆலோசனையைச் கேட்டு நடப்பது நல்லது, தொழிலை விரிவுபடுத்தும் எண்ணம் மேலோங்கும் நாள்.

**கும்பம்** — எடுத்த காரியத்தில் எளிதில் வெற்றி கிடைக்கும், குடும்பத்தில் மகிழ்ச்சி கூடும் நாள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், செவி குளிரும் செய்திகள் வந்து சேரலாம்.

**மீனம்** — மற்றவர்கள் மத்தியில் உங்களின் மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், தொழில் வளர்ச்சி மேலோங்கும் நாள், சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு.

**உனது உடலும், உயிரும் நலமுடன் வாழ உன் பாவத்தை விட்டுவிடு**

# தனி நபரின் தவறினாலே நாடுமுழுவதும் மின் தடை!

## 10 நாட்களின் பின்னர் கசிந்த தகவல்

(கொழும்பு)

கெரவலபிட்டிய உப மின்னுற் பத்தி நிலையத்தில் பணியாற்றும் ஊழியர் ஒருவரின் தவறுதலாலே நாடளாவிய ரீதியில் மின்சார விநியோகம் தடைப்பட்டுள்ளமை உறுதி செய்யப்பட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பில் ஆராய நியமிக்கப்பட்ட குழுவின் விசாரணைகளில் இது உறுதி செய்யப்பட்டுள்ளது.

கெரவலபிட்டி க்றீட் உப மின்னுற்பத்தி நிலையத்தில் ஏற்பட்ட கோளாறு காரண மாக நுரைச்சோலை மின் னுற்பத்தி செயற்பாடுகளுக்கும் தடங்கல் ஏற்பட்டது என மின் சக்தி அமைச்சின் உயர் அதி காரி ஒருவர் தெரிவித்தார்.

இதனாலேயே மின்னுற் பத்தி நிலையங்கள் இரண்டும் ஒரே சந்தர்ப்பத்தில் செயலி ழந்தன எனவும் அது குறித்து ஆராய நியமிக்கப்பட்ட குழுவின் அறிக்கையில் தெரிவிக்கப்பட் டுள்ளது.

கடந்த 17 ஆம் திகதி நாடு முழுவதும் மின்சாரம் துண்டிக் கப்பட்டமை தொடர்பில் விசா ரணை செய்வதற்காக விடயத் துக்குப் பொறுப்பான அமைச்சர் டலஸ் அழகப்பெருமவினால் பேராசிரியர் ராகுல அத்தலகே தலைமையில் குழுவொன்று நியமிக்கப்பட்டது.

9 பேரைக் கொண்ட இந்தக் குழுவின் விசாரணை அறிக்கை அமைச்சர் டலஸ் அழகப்பெரும விடம் கடந்த திங்கட்கிழமை கையளிக்கப்பட்டது. (ஐ-4)

## சீருடை வவுச்சருக்கான செல்லுபடி காலம் நீடிப்பு

(கொழும்பு)

அனைத்து அரசா ங்க பாடசாலைகளி னதும்முதலாம்ஆண்டு மாணவர்களுக்காக வழங்கப்பட்ட 2020 ஆம் ஆண்டுக்கான பாடசாலை சீருடை வவுச்சர்களின் செல் லுபடியாகும் காலம் நீடிக்கப்பட்டுள்ளது.

கல்வி அமைச்சு நேற்று வெளியிட்டு ள்ள விசேட ஊடக அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப் பட்டுள்ளது.

முதலாம் ஆண்டு மாணவர்களுக்காக வழங்கப்பட்ட 2020 ஆம் ஆண்டுக்கான பாடசாலை சீருடை வவுச்சர்களின் செல் லுபடியாகும் காலம் எதிர்வரும் 31ஆம் திகதியுடன் நிறைவ டையவுள்ள நிலை யில், எதிர்வரும் செப் டெம்பர் 30 ஆம் திகதி வரை நீடிக்க கல்வி அமைச்சு தீர் மானித்துள்ளது.(ஐ-4)

## 3 புதிய பாலங்கள்


(கொழும்பு)

3 மேம்பாலங் களை அமைப்பதற்கு அமைச்சரவை உத் தரவு வழங்கியுள் ளது. ஸ்ரீ உத்ரானந்த மாவத்தையினூடாக காணப்படும் ரயில் தண்டவாளங்களு க்கு மேலாக குறித்த 3 மேம்பாலங்களை அமைப்பதற்கு தீர் மானிக்கப்பட்டுள் ளது.

கொழும்பு கொம் பனித் தெருவில் உள்ள புகையிரத நிலையத்திற்கு அரு கில் இந்த ரயில் தண் டவாளங்கள் உள் ளமை குறிப்பிடத்தக் கது. (2)







யாழ். மாநகர சபையின் சுகாதார பிரிவினரின் அறுவுறுத்தலில் யாழ்.பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட ஜே/81 கொட்டடி மீனாட்சிபுரம் கிராமத்தில் டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டம் பொதுமக்கள் மற்றும் இராணுவத்தினரின் பங்குபற்றுதலில் நேற்று முன்னெடுக்கப்பட்டது.

# நல்லூர் மந்திரிமனையை பாதுகாக்க நடவடிக்கை

(குப்பிழான்)

யாழ்.மாநகரசபையின் மாதாந்த அமர்வு சபை முதல்வர் இம்மானுவேல் ஆனல்ட் தலைமையில் கடந்த செவ்வாய்க் கிழமை இடம்பெற்றது.

மேற்படி அமர்வில் கடந்த ஜூலை மாதம் முதலாம் திகதி யாழ்.மாநகர சபையின் மாதாந்த அமர்வு இடம்பெற்ற போது நல்லூர் மந்திரிமனையில் குடும்பமொன்று அத்துமீறிக் குடியிருந்தமையைக் கருத்திற் கொண்டும் யாழ்.மாநகர சபைக்குள் காணப்படும் மரபுரிமைச் சொத்துக்களைப் பாதுகாக்க வேண்டுமென்ற அடிப்படையில் நல்லூர் மந்திரிமனைக்குள் அத்துமீறி நுழைவதைத் தடை செய்யும் வகையிலும் யாழ்.மாநகரசபை மந்திரிமனைக்கு முன்பாக உடனடியாக அறிவித்தல் காட்சிப்படுத்த வேண்டுமெனவும் யாழ்.மாநகர சபைக்குள் காணப்படும் மரபுரிமைகளைப் பாதுகாக்கும் வகையில் முன்னொரு காலத்திலிருந்த மரபுரிமைக் கழகத்தை மீண்டும் நிறுவுவதற்கு மாநகர சபை நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் தீர்மானமொன்று கொண்டுவரப்பட்டது.

குறித்த தீர்மானம் சபை உறுப்பினர்கள் அனைவராலும் ஏகமனதாக ஏற்றுக் கொள்ளப்பட்ட போதிலும் தீர்மானம் நடைமுறைப்படுத்தப்படவில்லை எனத் தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் உறுப்பினர் வரதராஜன் பார்த்தீபன் மாநகர சபை முதல்வரின் கவனத்திற்கு கொண்டு வந்தார்.

இந்நிலையில் குறித்த தீர்மானம் பதின்னான்கு நாட்களில் நடைமுறைக்கு வந்திருக்க வேண்டுமெனச் சுட்டிக் காட்டிய யாழ்.மாநகர சபை முதல்வர் நல்லூர் மந்திரிமனைக்குள் அத்துமீறி நுழைவதைத் தடை செய்யும் வகையிலான அறிவித்தலை உடனடியாக காட்சிப்படுத்துமாறும் மாநகர சபையின் அதிகாரிக்குப் பணிப்புரை விடுத்தார். (5-18)

# வடந்தை நூலுக்கான ஆக்கங்கள் கோரல்-2020

(யாழ்ப்பாணம்)

பண்பாட்டலுவல்கள்திணைக் களத்தினால் வருடந்தோறும் வெளியிடப்பட்டு வருகின்ற வடந்தை பண்பாட்டு நூலுக்கான ஆக்கங்கள் இவ்வருடம் "வடக்கின் பண்பாட்டுச் சுவடுகள்' என்னும்பரப்பினை அடிப்படையாகக் கொண்டுவெளியிடப்படவுள்ளது.

இந்நூலில் கலை, பண்பாடு, தொல்லியல், சமூகவியல், மானிடவியல், ஆன்மீகம், வரலாறு போன்ற துறைகளை உள்ளடக்கிய ஆக்கங்கள் யாவும் எதிர்வரும் 30.09.2020 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கும் வகையில் உதவிப்பணிப்பாளர், பண்பாட்டலுவல்கள் திணைக்களம், வடக்கு மாகாணம், செம்மணி வீதி, நல்லூர், யாழ்ப்பாணம் என்ற அலுவலக முகவரிக்கு நேரடியாகவோ அல்லது தபால் மூலமாகவோ அல்லது npc.culture@yahoo.com என்ற மின்னஞ்சல் மூலமாகவோ அனுப்பி வைக்குமாறு வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்கள பதில் உதவிப் பணிப்பாளர் திருமதி சுஜீவா சிவதாஸ் அறிவித்துள்ளார்.(5)

# கட்டணக் கழிவு வழங்குமாறு பிரதேச சபையிடம் கோரிக்கை

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகரசபையின் நிர்வாகத்திற்குட்பட்ட இறைச்சிக் கடைகளைக் குத்தகைக்கு பெற்றவர்கள் தமக்கு இரண்டு மாத கட்டணக் கழிவு வழங்குமாறு நகரசபையிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கொரோனா அச்ச சூழ்நிலை காரணமாக இறைச்சிக் கடைகள் மூடப்பட்ட நாட்களைக் கணித்து நகரசபையினர் விலக்களிப்பு வழங்கிய போதிலும் குத்தகைக்காரர்கள் தமக்கு ஏப்ரல் மற்றும் மே ஆகிய இரு மாத காலம் முழுமையாக வாடகையை விலக்களிப்புச் செய்யுமாறு கோரியுள்ளனர்.(5-4-30)

# திடீர் சுற்றிவளைப்பில் இருவர் கைது

(கரணவாய்)

துன்னாலை - குடவத்தை பகுதியில் இராணுவம் மற்றும் பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் இணைந்து மேற்கொண்ட திடீர் சுற்றிவளைப்பில் இருவர் கைது செய்யப்பட்டதாக நெல்லியடி பொலிஸார் தெரிவித்தனர். நீதிமன்றத்தினால் பிடியாணை பிறப்பிக்கப்பட்டவர்களை கைது செய்வதற்காகவே நேற்று வியாழக்கிழமை குறித்த சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டது.

இச்சுற்றிவளைப்பு நேற்று அதிகாலை 5 மணியிலிருந்து காலை 6 மணி வரை இடம் பெற்றது. இதில் திருட்டுச் சம்பவங்களுடன் தொடர்புடைய இருவரே கைது செய்யப்பட்டனர். (5-4-8-60)

# குருவிக்காட்டில் சிரமதானம்

(சாவகச்சேரி)

சரசாலை-குருவிக்காட்டு பகுதியில் நாளை 29 ஆம் திகதி சனிக்கிழமை காலை மாபெரும் சிரமதானம் ஒன்றினை சாவகச்சேரி பிரதேச சபையினர் முன்னெடுக்கவுள்ளனர்.

சாவகச்சேரி பிரதேசசபை எல்லைக்குட்பட்ட குருவிக்காட்டு சூழலில் அளவுக்கதிகமாக பிளாஸ்டிக், பொலித்தீன் உள்ளிட்ட கழிவுப் பொருட்கள் தொடர்ச்சியாக கொட்டப்படுவதாகவும் இதனால் அவ்விடத்தில் சுகாதார சீர்கேடு ஏற்படுவதாகவும் சபை உறுப்பினர்களால் சுட்டிக் காட்டப்பட்டு வந்த நிலையில் இச் சிரமதானம் முன்னெடுக்கப்படவுள்ளது.

இச் சிரமதான நிகழ்வில் விதைகளின் விருட்சம், பசுமை நிழல்கள் உள்ளிட்ட இயற்கையைப் பாதுகாக்கும் அமைப்புக்களையும் இணைத்துள்ளது.

அண்மையில் சாவகச்சேரி பிரதேச சபை குருவிக் காட்டினை மக்களுக்கான சமுதாயக் காடாகப் பிரகடனப்படுத்தியது.

அத்துடன் வனவளத் திணைக்களத்தினரும் குருவிக்காட்டு பகுதியை எல்லைப் படுத்தி மரங்களைப் பாதுகாக்கும் முயற்சியில் ஈடுபட்டு வருகின்றனர்.

896 ஹெக்டேயர் நிலப்பரப்பைக் கொண்ட குருவிக்காடு சாவகச்சேரி பிரதேசசபை மற்றும் கரவெட்டி பிரதேசசபை ஆகியவற்றின் ஆளுகைக்குட்பட்டுக் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (5-4-30)

# விண்ணப்பங்கள் கோரல்

(யாழ்ப்பாணம்)

இலங்கைத் திறந்த பல்கலைக்கழக யாழ்ப்பாணப் பிராந்திய நிலையத்தில் பணியாற்றுவதற்காக நிகழ்ச்சித்திட்ட உதவியாளருக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. விண்ணப்பதாரிகள் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் இளமாணிப்பட்டத்தைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

அத்துடன் தகவல் தொழில்நுட்பத்தில் சிறப்புத்தேர்ச்சி பெற்றிருத்தல் விசேட தகைமையாகக் கொள்ளப்படும்.


விண்ணப்பிக்க விரும்பும் விண்ணப்பதாரிகள் சுயவிபரக் கோவையை எதிர்வரும் 5 ஆம் திகதிக்கு முன்னர் adjaf@ou.ac.lk எனும் மின்னஞ்சலுக்கு அல்லது உதவிப்பணிப்பாளர் இலங்கைத்திறந்த பல்கலைக்கழகம், யாழ்ப்பாணப் பிராந்திய நிலையம், பிறவுண் வீதி, கொக்குவில் எனும் முகரிக்கு பதிவுத் தபால்மூலமோ அல்லது நேரிலோ அனுப்பி வைக்குமாறு யாழ். பிராந்திய நிலைய உதவிப் பணிப்பாளர் கே.கந்தவேள் அறிவித்துள்ளார். (5)

# இரதோற்சவம்

(யாழ்ப்பாணம்)

இருபாலை கிழக்கு கேணிக் குளம்பதி அருள்மிகு லிங்கப் பிள்ளையார் ஆலய வருடாந்த மஹோற்சவம் கடந்த 22 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது.

இம்மஹோற்சவத்தில் நாளை மறுதினம் 30 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணியளவில் தேர்த்திருவிழாவும் மறுநாள் 31 ஆம் திகதி திங்கட்கிழமை தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறவுள்ளன. (5)



குருநகர் புதிய பூங்கா வீதி மற்றும் குறுக்கு வீதிகள் மாநகர சபை உறுப்பினர் செ.சத்தியசேகரனின் நிதியொதுக்கீட்டில் புனரமைப்புச் செய்யப்பட்டன.

(படம்:-குருநகர் செய்தியாளர்)

# சப்பறம் வெள்ளோட்டம்

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் மேற்கு அருள்மிகு மஞ்சவனப்பதி முருகன் ஆலய வருடாந்த மஹோற்சவம் கடந்த 16 ஆம் திகதி ஆரம்பமாகி நடைபெற்று வருகிறது.

இம்மஹோற்சவத்தில் எதிர்வரும் முதலாம் திகதி காலை 8 மணியளவில் தேர்த்திருவிழாவும் மறுநாள் 2 ஆம் திகதி புதன்கிழமை காலை 9 மணியளவில் தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறவுள்ளன.

இதில் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை இரவு 7.35 மணியளவில் சப்பற வெள்ளோட்டம் இடம்பெறும். (5)



திருமதி ஜெயராணி நந்தகுமார் (M.Phil) எழுதிய யாழ்ப்பாண மூலிகைத் தாவரங்கள் என்னும் நூல் வெளியீடு அண்மையில் நல்லூரில் நடைபெற்றது.

# 'நல்ல சுபீட்சத்தின் நோக்கு' வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்த அரசாங்கத்துடன் ஒன்றிணையுங்கள்



## இடைக்கால கணக்கறிக்கை சமர்ப்பித்து நிதியமைச்சர் உரை

(கொழும்பு)

நல்ல சுபீட்சத்தின் நோக்கு என்கின்ற வேலைத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு இந்த அரசாங்கத்துடன் ஒன்றிணையுமாறு பிரதமரும் நிதியமைச்சருமான மகிந்த ராஜபக்ஷ வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இடைக்கால கணக்கறிக்கையை பாராளுமன்றில் நேற்று வியாழக்கிழமை சமர்ப்பித்து உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், "கடந்த பெப்ரவரி மாதத்தில் கடன்களை செலுத்துவதற்கு கோரியிருந்தேன். ஆனால் அன்று எதிர்க்கட்சி அதற்கு இடையூறு செய்தது. இதனால் தாமதம் ஏற்பட்டது.

இந்தப் பின்னணியில்தான் 2020 ஆம் ஆண்டுக்கான குறைநிரப்பு பிரேரணை ஒன்றை சமர்ப்பிக்க வேண்டியுள்ளது.

இவ்வாண்டு செப்டெம்பரில் இருந்து டிசெம்பர் வரையான நான்கு மாதங்களுக்கு அரசாங்க செலவுகளைச் செய்வதற்கு 1900 பில்லியன் ரூபா ஒதுக்குவதற்கும் அதற்காக 1300 பில்லியன் ரூபா கடன் எல்லையை அங்கீகரிப்பதற்காகத்தான் இந்த குறை நிரப்பு பிரேரணை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

இந்த எல்லா குறை நிரப்பு பிரேரணையும் 2020 ஆம் ஆண்டுக்கான ஒதுக்கீட்டுச் சட்டத்தின் மூலம் நாங்கள் எதிர்காலத்தில் சமர்ப்பிப்போம்.

கடந்த ஆண்டு செலுத்தப்படாத பட்டியலை செலுத்துவதற்கு பெருமளவு தொகை தேவைப்படுகிறன்றது. இதன்படி அரசாங்கத்தின் செலவு ஓரளவுக்கு முகாமைத்துவம் செய்யப்பட்டுள்ளது.

எதிர்காலத்தில் அதிக பொருளாதார வளர்ச்சியை அடைந்து அரசாங்கத்தின் வரவு-செலவுத்திட்ட துண்டு விழும்தொகையை குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

இதன்படி முதலீட்டு மேம்பாட்டை செய்வதற்கு அடிப்படையிலேயே நடவடிக்கை எடுப்போம். அரசாங்கத்தின் செலவைக் குறைத்து பொருளாதார வளர்ச்சியை மேம்படுத்திக்கொள்ள முடியும் என்பது எமது நம்பிக்கையாக உள்ளது.

நாங்கள் கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றுகின்ற அரசாங்கமாக இருக்கின்றோம். தேர்தலுக்கு முன்னர் கொடுத்த வாக்குறுதிகளாக ஒரு இலட்சம் வேலை வாய்ப்புக்களை தேர்தல் முடிந்து இரண்டு வாரங்களுக்குள் செய்திருக்கின்றோம்.

இந்த அரசாங்கத்தை பொறுப்பேற்ற போது குண்டூசியில் இருந்து பெரிய பொருட்கள் வரை எல்லாமே இறக்குமதி செய்யப்பட்டன. புளி மட்டும் அல்லாது சுதேச கைத்தொழிலாளர்களுக்கு பாதிப்பு ஏற்படும் வகையிலே ஊதுபத்தி, மஞ்சள், மிளகு கூட இறக்குமதி செய்யப்பட்டன. பட்டங்கள், வெசாக் கூடுகள் கூட இறக்குமதி செய்யப்பட்டன. இதன்மூலம் உள்நாட்டு கைத்தொழிலாளர்கள் ஊக்கமிழக்கச் செய்யப்பட்டனர்.

கடந்த காலங்களிலே எமது வெளிநாட்டு கையிருப்புக்கள் உண்மையிலேயே தேவையில்லாத பொருட்களை இறக்குமதி செய்வதற்குத்தான் பயன்படுத்தப்பட்டிருக்கின்றன. இந்தப் பின்னணியில் எமது செலாவணி விழுக்காடு தேவையற்ற விதத்திலே ஏற்ற இறக்கம் கண்டன. இதன் விளைவை இன்று நாம்பார்க்கின்றோம்.

செலாவணி விழுக்காடை உறுதியான மட்டத்திலே பேணுவதற்கு எங்களால் முடிந்திருக்கின்றது. எமது உள்நாட்டு தொழில் முனைவோர்கள் கைத்தொழிலாளர்கள் என்று எல்லோரையும் வலுவூட்ட வேண்டியிருக்கின்றது. அதற்கு ஜனாதிபதி உள்ளிட்ட அரசாங்கம் இந்தப் பொறுப்பை ஏற்றிருக்கின்றது. நல்ல புரிதலுடன் பணியாற்றிக்கொண்டிருக்கின்றது.

நல்ல சுபீட்சத்தின் நோக்கு என்கின்ற வேலைத் திட்டத்தை யதார்த்தமாக்குவதற்கு இந்த அரசாங்கத்துடன் ஒன்றிணையுமாறு அனைவரிடமும் வேண்டுகோள் விடுக்கின்றோம்" என அவர் தெரிவித்துள்ளார். (ஐ-2)


### யாழ்.கிளிநொச்சியில் காணி தேவை

யாழ்.நகர் அண்மித்த பகுதிகளில் 1.5 - 03 பரப்புக் காணி / வீட்டுடன் காணியும் பலாலியை அண்மித்த பகுதிகளில் 10 - 25 பரப்பு செம்மண் தோட்டக்காணியும் தேவை.

மேலும் கிளிநொச்சி நகர் - A9 வீதியில் கடை / காணியுடன் இதர பகுதிகளில் மேட்டுக்காணி, வயற் காணியும் விலைக்குத் தேவை.

தொடர்பு:-
076 569 5684

(3708)


# கட்டளையை மீறிப் பயணித்த மினிபஸ் மீது துப்பாக்கிப் பிரயோகம்

(கொழும்பு)

கட்டளையை மீறி பயணித்த மினிபஸ் மீது திவுலப்பிட்டிய பொலிஸார் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டுள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது, நேற்று முன்தினம் அதிகாலை திவுலப்பிட்டி தனகஹ சந்தியில் திவுலப்பிட்டிய பொலிஸார் வீதிச் சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தவேளை அவ்வீதியினூடாக வருகைதந்த மினிபஸ் பொலிஸாரின் கட்டளையை மீறிப் பயணித்த போது பொலிஸாரால் குறித்த மினிபஸ் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்நிலையில் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தால் படுகாயமடைந்த நபரொருவர் கொழும்பு தேசிய வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளதுடன் இச்சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ-6)


## மணிவிழா நாயகனை வாழ்த்துகிறோம்

### துரைராஜசிங்கம் இராஜன்



நல்லூர் சைவ மகாசபையின் தலைவராக இருந்து மகத்தான சேவையாற்றிய எம் தலைவர் துரைராஜசிங்கம் இராஜன் தனது அரச மக்கள் சேவையில் மணிவிழா காண்பதையிட்டு வாழ்த்துவதுடன் மேலும் தேக ஆரோக்கியத்துடன் நீண்டகாலம் இருந்து பல சேவைகள் புரிய வாழ்த்தும்

சைவ மகாசபை உறுப்பினர்கள்,
நல்லூர்.

(3695)



## கல்யாணமாலை

### சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
| --- | --- |
| பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: ரோகினி<br>கி.பா: செவ் 1 இல்<br>தகைமை/தொழில்: பட்டதாரி நிரந்தர அலுவலக உதவியாளர் (அரச)<br>எதிர்பார்ப்பு:அரச உத்தியோகமுள்ள பெண்<br>தொ.இ: B/11115 | பிறப்பு: 1997 இந்து<br>நட்சத்திரம்: விசாகம் 3<br>கி.பா: 50 செவ் 3 இல்<br>உயரம்: 157cm<br>தகைமை/தொழில்: Master Diploma<br>எதிர்பார்ப்பு: வெளிநாட்டவர் மட்டும்<br>தொ.இ: G/11125 |
| பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்: கார்த்திகை 1<br>கி.பா: செவ் 5 இல்<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்: க.பொ.த.சா/த. கனடாவில் வேலை செய்கின்றார்<br>எதிர்பார்ப்பு: சாதாரண படித்த பெண்<br>தொ.இ: B/11116 | பிறப்பு: 1991 இந்து<br>நட்சத்திரம்: அச்சுவினி 3<br>கி.பா: செவ் 1 இல்<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்: AAT, B.Com following Cashier (Private)<br>எதிர்பார்ப்பு: உயர் தனியார். அரச உத்தியோகம் பார்க்கும் மணமகன்<br>தொ.இ: G/11127 |
| பிறப்பு: 1990 இந்து<br>நட்சத்திரம்: பூரம்<br>கி.பா: 44 செவ் 9 இல்<br>தகைமை/தொழில்: க.பொ.த.உ/த. சுவிஸில் வேலை செய்கின்றார்<br>எதிர்பார்ப்பு: படித்த பெண்<br>தொ.இ: B/11117 | பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: உத்திரட்டாதி<br>கி.பா: செவ் 3 இல்<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்: பட்டதாரி ஆசிரியர்<br>எதிர்பார்ப்பு: தகுந்த உத்தியோகமுள்ள மணமகன்<br>தொ.இ: G/11128 |
| பிறப்பு: 1992 இந்து<br>நட்சத்திரம்: திருவாதிரை 3<br>கி.பா: செவ் 9 இல்<br>உயரம்: 5'<br>தகைமை/தொழில்: HNDA in Tourism நிர்வாகப் பிரிவு<br>எதிர்பார்ப்பு: படித்த பெண் உத்தியோகம் விரும்பத்தக்கது.<br>தொ.இ: B/11119 | பிறப்பு: 1991 இந்து<br>நட்சத்திரம்: உத்தராடம் 3<br>கி.பா: 4 செவ் 10 இல்<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்: பட்டதாரி சட்டத்தரணி<br>எதிர்பார்ப்பு: தகுந்த வரன்<br>தொ.இ: G/11131 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.

# போதையை தடுக்க முனைந்த இளைஞனுக்கு வாள்வெட்டு;
# கிளிநொச்சியில் கவனயீர்ப்புப் போராட்டம்



(முறிகண்டி)
சட்டவிரோத மது உற்பத்தியைத் தடுக்க முயன்ற இளைஞரை தாக்கிய சம்பவத்தை கண்டித்து கிளிநொச்சியில் கவனயீர்ப்பு போராட்டம் ஒன்று நேற்று முன்தினம் முன்னெடுக்கப்பட்டது.

கரைச்சிப் பிரதேச செயலகத்திற்கு முன்பாக ஒன்று சேர்ந்த ஆர்வலர்கள் இப்போராட்டத்தை முன்னெடுத்தனர். இதன்போது கரைச்சிப் பிரதேச செயலாளர் பாலசுந்தரம் ஜெயகரன் போராட்டத்தில் ஈடுபட்டவர்களைச் சந்தித்தார்.

போதைப்பொருள் விற்பனை மற்றும் உற்பத்தியினால் அப்பகுதியில் உள்ள குடும்பங்கள் மற்றும் குடும்ப வாழ்வாதாரம் பாதிக்கப்படுகின்றமை தொடர்பில் பிரதேச செயலாளரின் கவனத்திற்கு கொண்டு செல்லப்பட்டதுடன் குறித்த சட்டவிரோத செயற்பாட்டை கட்டுப்படுத்த முற்பட்ட இளைஞர்கள் அச்சுறுத்தப்படுவது தொடர்பிலும், அண்மையில் ஒரு இளைஞன் தாக்கப்பட்டமை தொடர்பிலும் பிரதேச செயலாளரின் கவனத்திற்கு மக்கள் கொண்டு சென்றனர்.

தமது பிரதேசத்தில் காணப்படும் போதைப்பொருள் விற்பனையைக் கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கையினை மேற்கொள்வதற்கு உதவுமாறு மகஜர் ஒன்றையும் கையளித்தனர்.

இதன்போது ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்த பிரதேச செயலாளர்

போதைப்பொருளைக் கட்டுப்படுத்துவதற்கு சிரமங்களை எதிர்கொண்டுவரும் நிலையில் கிராம மட்டத்தில் மக்கள் விழிப்படைந்து ஒன்றுதிரண்டு நிற்பது மகிழ்வினைத் தருவதாகவும் அதன்மூலம் சமுதாயத்தில் காணப்படும் போதைப் பொருளைக் கட்டுப்படுத்த முடியும் என்ற நம்பிக்கை உள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இவ்வாறான நிலையில் குறித்த பிரதேசத்தில் காணப்படும் போதைப்பொருள் விற்பனை மற்றும் பாவனையை கட்டுப்படுத்துவதற்கான தம்மாலான முயற்சியை மேற்கொள்வதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்

தொடர்ந்து குறித்த ஆர்ப்பாட்டப் பேரணி கிளிநொச்சி மாவட்ட செயலகம்வரை சென்று அங்கு அரசாங்க அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரனைச் சந்தித்து மகஜர் ஒன்றினை கையளித்ததுடன், போதைப்பொருள் பாவனையால் பிரதேசத்தில் காணப்படும் சமூக, பொருளாதாரப் பிரச்சினைகள் தொடர்பில் அரசாங்க அதிபரின் கவனத்திற்கு கொண்டு வந்தனர். இதன்போது தமது பிரதேசத்தையும் வருங்கால சந்ததியின் எதிர்காலத்தையும் பாதுகாத்துத் தருமாறு அரசாங்க அதிபரிடம் கோரிக்கை விடுத்தனர்.

கடந்த 23 ஆம் திகதி 10 வீட்டுத்திட்டம் பகுதியில் பெருந்தொகை கசிப்பு உற்பத்தி தடுத்து நிறுத்தப்பட்டது. இந்த நிலையில் குறித்த சமூகப் பணியில் களமிறங்கிய இளைஞன் ஒருவர் வாள்வெட்டுக்கு இலக்கானதை அடுத்தே குறித்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (5-4-100)

# சௌபாக்கியா தேசிய உணவு உற்பத்தி
# மன்னாரில் வெற்றிகரம்

(மன்னார்)
சௌபாக்கியா தேசிய உணவு உற்பத்தி வேலை திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட விவசாய நடவடிக்கை தொடர்பாகவும் முன்னேற்றம் தொடர்பாகவும் ஆராயும் கூட்டம் மன்னார் அரசாங்க அதிபர் சி.ஏ.மோகன்றாஸ் தலைமையில் மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம் பெற்றது.

குறித்த கூட்டத்தில் மன்னார், நானாட்டான், முசலி, மாந்தை மேற்கு மற்றும் மடு ஆகிய 5 பிரதேச செயலகங்களின் பிரதேச செயலாளர்கள், மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர், திணைக்கள உயர் அதிகாரிகள், மன்னார் மாவட்ட விவசாய அமைப்புக்களின் பிரதிநிதிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்,

மன்னார் மாவட்ட பகுதியில் பிரதேச மட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட "சௌபாக்கியா" விவசாய நடவடிக்கை , மேட்டு நிலப் பயிர்ச்செய்கை மற்றும் உப பயிர்ச்செய்கை தொடர்பாக ஆராயப்பட்டது.

குறித்த சௌபாக்கியா உணவு உற்பத்தித் திட்டம் மன்னார் மாவட்டத்தில் வெற்றியளித்துள்ளதாக அரசாங்க அதிபர் தெரிவித்தார்.

குறித்த கூட்டத்தில் ஒவ்வொரு விவசாய நடவடிக்கைகள் தொடர்பாக தனித்தனியாக உற்பத்தி மற்றும் அறுவடை விறபனைகள் தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்பட்டது.

மேலும் குறித்த உணவு உற்பத்தி மாவட்ட மட்டத்தில் வெற்றி பெற்றதையடுத்து பனை, தென்னை,மரமுந்திரி செய்கையையும் முன்னெடுப்பதற்கான நடவடிக்கைகள் தொடர்பாகவும் ஆராயப் பட்டது. (5-4-285)



முல்லைத்தீவு மாவட்டத்தின் கரைதுறைப்பற்று பிரதேச சபையின் உறுப்பினர்கள் முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி எஸ்.லெனின்குமார் முன்னிலையில் பதவிவழி சமாதான நீதவானாக நேற்று முன்தினம் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டனர்.
(படங்கள்:-பனிக்கன்குளம் செய்தியாளர்)



திருந்திய தொழில்நுட்பத்துடனான பேண்தகு விவசாயத்தில் வயல் விழா என்னும் தொனிப் பொருளில் கண்காட்சி நேற்றுக் காலை முல்லைத்தீவு ஒட்டுசுட்டான் பகுதியில் அமைந்துள்ள மாவட்ட விவசாய பயிற்சி நிலையத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. முல்லைத்தீவு மாவட்ட பிரதி மாகாண விவசாயப் பணிப்பாளர் பூ.உகநாதன் தலைமையில் இடம்பெற்ற இக் கண்காட்சியில் விருந்தினர்களாக வடமாகாண விவசாய பணிப்பாளர் சிவகுமார் மற்றும் ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளர் த.அகிலன் ஆகியோர் கலந்து கொண்டனர். (படங்கள்:- பனிக்கன்குளம் செய்தியாளர்)

# விற்பனை நிலையத்தில் திருட்டு

(முறிகண்டி)
விவசாய விற்பனை நிலையத்தில் திருட்டுச் சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது. கிளிநொச்சி முழங்காவில் சந்தியில் அமைக்கப்பட்ட விவசாய விற்பனை நிலையம் நேற்று முன்தினம் நள்ளிரவு திருட்டு கும்பல் ஒன்றால் சூறையாடப் பட்டது. குறித்த வர்த்தக நிலையத்தில் 60 ஆயிரம் ரூபாய் பணம் மற்றும் சுமார் ஒரு இல ட்சத்து 50 ஆயிரம் ரூபா பெறுமதியான கூடிய விதை தானியங்கள் திருடப் பட்டுள்ளதாக உரிமையாளரினால் முழ ங்காவில் பொலிஸ் நிலைய த்தில் முறைப்பாடு செய்யப்பட் டுள்ளது. இதனை அடுத்து முழ ங்காவில் பொலிஸார் தடயவியல் பொலிஸாருடன் இணைந்து மேலதிக விசாரணைகளை மேற் கொண்டுவருகின்றனர் (5-4-100)

# வீதிப்புனரமைப்பு ஊழியர்
# தாக்கப்பட்டார்

(நெளுக்குளம்)
வவுனியா நெடுங்கேணி ஒலுமடு பகுதியிலுள்ள வீதி புனரமைக்கும் நிறுவன தொழிலாளர் மீது கடந்த செவ்வாய் இரவு நெடுங்கேணியில் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. இதில் காயமடைந்த குடும்பஸ்தர் நெடுங்கேணி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைகளுக்காக வவுனியா பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரிய வருகையில்,

குறித்த ஊழியர் கடந்த செவ்வாய் இரவு 6.45 மணியளவில் வீதி திருத்தும் பணி நடைபெற்றுக் கொண்டிருந்தபோது வாகனம் வழிமறிக்கப்பட்டு ஒரு வழிப்பயணம் மேற்கொள்ளுமாறு அறிவித்தார்.

சாரதி ஒருவர் குறித்த ஊழியரின் கருத்தை உள்வாங்காமல் தனது ஆட்டோவைச் செலுத்தியபோது இருவருக்கும் இடையே வாய்த்தர்க்கம் ஏற்பட்டது.

ஆட்டோ சாரதி தொலைபேசி அழைப்பின் மூலம் சிலரை அழைத்து ஊழியர் மீது தாக்குதல் நடத்தினார்.

இச்சம்பவத்தில் தலை யில் காயமடைந்த ஊழியர் நெடுங்கேணி வைத்தியசாலைக்கு அழைத்துச் செல்லப்பட்டார்.பின்னர் மேலதிக சிகிச்சைகளுக்காக அனுப்பப்பட்டார். இச்சம்பவத்தில் நெடுங்கேணி பெரியமடு பகுதியைச் சேர்ந்த குகமூர்த்தி துசிந்தன் வயது-34 என்பவரே காயமடைந்தவராவார்.

இச்சம்பவம் குறித்து பணியாளர் நெடுங்கேணி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டதையடுத்து பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (5-4-299)



கிளிநொச்சி முழுங்காவில் தனிமைப்படுத்தல் முகாமில் தனிமைப்படுத்தலை நிறைவு செய்த 60 பேர் நேற்று வெளியேறினர்.
(படம்-கண்டாவளை செய்தியாளர்)

# சஹ்ரான் தொடர்பான புலனாய்வு அறிக்கைகள்;
# மேலதிக தகவல்களை எவரும் கோரவில்லை



## நிலாந்த ஜயவர்த்தன சாட்சியம்

(கொழும்பு)

**2015 ஆம் ஆண்டு முதல் சஹ்ரான் ஹாசிம் தொடர்பாக 307 புலனாய்வு அறிக்கைகள் சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு அனுப்பிவைக்கப்பட்டதாக அரச புலனாய்வு சேவையின் முன்னாள் பணிப்பாளர் நிலாந்த ஜயவர்த்தன தெரிவித்துள்ளார்.**

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் குறித்து விசாரணை செய்யும் ஜனாதிபதி ஆணைக்குழு முன்னிலையில் 18 ஆவது நாளாகவும் சாட்சியமளிக்கும் போதே அவர் இதனை தெரிவித்தார்.

2015 ஆம் ஆண்டு முதல் சஹ்ரான் ஹாசிம் தொடர்பாக 307 புலனாய்வு அறிக்கைகள் அனுப்பி வைக்கப்பட்ட போதிலும் முன்னாள் பொலிஸ்மா அதிபரை தவிர வேறு எந்தவொரு அதிகாரியும் இதுதொடர்பான மேலதிக அறிக்கைகளை கோரவில்லை.

முன்னாள் பொலிஸ்மா அதிபர் மாத்திரம் ஓரிரு தடவைகள் மேலதிக அறிக்கைகளை கோரியதாகவும் அவர் தெரிவித்தார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் நடத்தப்பட்ட சந்தர்ப்பத்தில் ஒருசிலர் விடுமுறை பெற்று வெளிநாடுகளுக்கு சென்ற போதிலும் தாக்குதலை தடுப்பதற்காக தன்னாலான உயர்ந்தபட்ச நடவடிக்கைகளை மேற்கொண்டதாகவும் அரச புலனாய்வு சேவையின் முன்னாள் பணிப்பாளர் தெரிவித்தார்.

தேசிய புலனாய்வுப் பிரிவின் முன்னாள் தலைவர் சிசிர மெண்டிஸ் சார்பில் ஆஜரான ஜனாதிபதி சட்டத்தரணி சாணக்க ரணசிங்க சாட்சியாளரிடம் ஏப்ரல் 4 ஆம் திகதி கிடைத்த புலனாய்வு தகவல்களை பேச்சுவார்த்தைக்கு உட்படுத்தப்படாதிருந்ததன் காரணமாக இராணுவ புலனாய்வு பணிப்பாளர் சபை மற்றும் முப்படை தளபதிகள் அறிவுறுத்தப்படவில்லை என்பதை ஏற்றுக் கொள்வீர்களா? என கேள்வி எழுப்பினார்.

இதற்கு பதிலளித்த நிலாந்த ஜயவர்த்தன இராணு புலனாய்வு பிரிவை அறிவுறுத்தாமைக்கான பொறுப்பை தன்னால் ஏற்றுக்கொள்ள முடியாதென தெரிவித்தார்.

தான் கடமை ரீதியில் பாதுகாப்பு செயலாளர், பொலிஸ்மா அதிபர் மற்றும் தேசிய புலனாய்வு தலைவர் ஆகியோருக்கே அறிவிக்க வேண்டியதாகவும் அவர் தெரிவித்தார்.

ஜனாதிபதி சட்டத்தரணி கேள்வி எழுப்புகையில் ஏப்ரல் மாதம் 9 ஆம் திகதி நடைபெற்ற புலனாய்வு மீளாய்வு கூட்டத்தில் தற்போதைய பாதுகாப்பு நிலைமை குறித்து தெளிவுபடுத்துவதற்கும் அரச புலனாய்வு சேவையின் பணிப்பாளருக்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்ட போது ஏப்ரல் 4 ஆம் திகதி கிடைத்த தகவல்கள் தொடர்பாக பேச்சுவார்த்தைக்கு ஏன் உட்படுத்தவில்லையென கேள்வி எழுப்பினார்.

அதற்கு பதிலளித்த நிலாந்த ஜயவர்த்தன அச்சந்தர்ப்பத்தில் உயர் அதிகாரியாக இருந்த தேசிய புலனாய்வுப்பிரிவின் தலைவர் சிசிர மெண்டிஸ்'க்கு ஏப்ரல் 4 ஆம் திகதி தகவல்கள் குறித்து அறிவுறுத்தப்பட்டிருந்ததனால் புலனாய்வு மீளாய்வு கூட்டத்தில் அது மீளாய்வுக்குட்படுத்தப்படவில்லை என தெரிவித்தார்.

அப்போதைய தேசிய புலனாய்வுப் பிரிவின் தலைவர் சிசிர மெண்டிஸ் இவ்விடயங்கள் குறித்து கூடுதல் கவனம் செலுத்தியிருந்தால் குறித்த புலனாய்வு மீளாய்வு கூட்டத்தின் போது இதனை நிகழ்ச்சி நிரலில் சேர்ப்பதற்கு சந்தர்ப்பம் காணப்பட்டதாகவும் ஜயவர்த்தன மேலும் தெரிவித்தார். (ஜ-2)

---

## யாழ் கிரிக்கெட் சம்பியன் 2020 ஜொனியன்ஸ் கால் இறுதிக்கு தெரிவு

(யாழ்ப்பாணம்)

யாழ்.கிரிக்கெட் சம்பியன் 2020 தொடரின் 2 ஆவது சுற்றின் 11 ஆவது போட்டி கடந்த 16 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மகாஜனக கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

போட்டியில் யாழ்.ஜொனியன்ஸ் அணி ஸ்கந்தாஸ்ராார் அணியை 5 விக்கெட்டுக்களால் வெற்றி பெற்று கால் இறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய ஸ்கந்தாஸ்ராார் அணி 41 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 195 ஓட்டங்களை பெற்றது. போட்டியில் டனூஸன் 31 ஓட்டங்களையும் நிரோஸன் 83 ஓட்டங்களையும் புருசோத்தமன் ஆட்டமிழக்காது 28 ஓட்டங்களையும் பெற்றனர். களத்தடுப்பில் யாழ்.ஜொனியன்ஸ் அணியின் சன்சயன், லவேந்திரா, அபிநாஸ் ஆகியோர் 3 விக்கெட்டுக்களையும் பிருந்தாபன் ஒரு விக்கெட்டினையும் கைப்பற்றினர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய யாழ்.ஜொனியன்ஸ் அணி 31.5 ஓவர்களில் 5 விக்கெட்டுக்களை இழந்து 201 ஓட்டங்களுடன் வெற்றி பெற்றது.

போட்டியில் சன்சயன் 35 ஓட்டங்களையும் லதூஸன் 34 ஓட்டங்களையும் ஹரிப்பிரவின் 14 ஓட்டங்களையும் லவேந்திரா ஆட்டமிழக்காது 39 ஓட்டங்களையும் கிரிஷாந் ஆட்டமிழக்காது 26 ஓட்டங்களையும் சௌமியன் 12 ஓட்டங்களும் பெற்றனர். களத்தடுப்பில் ஸ்கந்தா அணியின் தனூஸன் 2 விக்கெட்டுக்களையும் கானுஜன், புருசோத்தமன் தலா ஒரு



விக்கொட்டினையும் கைப்பற்றினர். இப் போட்டியில் வெற்றி பெற்ற யாழ்.ஜொனியன்ஸ் அணி 3 ஆவது சுற்றில் கால் இறுதிப் போட்டியில் சென்றலைட்ஸ் அணியை எதிர்கொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (4)

---

## சீன வான்பரப்பிற்குள் அத்துமீறி நுழைந்த அமெரிக்க உளவுவிமானம்-சீனா கண்டனம்

(பீஜிங்)

சீன இராணுவம் பயிற்சியில் ஈடுபட்டிருந்த பகுதிக்குள் அமெரிக்காவின் யூ2 ரக உளவு விமானம் நுழைந்தது பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

உலகின் இரு பெரும் பொருளாதார நாடுகளான அமெரிக்காவும், சீனாவும் கீரியும், பாம்புமாக மோதி வருகின்றன.

வர்த்தகப்போர், தென் சீன கடல் விவகாரம், உய்கூர் இன முஸ்லிம்கள் மீதான அடக்குமுறை என ஒவ்வொன்றாக இரு நாடுகளின் உறவை பலவீனமாக்கிய நிலையில் கொரோனா வைரஸ் பிரச்சினை இரு நாடுகளுக்கு இடையில் தீரா பகையை உருவாக்கி உள்ளது.

இந்த நிலையில் சீனாவின் வடக்கு பகுதியில் போஹாய் வளைகுடாவுக்கும் மஞ்சள் கடலுக்கும் இடையில் உள்ள தென் சீன கடல் பகுதியில் சீன இராணுவம் நேற்றுமுன்தினம் போர் பயிற்சியில் ஈடுபட்டிருந்தது. சீனாவின் விமானம் தாங்கி போர்க்கப்பல்களில் உள்ள விமானங்களும், பீரங்கிகளும் கடலில் உள்ள இலக்குகளை குறிவைத்து சுடும் பயிற்சியில் ஈடுபட்டிருந்தன.

போர்ப்பயிற்சி நடந்த இந்த இடம் சீனாவின் ராணுவ பகுதி என ஏற்கனவே பிரகடனம் செய்யப்பட்டதாகவும் அதன்படி இந்த பகுதிக்குள் வேறு எந்த நாட்டின் விமானமும் நுழைவதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் சீன இராணுவம் பயிற்சியில் ஈடுபட்டிருந்த பகுதிக்குள் அமெரிக்காவின் யூ2 ரக உளவு விமானம் நுழைந்தது. சீனாவில் விமானம் தாங்கி போர்க்கப்பலுக்கு மேலே அமெரிக்காவின் உளவு விமானம் பறந்து சென்றது. இந்த விவகாரம் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

இது தொடர்பாக சீனா, அமெரிக்காவுக்கு கடும் கண்டனம் தெரிவித்துள்ளது. எனினும் இந்த விவகாரம் குறித்து அமெரிக்கத் தரப்பில் உடனடியாக எந்தவித கருத்தும் தெரிவிக்கப்படவில்லை. (2)

---

## வாழ்க்கைச் செலவு தொடர்பாக அமைச்சரவை உப குழு நியமனம்

(கொழும்பு)

வாழ்க்கைச் செலவு தொடர்பாக அமைச்சரவை உப குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது.

சந்தையில் நிலவும் கோரிக்கை மற்றும் விநியோக ஏற்ற இறக்கங்கள், காலநிலை தாக்கம், பருவகால உற்பத்திகள், தயாரிப்பாளர்களினால் இடம் பெறும் மாற்றம், சர்வதேச சந்தையில் விலைகள் போன்ற விடயங்கள் தொடர்பில் கவனம் செலுத்தி வாழ்க்கைச் செலவை நிலையானதாக முன்னெடுப்பதற்கு தேவையான கொள்கை மற்றும் நடைமுறைத்தீர்வை பெற்றுக் கொடுப்பதற்காக ஜனாதிபதியின் தலைமையிலும் பிரதமரினதும், வர்த்தக அமைச்சரினதும், விவசாய அமைச்சரினதும், கடற்றொழில் அமைச்சரினதும், பெருந்தோட்டத்துறை அமைச்சரினதும் அங்கத்துவத்துடனான வாழ்க்கைச் செலவு தொடர்புடனான அமைச்சரவை துணைக்குழுவை நியமிப்பதற்காக ஜனாதிபதி சமர்ப்பித்த பரிந்துரைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. இந்த துணைக்குழுவின் பணிகளுக்காக கீழ் குறிப்பிடப்பட்ட இராஜாங்க அமைச்சர்களின் பங்களிப்பை பெற்றுக் கொள்வதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

நெல் மற்றும் தானியம் சேதனப்பசளை உற்பத்தி உணவுப்பொருட்கள், மரக்கறி, பழங்கள், மிளகாய், வெங்காயம் மற்றும் கிழங்கு உற்பத்தி மேம்பாடு, விதை உற்பத்தி மற்றும் உயர் தொழில்நுட்ப விவசாய இராஜாங்க அமைச்சர், கூட்டுறவு சேவை, விற்பனை அபிவிருத்தி மற்றும் நுகர் வோர் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர், தெங்கு, கித்துள், பனை மற்றும் இறப்பர் உற்பத்தி அபிவிருத்தி மற்றும் அதனுடன் தொடர்புபட்ட விவசாயப் பொருட்கள் தயாரிப்பு மற்றும் ஏற்றுமதி விரிவாக்க இராஜாங்க அமைச்சர் ஆகியோரும் நியமிக்கப்பட்டுள்ளனர். (ஜ-4)

# உள்ளூராட்சி சபைகளின் நிர்வாகமும் பணிப்பொறுப்புகளும் - ஒரு தொகுப்பு

**04**

**கலாநிதி க.தவலிங்கம்**
தவிசாளர்–எல்லை நிர்ணய ஆணைக்குழு,
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.



**அரசியலமைப்புக்கான 13ஆவது திருத்தத்தின்படி நாட்டிலுள்ள சகல 9 மாகாணங்களுக்கும் மாகாண உள்ளூராட்சித் திணைக்களங்கள் உருவாக்கப்பட்டன. மேலும், மாகாண உள்ளூராட்சி திணைக்களத்தின் தலைமை நிர்வாகியாக மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் பதவி உருவாக்கப்பட்டு, மாகாண உள்ளூராட்சி ஆணையாளர்கள் 9 பேரும் மாகாண உதவி உள்ளூராட்சி ஆணையாளர்களும் நியமிக்கப்பட்டுள்ளனர்.**

தொடக்க காலத்தில் கொழும்பை மையப்படுத்தியதாக நடைமுறையிலிருந்த உள்ளூராட்சித் திணைக்களம் அரசியலமைப்புக்கான 13ஆவது திருத்தத்தின் பின் உள்ளூராட்சி விடயப் பரப்பு மாகாண சபைகளிடம் ஒப்படைக்கப்பட்டது. அதன்படி நாட்டிலுள்ள சகல 9 மாகாணங்களுக்கும் மாகாண உள்ளூராட்சித் திணைக்களங்கள் உருவாக்கப்பட்டன.

மேலும், உள்ளூராட்சி ஆணையாளர்கள் 9 பேரும் உதவி உள்ளூராட்சி ஆணையாளர்களும் நியமிக்கப்பட்டனர். மாகாண மட்டத்திற்கு விஸ்தரிக்கப்பட்ட உள்ளூராட்சித் திணைக்களமும் உள்ளூராட்சி ஆணையாளர் மற்றும் உதவி ஆணையாளர்களுக்கு சட்டங்களால் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்கள் 1989ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க (இடைநேர்விளைவான ஏற்பாடுகள்) சட்டத்தின் மூலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.


### 1989ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க மாகாண சபை (பின் விளைவு ஏற்பாடுகள்) சட்டம்

**(Provincial Councils (Consequential Provisions) Act No 121989)**

மாகாண சபை நிரலில் உள்ள விடயங்கள் சம்பந்தமான மத்திய அரசின் அமைச்சர்களிடம் இருக்கும் அதிகாரங்களையும் செயற்பாடுகளையும் மாகாண அமைச்சர்கள் மற்றும் அதிகாரிகளுக்கு மாற்றம் செய்வதற்கு 1989ஆம் ஆண்டின் மாகாண சபைகள் (பின்விளைவு ஏற்பாடுகள்) சட்டம் இல.12 நிறைவேற்றப்பட்டது.

இதன் மூலம் 13ஆம் அரசியலமைப்பு திருத்தம் நடைமுறைக்கு வரும் (1987 நவம்பர் 14க்கு) முன்னர் மத்திய அரசின் விடயங்களும் அவற்றுக்கான அதிகாரிகளும் எனக் கூறப்பட்டவை தற்போதைய மாகாணசபை விடயங்கள் எனவும் அவற்றுக்கான மாகாண அதிகாரிகள் எனவும் கொள்ளப்பட வேண்டும் என்ற திருத்தம் செய்யப்பட்டது.,

உள்ளூராட்சி நிறுவனங்களின் செயற்பாட்டுடன் தொடர்புடைய நபர்கள்




### மாகாண உள்ளூராட்சித் திணைக்களத்தின் பிரதான விடயப்பரப்புக்கள்

1. கொள்கை, அதிகாரம், உருவாக்கம் போன்றவை பற்றிய உள்ளூராட்சித் திணைக்களத்தின் செயற்பாடுகளுடன் தொடர்புடைய விடயங்கள் சம்பந்தமாக மாகாண சபையுடனும், மத்திய அமைச்சுடனுமான தொடர்புகளைப் பேணுதல்.

2. சட்டரீதியான, நிர்வாக ரீதியான மற்றும் ஏனைய உள்ளூராட்சி மன்றங்களின் செயற்பாடுகளைக் கண்காணித்தலும் செயற்படுத்தலும்,

3. உள்ளூராட்சி மன்றங்களின் நிர்வாக குறைபாடுகள் சம்பந்தமாக கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை மேற் கொள்ளுதல்.

4.கொள்கை ரீதியிலான உள்ளூராட்சி மன்றங்களுக்கு சட்ட ஆலோசனை வழங்குதல்.

5.நிதி மற்றும் வர்த்தக ரீதியிலான நடவடிக்கைகளுக்கு உள்ளூராட்சி மன்றங்களுக்கு பிரதம செயலாளரதும், அமைச்சினதும் அங்கீகாரத்தைப் பெற்றுக் கொடுத்தலும் உள்ளூராட்சி மன்றங்களுக்கு வழங்குதலும்.

6.உள்ளூராட்சி மன்றங்களின் செயற்பாடுகள் சம்பந்தப்பட்ட சட்டங்கள், துணைச்சட்ட நடவடிக்கையின் போது ஏனைய சேவைகள் வழங்கும் திணைக்களங்களுடன் தொடர்புகளை சிறந்த முறையில் பேணுதல்.

7.உள்ளக கணக்காய்வுப் பிரிவினை நகரசபைகளில் உருவாக்கி அதனைக் கண்காணிப்பதற்கு வேண்டிய உதவிகளையும், ஆலோசனைகளையும் வழங்குதல்.

8.புனர்நிர்மாண வேலைகள், அபிவிருத்தி வேலைகள் மற்றும் நான்காண்டுத் திட்டங்கள் தயார் செய்வதற்கு உள்ளூராட்சி மன்றங்களுக்கு உதவியாகவும் வழிகாட்டியாகவும் செயற்படுதல்.

9.முகாமைத்துவ தகவல் முறைமையை அபிவிருத்தி செய்வதற்கு உதவுதல்.

10. பொருத்தமான விடயங்கள் சம்பந்தமாக சமூக தலைவர்களுக்கும், உள்ளூராட்சி மன்றங்களின் தலைவர்களுக்கும் ஊழியர்களுக்கும், தெரிவு செய்யப்பட்ட அங்கத்தவர்களுக்கும் பயிற்சிக்கான வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல்.

11.நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புத் திட்டங்களை நிறைவேற்றத் தேவையான தொழில்நுட்ப ஆலோசனைகள் என்பவற்றை வழங்கல்.

12.பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ஊடாக உள்ளூராட்சி மன்றங்களுக்கு தேவையான நன்கொடைகள், சம்பள மீளளிப்பு போன்றவை சரியான முறையிலே பயன்படுத்தப்படுவதையும் முறையான கணக்கு வைக்கும் முறைகளையும் பரிசீலனைகள் செய்வதனூடாக உதவிகளையும் வழிகாட்டல்களையும் வழங்குதல்.

13.நீர் வழங்கல், சுற்றாடல் பாதுகாப்புத் திட்டம் போன்ற சேவைகளை அடையாளம் காண்பதும், திட்டமிடுதலும், அமுல்செய்தலும் உள்ளூராட்சி மன்றங்களுடனும், சமூகத்தலைவர்களுடனும் இணைந்து செயலாற்றுதல்

**உள்ளூராட்சித் திணைக் களத்தின் செயற்பாடுகள்**

**உள்ளூராட்சிச் சபைகளின் தகைமை ஆளுமை ஆகியவற்றை மேம்படுத்தல், அபிவிருத்தி செய்தல், உயர்த்துதல் ஆகியவற்றுக்கான ஆலோசனைகள், அனுசரணைகள் ஒருங்கிணைத்து சேவை செய்தல். உள்ளூராட்சிச் சபைகள் நல்ல தரமான சேவைகளை வழங்க உறுதி செய்தல், அபிவிருத்தி செய்தல், மேற்பார்வை செய்தல், கண்காணித்தல், எல்லா விதமானதும் .செயற்றிறன் வாய்ந்ததுமான சேவைகளை வழங்க உறுதி செய்தல் போன்றவை மாகாண உள்ளூராட்சித் திணைக்களத்தின் பணிக் கூறுகளாகும்.**

**உள்ளூராட்சி நிறுவனங்கள் தொடர்பில் எழுதப்பட்ட சட்டங்களின் (மாநகர சபை, நகரசபை கட்டளைச் சட்டங்கள், பிரதேச சபைச் சட்டம் போன்றவை) ஏற்பாடுகளுக்கு அமைவாக உள்ளூராட்சி ஆணையாளர் மற்றும் உதவி ஆணையாளருக்கு அதிகாரங்கள் மற்றும் பணிப்பொறுப்புக்கள் பல கொடுக்கப்பட்டுள்ளன**

என்பன இத் திணைக்களத்தின் விடயப்பரப்புகளாகும்.

உள்ளூராட்சி நிறுவனங்கள் தொடர்பில் எழுதப்பட்ட சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைவாக உள்ளூராட்சி ஆணையாளர் மற்றும் உதவி ஆணையாளருக்குரிய அதிகாரங்கள் மற்றும் பணிப்பொறுப்புக்கள் பற்றிய தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

### மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் கீழ் மாகாண உள்ளூராட்சி ஆணையாளருக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களும் பணிப் பொறுப்புகளும்

இச் சட்டத்தால் உள்ளூராட்சி ஆணையாளருக்கு மிகவும் குறைந்தளவான அதிகாரங்களே அளிக்கப்பட்டுள்ளன.

**1.மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 190 ஆம் பிரிவு**

மாநகர சபை நிதியத்தின் கணக்குகள் சார்ந்த பெறுகைகள் மற்றும் செலவுகள் பற்றிய கூற்றினை வர்த்தமானிப் பத்திரிகையில் பிரசுரிக்கும் நியதி முறையான பொறுப்பு, அதனுடன் சம்பந்தப்பட்ட உள்ளூராட்சி ஆணையாளரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

(தொடரும்...)

# "தமிழர்களே ஆதிக்குடிகள்" விக்னேஸ்வரனின் உரை வரலாற்று உண்மையாகும்



## ஐங்கரநேசன் சுட்டிக்காட்டு

(கொழும்பு)

புதிய பாராளுமன்றக் கன்னி அமர்வில் பாராளுமன்ற உறுப்பினர்களான சி.வி.விக்னேஸ்வரனும் கஜேந்திரகுமார் பொன்னம்பலமும் ஆற்றிய உரைகள் தொடர்பாக தென்னிலங்கை அரசியல்வாதிகள் கடுமையான கண்டனங்களை வெளியிட்டு வருகின்றனர்.

அவர்கள் பாராளுமன்றில் பேசத்தகாத வார்த்தைகள் எதனையும் பேசவில்லை. இலங்கைத்தீவில் தமிழ் மக்கள் ஆதிக்குடிகள் என்பதையும் தனியானதொரு தேசம் என்பதையுமே வலியுறுத்தியிருந்தார்கள். இதற்கே, தென்னிலங்கை அரசியல்வாதிகள் கொதித்துப்போயுள்ளார்கள்.

இலங்கைத் தீவில் தமிழர்களே ஆதிக்குடிகள் என்பதும் அவர்கள் தனியானதொரு தேசம் என்பதும் வரலாற்று உண்மைகள். இவை பேரினவாதிகளின் கூச்சல்களால் ஒருபோதும் இல்லை என்றாகிவிடாது என்று தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ.ஐங்கரநேசன் உறுதிபடத் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்ற உறுப்பினர்கள் சி.வி.விக்னேஸ்வரன், கஜேந்திரகுமார் பொன்னம்பலம் ஆகியோரின் உரைகள் தொடர்பாக பெரும்பான்மையினப் பாராளுமன்ற உறுப்பினர்கள் கண்டனங்களைத் தெரிவித்துவரும் நிலையில், இது தொடர்பாகப் ஐங்கரநேசன் நேற்று முன்தினம் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

சிங்கள இலக்கியங்களும் பாளி இலக்கியங்களும் இலங்கையின் பூர்வீக மக்கள் சிங்கள மொழி பேசுகின்ற ஆரிய மொழிக் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் என்றும், அவர்கள் வட இந்தியாவில் இருந்து வந்த ஆரிய இன மக்கள் என்றும் கூறுகின்றன. ஆனால், இவற்றுக்கு ஆதாரமாக எவ்விதத் தொல்லியல் சான்றுகளும் இலங்கையில் இருந்து கிடைக்கவில்லை.

இலங்கையின் பூர்வீக மக்கள் திராவிட மொழிக் குடும்பத்தைச் சார்ந்த, பெருங்கற் பண்பாட்டுக்குரிய மக்கள் இனம் என்பது வரலாற்றாசிரியர்களாலும் தொல்லியலாளர்களாலும் மொழியியலாளர்களாலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட உண்மையாகும்.

பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பாகத் தென்னிந்தியாவின் நிலப்பரப்பில் இருந்து இயற்கைப் பேரிடர் காரணமாகப் பிரிந்த ஒரு நிலப்பரப்பே இலங்கைத்தீவு என்று புவியியலாளர்கள் நிரூபித்திருக்கும் நிலையில், இலங்கையின் பூர்வீக மக்கள் தமிழ் மொழி பேசுகின்ற திராவிடப் பண்பாட்டு மக்கள் என்பதை வரலாற்று அறிவில்லாத சாதாரண மக்களே ஏற்றுக்கொள்வார்கள்.

இலங்கைத்தீவில் தமிழ் மக்கள் மீது சிங்கள பேரினவாதம் எத்தகைய கொடும் நெருக்கடிகளைக் கொடுத்தாலும் தமிழர்களே தொன்மைக் குடிகள் என்பதும், தமிழர்கள் தனியானதொரு தேசம் என்பதும் ஒருபோதுமே இல்லை என்றாகிவிடாது என அவர் தெரிவித்துள்ளார். (ஜ-4)

# பாராளுமன்றத்திற்கு தெரிவாகவில்லை என்பதால் நான் வெற்றி பெறவில்லை என்று அர்த்தமில்லை



(அம்பாறை)

தமது கட்சியின் கிளைகளை எல்லா இடங்களிலும் அமைக்கவுள்ளதாக தமிழர் ஐக்கிய சுதந்திர முன்னணியின் தலைவர் விநாயகமூர்த்தி முரளிதரன் (கருணா) தெரிவித்துள்ளார்.

அத்துடன், நடைபெற்று முடிந்த தேர்தலில் பாராளுமன்றத்துக்கு தெரிவாகாவிட்டாலும் தான் வெற்றிபெற்றுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

அம்பாறையில் தமிழர் ஐக்கிய சுதந்திர முன்னணி ஆதரவாளர்களுடன் நேற்று முன்தினம் புதன்கிழமை மாலை இடம்பெற்ற சந்திப்பில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், "அம்பாறை மாவட்டத்தில் பாரிய சவால் எதிர்காலத்தில் எனக்கு இருக்கின்றது. நான் வெற்றிபெற்று பாராளுமன்றம் செல்லவில்லை என நினைக்க வேண்டாம். நான் வெற்றி பெற்றுள்ளேன். எனது விருப்பு வாக்கினை விட குறைந்த வாக்குகளைப் பெற்றே சம்பந்தன் உள்ளிட்டோர் பாராளுமன்றம் சென்றுள்ளனர்.

இதற்காக தொடர்ந்து உழைத்த புலம்பெயர் வாழ் சொந்தங்கள், இளைஞர்கள் இந்த வெற்றிக்கு பெரும் பங்காற்றி உள்ளனர்.

வடக்கு,கிழக்கு மக்கள் இன்று தமிழ்த்தேசியக் கூட்டமைப்பை தூக்கி வீசியிருக்கிறார்கள். இதனை மக்கள் நன்கு புரிந்துகொள்ள வேண்டும். இன்னும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினருக்குப் பின்னால் எமது மக்கள் சென்றால் இன்னும் தமிழ் சமூகம் பிரச்சினைகளை எதிர்கொள்ளும்.

மேலும், கல்முனை பிரதேச செயலகத்தின் தரமுயர்த்தும் முயற்சியை தொடர்ந்து முன்னெடுக்கவுள்ளேன். அத்துடன் எமது கட்சியின் கிளைகளை அம்பாறை உள்ளிட்ட பகுதிகளில் நிறுவ ஏற்பாடு செய்துள்ளேன்" என்று தெரிவித்துள்ளார். (ஜ-2)

# செயற்றிறன்மிக்க வரிமுறைமையொன்றை அறிமுகப்படுத்த அரசாங்கம் தீர்மானம்

(கொழும்பு)

செயற்றிறன்மிக்க வரிமுறைமையொன்றை நாட்டுக்கு அறிமுகப்படுத்த அரசாங்கம் திட்டமிட்டுள்ளதாக அமைச்சர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாட்டிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், "பொருளாதார மீள் எழுச்சிக்கு அத்தியாவசியமான காரணி என்ற வகையில், இலகுவான, வெளிப்படைத் தன்மையான, செயற்றிறன்மிக்க, வரிமுறைமை ஒன்றை இலங்கைக்கு அறிமுகப்படுத்துவது அவசியம் என அடையாளப்படுத்தப்பட்டுள்ளது.

இதற்கமைய 4 வரிச் சட்டங்களை திருத்த நிதியமைச்சர் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தீர்மானித்துள்ளார்.

2009 ஆம் ஆண்டு 9 ஆம் இலக்க தேச கட்டுமான வரிச் சட்டம், 2006 ஆம் ஆண்டு 13 ஆம்இலக்க பொருளாதார சேவை சட்டம், 2011 ஆம் ஆண்டு 18 ஆம் இலக்க துறைமுகம் மற்றும் விமான நிலைய அபிவிருத்தி வரிச் சட்டம், 2018 ஆம் ஆண்டு 35ஆம் இலக்க நிதிச்சட்டம் ஆகியவற்றை திருத்துவதற்கு அவசியமான சட்டமூலத்தை முன்வைத்து வர்த்தமானி மூலம் அறிவிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அதேபோல, 2017 ஆம் ஆண்டு 24 ஆம் இலக்க தேசிய வருமான சட்டம், 2002 ஆம் ஆண்டு 14 ஆம் இலக்க பெறுமதி சேர் வரிச் சட்டம் ஆகியவற்றை திருத்துவதற்கான சட்டமூலங்களை முன்வைக்க ஆலோசனை வழங்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது" என அவர் தெரிவித்தார். (ஜ-6)

# மாத்தளை மாநகர மேயர் "அவுட்"

(மாத்தளை)

மாத்தளை மாநகர சபை மேயர் பதவியில் இருந்து டல்ஜித் அலுவிகார நீக்கப்பட்டுள்ளார்.

மத்திய மாகாண ஆளுநரினால் அவர் நீக்கப்பட்டுள்ளதாகவும் இது தொடர்பாக வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் நகர மேயர் குறித்து விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் தெரியவந்துள்ளது. (ஜ-4)



# முடக்கப்பட்ட வங்கி கணக்குகள்

(கொழும்பு)

போதைப்பொருள் வர்த்தகம் ஊடாக ஈட்டிய 2 ஆயிரத்து 643 மில்லியன் ரூபாய் பணத்தை பரிமாற்றிய 102 வங்கி கணக்குகள் பொலிஸாரால் முடக்கப்பட்டுள்ளன.

எனினும் குறித்த கணக்குகளில் தற்போது 96.7 மில்லியன் ரூபாய் பணமே எஞ்சியுள்ளதாகவும் அது தொடர்பில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாகவும் உயர் பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

அந்த வங்கிக் கணக்குகளில் 90 சதவீதமானவை தனியார் வங்கிகளில் பேணப்பட்டுள்ளதாக தெரியவந்துள்ளது.

பெரும்பாலான போதைப்பொருள் வர்த்தகர்கள் தம்முடன் நெருங்கிய தொடர்பினை பேணியுள்ளவர்களின் பெயர்களில் வங்கிக் கணக்குகளை பேணியுள்ளதாகவும் விசாரணையில் தெரியவந்துள்ளது.

மொரட்டுவை - சொய்சாபுர உணவகத்தில் நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டினை வழிநடத்திய குடு அஞ்சு என்பவர் போதைப்பொருள் வர்த்தகம் ஊடாக ஈட்டிய 4 ஆயிரத்து 900 ரூபாய் பரிமாற்றப்பட்டுள்ள வங்கிக்கணக்கொன்று அண்மையில் மேல் மாகாண குற்றத்தடுப்பு பிரிவின் அதிகாரிகளால் கண்டறியப்பட்டது.

குறித்த வங்கிக்கணக்கும் போகுந்தர பகுதியில் உள்ள தனியார் வங்கி ஒன்றில் பேணப்பட்டுள்ளமையும் பின்னர் தெரியவந்தது. அத்துடன் தற்போது சிறையில் உள்ள போதைப்பொருள் வர்த்தகரான மர்வின் ஜானாடா என்ற ஜனித் ஹசான் விமல வீரவிற்கு சொந்தமாக ஆயிரத்து 400 இலட்சம் ரூபாய் வைப்பலிடப்பட்ட வங்கிக் கணக்கும் பொலிஸாரால் கண்டறிப்பட்டிருந்தது. (ஜ-6)

# கர்ப்பிணிப் பெண்ணுக்கு கொரோனா

(கொழும்பு)

சிலாபம் - ஆராச்சிக்கட்டுவ பகுதியில் வீட்டில் சுய தனிமைப்படுத்தலில் இருந்த கர்ப்பிணிப் பெண்ணொருவர் கொரோனாத் தொற்றுக்கு உள்ளாகியுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

சிலாபம் பொது வைத்தியசாலையில் குறித்த பெண்ணுக்கு மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர்.பரிசோதனைகளில் அவர் கொரோனாத் தொற்றுக்கு உள்ளாகியுள்ளமை கண்டறியப்பட்டுள்ளதாக வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்தியர் கபிலா மல்லவராச்சி தெரிவித்துள்ளார்.

இதனையடுத்து, குறித்த பெண் தேசிய தொற்று நோயியல் வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளதாக வைத்தியர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

குறித்த பெண் டுபாயிலிருந்து நாடு திரும்பிய நிலையில், வவுனியா தனிமைப்படுத்தல் நிலையத்தில் தனிமைப்படுத்தி வைக்கப்பட்டு பின்னர் அவரது வீட்டில் சுய தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஜ-4)

# பாரதம்

# நியூஸிலாந்து வரலாற்றில் கறைபடிந்த மசூதி தாக்

# குற்றவாளிக்கு பரோல் இல்லாத ஆயுள் தண்ட

(வெலிங்டன்)

**நியூஸிலாந்தில் இரண்டு மசூதிகளில் 51 பேரைக் கொன்ற தாக்குதல்தாரிக்கு, பரோலே இல்லாத ஆயுள் தண்டனை விதித்து நியூஸிலாந்து நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.**

அவுஸ்திரேலிய தாக்குதல் தாரியான 29 வயதான ப்ரெண்டன் டாரன்ட் மீது 51 கொலை, 40 கொலை முயற்சிகள் மற்றும் ஒரு பயங்கரவாத குற்றச்சாட்டுக்களை ஒப்புக் கொண்டதையடுத்து அவருக்கு இந்தத் தீர்ப்பு வழங்கப்பட்டது.

இதன்போது கருத்துத் தெரிவித்த நீதிபதி கேமரூன் மேண்டர், 'குற்றவாளி டாரன்டின் குற்றங்கள் மிகவும் கொடூரமானது, ஆயுள் முழுவதும் சிறை என்பது கூட அந்த கொலை பாதகங்களுக்கு பிராயச்சித்தமாகாது.

உங்களுடைய செயல் மனித விரோதமானது, தன் தந்தையின் முழங்காலைக் கட்டிக் கொண்ட 3 வயது குழந்தையைக் கொலை செய்திருக்கின்றீர்கள்' என நீதிபதி தெரிவித்தார்.

முன்னதாக குற்றவாளி டாரன்ட் தன் சட்டத்தரணிகளை நீக்கியதோடு விசாரணையில் தான் எதுவும் பேச விரும்பவில்லை என்று கூறியுள்ளதாகத் தெரிகிறது. அதே போல் பரோல் இல்லாத ஆயுள் தண்டனையையும் எதிர்க்கவில்லை.

விசாரணையின் போது குற்றவாளி மெலிந்த தோற்றத்துடன் காணப்பட்ட ப்ரெண்டன் டாரன்ட், முகத்தில் எந்த ஒரு உணர்ச்சியும் இல்லாமல் இருந்ததாகக் கூறப்படுகிறது.





தண்டனைக்கான 4 நாட்கள் விசாரணையில், மூன்றாவது மசூதியைக் குறிவைக்கும் திட்டம் இருந்ததாகவும் மசூதிகளை எரிக்கவும் முடிந்தவரை பல பேரைக் கொல்லவும் அவர் விரும்பியதாகவும் தெரிவித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

கடந்த ஆண்டு மார்ச் 15ஆம் திகதி கிறிஸ்ட்சர்ச்சில் உள்ள மசூதியில் நுழைந்த ப்ரெண்டன் டாரன்ட், மசூதியில் தொழுகையில் ஈடுபட்டிருந்தவர்கள் மீது சரமாரியாக துப்பாக்கிச் சூடு நடத்தினார். பின்னர் லின்வுட் மசூதிக்கு நுழைந்து பலரைக் கொன்றார்.

இந்த த
பாக்கி ஏந்தி
சமூக வலை
யாக ஒளிப
ஏற்படுத்தி
இந்தத்
கிலும் அதிர்
பியது மற்று
துப்பாக்கிச்
வான மாற்ற
டியமை குற

# அந்தமான் பழங்குடி மக்களுக்கு கொரோனா தொற்று

(அந்தமான்)

அந்தமான் பழங்குடி மக்களில் நால்வர் கொரோனா தொற்றாளர்களாக இனங்காணப்பட்டுள்ளதாக சுகாதாரத் துறை அதிகாரி தெரிவித்தார்.

அந்தமான் தீவில் 53 பழங்குடி இனத்தவரும் அதனை அண்டிய பவளப்பாறை தீவுகளில் 37 பழங்குடி இனத்தவரும் வாழ்வதாக அவர்களில் நால்வருக்கு முதன்முதலாக கொரோனாத் தொற்று இனங்காணப்பட்டு இருவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருப்பதுடன் இருவர் தனிமைப்படுத்தல் நிலையத்தில் தங்க வைக்கப்பட்டுள்ளனர் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

அந்தமான் தீவுகளில் 2985 கொரோனா வைரஸ் நோயாளிகள் இனங்காணப்பட்டு 41 இறப்புக்கள் பதிவாகியுள்ளன.

பழங் குடி மக்கள் நோய் எதிர்ப்பு சக்தி குறைந்தவர்கள் என சந்தேகிக்கப்படுவதால இவ் இன மக்களுக்கு ஏற்பட்ட கொரோனாத் தொற்று அவ் இனத்தின் அழிவிற்கு காரணமாகி விடலாம் என அஞ்சப்படுகின்றமை குறிப் பிடத்தக்கது. (2-10)

இஸ்ரேலிய விமானத் தயாரிப்பு நிறுவனம் தயாரித்துள்ள பெற்றோல் பயன்படுத்தாத பற்றறியில் மாத்திரம் இயங்கக்கூடிய மின்சார விமானம் பிரான்ஸ் தலைநகர் பாரிசில் நடைபெற்ற விமானக் கண் காட்சியில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது. இவ்விமானம் 600 km பயணம் செய்யக்கூடியது என்பது குறிப்பிடத்தக்கது.



# கொட்டித் தீர்த்த க 90 பேர் உயி

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானில் கடந்த 3 நாட்களில் கொட்டித்தீர்த்த கனமழை காரணமாக ஏற்பட்ட வெள்ளம் போன்ற பல்வேறு சம்பவங்களால் 90 பேர் உயிரிழந்துள்ளனர்.

பாகிஸ்தானில் கடந்த சில நாட்களாக பருவமழை தீவிரமடைந்து வருகிறது. அந்நாட்டின் சிந்து, கைபர் பக்துவா, பலுசிஸ்தான் ஆகிய மாகாணங்களிலும் கராச்சி, ஆக்கிரமிப்பு காஷ்மீர் பகுதிகளும் கனமழையால் அதிக பாதிப்புகளை சந்தித்துள்ளன.

கனமழை காரணமாக நாட்டின் பல்வேறு வீதிகள்





# 'லாரா' புயல் அச்சம்; 5 இலட்சம் ம

(வோஷிங்டன்)

லாரா சூறாவளி டெக்சாஸ்-லூசியானா எல்லைக்கு அருகிலுள்ள வளைகுடா கடற்கரைக்கு பேரழிவு சேதத்தையும் "மீளமுடியாத புயல் எழுச்சியையும்" ஏற்படுத்தக் கூடிய வகையில் வலுப் பெற்றுள்ளதாக அமெரிக்காவின் சூறாவளி மையம் தெரிவித்துள்ளது.


புயல், சூறாவளி தீவிரத்தை அளவிடுவதற்காக 'Saffir-Simpson" சூறாவளி அளவும் தரப்படுத்தப்பட்டுள்ளது.

சபீர் சிம்சன் சூறாவளித் தரப்படுத்தல் என்பது "அயனமண்டலத் தாழமுக்கம்", "அயனமண்டலப் புயல்" என்பவற்றைவிட வீரியம் கூடிய சூறாவளியாக மாறும்.புவியின் மேற்கு அரைக்கோளத்தில் ஏற்படும் அயனமண்டல சுழல்காற்றுகளைத் தரப்படுத்தும் முறைமையாகும்.

# வெளிநாடு

# ...தாக்குதல்

# ...ண்டனை!



இந்த தாக்குதல்களை துப்பாக்கி ஏந்திய ப்ரெண்டன் டாரண்ட், சமூக வலைத்தளங்களில் நேரடியாக ஒளிபரப்பி பெரும் பரபரப்பை ஏற்படுத்தினார்.

இந்தத் தாக்குதல் உல கெங்கிலும் அதிர்ச்சி அலைகளை எழுப்பியது மற்றும்நியூஸிலாந்தை அதன் துப்பாக்கிச் சட்டங்களில் விரைவான மாற்றங்களைச்செய்யத்தூண்டியமை குறிப்பிடத்தக்கது. (2)

# எல்லா வகை கொரோனாவையும் தடுக்கும் தடுப்பூசி

# கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகம் கண்டுபிடிப்பு

(லண்டன்)

ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழ கத்தை போன்றே பிரபலமான இங்கிலாந்தின் கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகமும் புதிதாக ஒரு தடுப்பூசியை கண்டுபிடித்து உள்ளது. உலக நாடுகளை யெல்லாம் கதிகலங்க வைத்து வரும் கொரோனா வைரஸ் தொற்றை தடுத்து நிறுத்து வதற்கு தடுப்பூசிகளை உருவாக்கும் முயற்சி, உலகளவில் முழுவீச்சில் நடந்து வருகிறது.


இதுவரை உருவாக்கப்பட்டு, பரிசோதிக்கப்பட்டு வருகிற தடுப்பூசிகளில் இங்கிலாந்து நாட்டின் ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகம், அஸ்ட்ரா ஜெனேகா மருந்து நிறுவனத்துடன் இணைந்து உருவாக்கி, இந்தியாவில் விரைவில் மருத்துவ பரிசோதனையை எதிர்கொள்ளும் 'கோவிஷீல்டு' நம்பகரமான ஒன்றாக அமைந்துள்ளது.

இது கொரோனா வைரஸை தடுத்து நிறுத்தும் நோய் எதிர்ப்பு பொருளை உருவாக்குவதுடன், டி செல்களையும் உருவாக்குவது இரட்டை பாதுகாப்பு அம்சம் என்று விஞ்ஞான உலகம் சொல்கிறது.

இந்தத் தருணத்தில் ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகத்தை போன்றே பிரபலமான இங்கிலாந்தின் கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகமும் புதிதாக ஒரு தடுப்பூசியை கண்டுபிடித்துள்ளது.

இந்த தடுப்பூசிக்கு 'டியோஸ்-கோவேக்ஸ் 2' என பெயரிப்பட்டுள்ளது.

இந்த தடுப்பூசியின் சிறப்புத் தன்மை, இது எல்லாவிதமான கொரோனா வைரஸையும் தடுத்து நிறுத்தும். அது மட்டுமின்றி, வௌவால்கள் உள்ளிட்ட பிராணிகளிடம் இருந்து எதிர்காலத்தில் மனிதர்களுக்கு பரவக்கூடிய கொரோனா வைரஸ்களையும் தடுக்கும் ஆற்றல் வாய்ந்தது என்றும் குறிப்பிடப்படுகிறது. (2)




# ...த கன மழை

# ...யிரிழப்பு



துண்டிக்கப்பட்டுள்ளன. ஆயிரக்கணக்கான வீடுகளை வெள்ள நீர் சூழ்ந்துள்ளது. ஆயிரக்கணக்கான வீடுகள் கனமழை, வெள்ளம் காரணமாக இடிந்து விழுந்துள்ளன. பலர் தங்கள் வீடுகளை விட்டு வெளியேற்றப்பட்டு பாதுகாப்பான இடங்களுக்கு அனுப்பப்பட்டுள்ளனர்.

கனமழை வெள்ளத்தில் சிக்கியவர்களை மீட்கும் பணியில் இராணுவம் களமிறக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், பாகிஸ்தானில் பெய்துவரும் கனமழையால் ஏற்பட்ட வெள்ளம், கட்டடம் இடிந்து விபத்து போன்ற விபத்துக்களால் இதுவரை 90 பேர் உயிரிழந்துள்ளனர்.


பலர் படுகாயமடைந்துள்ளனர். கனமழை மேலும் சில நாட்களுக்கு நீடிக்கக்கூடும் என பாகிஸ்தான் வானிலை ஆய்வு மையம் எச்சரிக்கை விடுத்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (2)

# ஆப்கானில் பெருவெள்ளம் இதுவரை 70 பேர் உயிரிழப்பு

(காபூல்)

ஆப்கானிஸ்தானின் வடக்கு மற்றும் கிழக்குப் பகுதிகளில் ஏற்பட்ட பெரும் வெள்ளத்தால் 70 பேர் வரை உயிரிழந்துள்ளதாக அந்நாட்டு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

பர்வான் மாகாணத்தின் தலைநகரான சாரிகர் நகரத்தின் பெரும் பகுதிகளில் வெள்ளம் புகுந்துள்ள நிலையில் பல வீடுகள் இடிந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.



இந்நிலையில், இந்த இடிபாடுகளுக்குள் புதையுண்டவர்களை மீட்கும் பணி தொடர்வதாகவும் உயிரிழப்புகளின் எண்ணிக்கை உய ரும் என அஞ்சப்படுவதாகவும் பர்வான் மாகாணத்தின் செய்தித் தொடர்பாளர் வஹிதா ஷாகர் நேற்று முன்தினம் புதன்கிழமை தெரிவித்துள்ளார்.

இதேவேளை, ஒரே இரவில் பெய்த பலத்த மழை காரணமாக உயிரிழந்தவர்களில் அதிகமானோர் சிறுவர்கள் என அந்நாட்டு பேரிடர் மேலாண்மை அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2)

# ...ம் மக்கள் இடம்பெயர்வு!

தரப்
...டலத்
...டலப்
...ரியம்
...வியின்
...படும்
...ளைத்
...ம்.

டெக்சாஸின் துறைமுகத்துக்கு தென்கிழக்கில் சுமார் 320 கி.மீ (200 மைல்) தொலைவில் இருந்தது. அதிகபட்சமாக மணிக்கு 220 கிலோ மீற்றர் வேகத்தில் காற்று வீசக்கூடும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. இந்த ஆண்டு அமெரிக்காவை தாக்கும் மிக சக்திவாய்ந்த சூறாவளி லாராவாக இருக்கக்கூடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. குறைந்தது 20 மில்லியன் மக்கள் புயலின் பாதையில் உள்ளனர் மற்றும் 5 இலட்சத்திற்கும் அதிகமான மக்கள் வெளியேற உத்தர விடப்பட்டுள்ளது. (2)

# சீனக்கடலில் செயற்கைத் தீவுகள் உருவாக்கிய நிறுவனங்கள் கறுப்புப்பட்டியலில்

## அமெரிக்கா அறிக்கை



(வோஷிங்டன்)

சர்ச்சைக்குரிய தென் சீனக் கடல் பகுதியில் செயற்கைத் தீவுகளை உருவாக்கிய 24 சீன நிறுவனங்களை அமெரிக்கா கறுப்புப் பட்டியலில் சேர்த்துள்ளது.

இதுகுறித்து அமெரிக்க உள்துறை அமைச்சர் மைக் போம்பியோ விடுத்துள்ள அறிக்கையில், கடந்த 2013ஆம் ஆண்டு முதல் தென்சீனக் கடலில் 3 ஆயிரம் ஏக்கருக்கும் அதிகமான நிலங்களை சீனா அகழ்வாராய்ச்சி செய்து வருவதாகத் தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில், இத்தகைய போக்கு பிராந்திய ஸ்திரத்தன்மைக்கு எதிரானது எனக் குறிப்பிட்டுள்ள அவர், செயற்கைத் தீவுகளை உருவாக்கியதன் மூலம் சீனா சுற்றுச்சூழலுக்கு பெரும் கேட்டினை விளைவித்து விட்டதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

இதன் காரணமாக செயற்கைத் தீவை அமைத்ததில் பங்குகொண்ட சீன நிறுவனங்களை கறுப்புப் பட்டியலில் சேர்த்துள்ளதாக அந்த அறிக்கையில் மைக் போம்பியோ தெரிவித்துள்ளார். (2)

# பெண்களுக்கான திருமண வயது 18 சமர்ப்பிக்கப்பட்டது தனிநபர் பிரேரணை

(கொழும்பு)

நாட்டில் பெண்களின் திருமணத்திற்கான குறைந்தபட்ச வயதை 18 ஆக நிர்ணயிக்கும் விதமாக தனிநபர் பிரேரணை ஒன்றை ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் மாத்தளை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் பிரமிதா பண்டார பாராளுமன்ற செயலாளர் நாயகம் தம்மிக்க திஸநாயக்கவிடம் கையளித்தார்.

“திருமணத்தின் குறைந்தபட்ச வயது” என்ற தலைப்பில் சமர்ப்பிக்கப்பட்ட மசோதாவில், நாட்டின் ஒவ்வொரு குழந்தையின் உரிமைகளையும் பாதுகாப்பதற்கான தேசிய மற்றும் சர்வதேச கடமைகளை அரசு நிறைவேற்றுவதை உறுதி செய்வதே மசோதாவின் நோக்கம் என அவர் தெரிவித்தார்.

“குழந்தைகளை குழந்தைகளாகக் கருத வேண்டும், இந்த மசோதாவின் நோக்கம் யாரையும் ஓரங்கட்டுவது அல்ல,” என்று அவர் கூறினார்.

பெண்களுக்கு எதிரான அனைத்து விதமான பாகுபாடுகளையும் அகற்றுவதற்கான மாநாடு (சிடாவா) மற்றும் சிறுவர் உரிமைகள் தொடர்பான மாநாடு (சி.ஆர்.சி) ஆகியவற்றில் இலங்கை ஒரு உறுப்பினராகும்.

இதன் கீழ் மதம் மற்றும் தனிப்பட்ட சட்டங்களைப் பொருட்படுத்தாமல் ஒரு குறைந்தபட்சமாக 18 வயதாக அறிமுகப்படுத்த இலங்கைக்கு கடமை உள்ளது.

“ஒரு நிலையான வயது அனைத்து குழந்தைகளின் உரிமைகளுக்கும் உத்தரவாதம் அளிக்கும் மற்றும் பாதுகாக்கும்” என்று அவர் கூறினார். (ஐ-4)

# தேசிய பூங்காவில் வெள்ளை யானை



(கொழும்பு)

மாதுறுஓயா தேசிய பூங்காவில் ஒரு வெள்ளை யானை சுற்றித் திரிவதாகவும், அந்த காட்டு யானையின் புகைப்படங்களை பூங்கா மேலாளர் புத்திக விதாரன தனது சமூக வலைத்தளத்தில் வெளியிட்டுள்ளார்.

இது தொடர்பில் பொலநறுவை வனவிலங்கு திணைக்கள உதவிப் பணிப்பாளர் டபிள்யூ.எம்.கே.எஸ்.சந்திரரத்ன தெரிவிக்கையில்,

“இதுபோன்ற காட்டு யானை பற்றிய தகவல் எங்களுக்கு கிடைத்துள்ளது.

நேற்று முன்தினம் பூங்காவின் அதிகாரி ஒருவர் மாதுறுஓயா ஏரியின் மேற்பரப்பில் ஒரு வெள்ளை யானையைக் கண்டார்.

மரபணு மாற்றங்கள், அத்தகைய யானைகளுக்கு காரணமாக இருக்கலாம் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (ஐ-4)

# கொரோனா பரிசோதனை உபகரணம் அமெரிக்கா நன்கொடை



(கொழும்பு)

அமெரிக்காவினால் நன்கொடையாக வழங்கப்பட்டிருக்கும் கொவிட் - 19 பரிசோதனை உபகரணம் நேற்று முன்தினம் புதன்கிழமை சர்வதேச அணுசக்தி முகவர் நிலையத்தினால் கொழும்புப் பல்கலைக்கழக மருத்துவபீடத்திடம் கையளிக்கப்பட்டது.

இந்தப் பரிசோதனை உபகரணம் கொரோனா வைரஸ் தொற்று ஏற்பட்டிருப்பதைக் கண்டறிவதற்கான 2000 பரிசோதனைகளை முன்னெடுக்கக்கூடிய வசதியைக் கொண்டமைந்துள்ளது.

இந்த உபகரணத்தின் பெறுமதி ஒரு இலட்சத்து 18 ஆயிரம் அமெரிக்க டொலர்கள் என்று மதிப்பிடப்பட்டிருப்பதுடன், உடனடியாக கொவிட் - 19 தொற்றைக் கண்டறிவதற்கான பரிசோதனையை மேற்கொள்ளத்தக்க செயற்திறன் வாய்ந்த நவீன வசதிகளையும் பி.பி.ஈ.அங்கிகள் போன்ற முக்கிய சுகாதாரப் பாதுகாப்பு சாதனங்களையும் இது உள்ளடக்கியுள்ளது.

அதேவேளை “கொரோனா வைரஸ் பரவலைத் தடுப்பதற்காக இலங்கையினால் முன்னெடுக்கப்பட்டு வருகின்ற மிகவும் செயற்திறனான நடவடிக்கைகளுக்கு தொடர்ச்சியான ஒத்துழைப்பை வழங்குவதற்கு நாம் தயாராக இருக்கின்றோம். அத்துடன் நெருக்கடி நிலைமைகளின் போது விரைவானதும் உறுதியானதுமான பிரதிபலிப்பை வெளிக்காட்டுவதற்கான கடப்பாட்டைக் கொண்டிருக்கிறோம்” என்று இலங்கைக்கான அமெரிக்கத்தூதுவர் அலைனா டெப்லிட்ஸ் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். (ஐ-4)

## இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# புகழ்ச்சி–ஒரு மருந்து

ஒரு பாடசாலை பிள்ளைகளிடம் விஞ்ஞானபூர்வமாக ஒரு சோதனை நடத்திப் பார்த்திருக்கின்றார்கள். அதாவது அவர்களுக்கு ஒரு பரீட்சை வைத்தார்கள். பரீட்சை வைப்பதற்கு முன்னால் அவர்களைப் பார்த்து...

நீங்கள் எல்லாம் மிகவும் புத்திசாலிகள்...மிகக் கெட்டிக்கார பிள்ளைகள். உங்களிடம் நல்ல திறமை இருக்கின்றது. இந்தப் பரீட்சை உங்களுக்கு மிகவும் சுலபமாக இருக்கும் என்று சொல்லிப் பரீட்சை எழுத அனுப்பினார்கள். இந்தப் புகழ் உரையைக் கேட்டுவிட்டு அவர்கள் பரீட்சை எழுதப் போனார்கள். எழுதியுமுள்ளார்கள். சராசரிக்கும் மேலாக இருந்தது அவர்கள் எழுதினது. எல்லோருக்கும் நல்ல மார்க்.

அதேபாடசாலை பிள்ளைகளிடம் இன்னொரு பரீட்சை வைத்தார்கள். அதுவும் முதலிலே வைத்த மாதிரி அல்ல, மிகவும் சுலபமான பரீட்சைதான். இருந்தாலும் பரீட்சை எழுதப் போற பிள்ளைகளைப் பார்த்து இந்தப் பரீட்சை மிகக் கஷ்டமாக இருக்கும். இதை திறமையாக எழுதுகின்ற அளவுக்கு உங்களுக்கு புத்திசாலித்தனம் போதாது என்று ஆரம்பித்து அவர்கள் குறைகளையே சுட்டிக் காட்டி பேசிவிட்டு அதன் பின் பரீட்சை எழுத அனுப்பி வைத்தார்களாம். இவர்கள் பரீட்சையை சரியாகவே எழுதவில்லையாம். மார்க்கும் மிகவும் குறைந்து போய்விட்டதாம்.

இந்த வித்தியாசத்திற்கு என்ன காரணம்? புகழ்ச்சிதான். அவர்களை புகழ்ச்சியாகப் பேசி அனுப்பினார்கள். அதிக மார்க் வாங்கினார்கள். குறைகளைச் சுட்டிக் காட்டி இகழ்ச்சியாகப் பேசி அனுப்பினார்கள் குறைந்த மார்க் வாங்கினார்கள்.

புகழ்ச்சி என்பது ஒரு அற்புதமான மருந்துஎன்கின்றார்கள் நிபுணர்கள். இந்த புகழ்ச்சி மருந்தை நாம் சுலபமாக தயார் செய்யலாம். தாராளமாக மற்றவர்களுக்குக் கொடுக்கலாம் என்கிறார்கள். இதற்குக் காசு பணம் செலவு இல்லை. ஆனால் பலன் அதிகம். பாடசாலை பிள்ளைகளிடம் இந்த மருந்தைக் கொடுங்க, அவர்கள் நன்றாக படிப்பார்கள்.. நிறைய மார்க் வாங்குவார்கள். வியாபாரத்திலே உங்கள் கூட்டாளிக்கு இந்த மருந்தை நீங்கள் கொடுங்கள்... நன்றாக ஒத்துழைப்பார்கள்... பணம் சம்பாதிக்க உங்களுக்கு உறுதுணையாக இருப்பார்கள்.

உங்கள் குடும்பத்திலே உள்ளவர்களுக்கும் சொந்தக்காரர்களுக்கும் இந்த மருந்தைக் கொடுங்கள் சந்தோசப்படுவார்கள். பாசமாக இருப்பார்கள். இந்த மருந்து உங்கள் கைவசம் இருந்தால் நீங்கள் எங்கே போனாலும் மகிழ்ச்சியைப் பரப்ப முடியும். இந்த மருந்தை நீங்கள் இன்னொருத்தரிடம் கொடுக்கும் போது... உங்களுக்கும் அது போதுமான அளவுக்குக் கிடைக்கிறது. உங்களை சந்தோசப்படுத்துகின்றது. புகழும் பணமும் சேர அது உதவுகின்றது.

இப்படியெல்லாம் சொல்கிறார் ஓர் உளவியல் நிபுணர் (எம்.ஆர். காப்மேயர்) புகழ்ச்சி என்கின்ற மருந்துக்கு அவ்வளவு சக்தி இருக்கின்றது. ஆல்ஃபிரேட் ஆட்லர் என்று ஒரு மனவியல் நிபுணர். அவர் ஒரு டாக்டர். அவர் என்ன செய்வாரென்றால்... கவலை, பயம், கலக்கம்... இவற்றுக்கெல்லாம் இரையான தன்னுடைய நோயாகிகளிடம் போய் அவர்களைப் பார்த்து,

“நீங்கள் எல்லாம் என்ன செய்ய வேண்டும் என்றால்... யாரையாவது திருப்தி செய்ய வேண்டும்... அல்லது யாருக்காவது மனமகிழ்ச்சியை உண்டாக்க வேண்டும்...என்று தொடர்ந்து நினைத்துக் கொண்டு இருங்கள்...”

அப்படி இருந்தால் 14 நாட்களிலே உங்கள் குறைபாடுகள் எல்லாம் நீங்கிவிடும் என்று சொல்வாராம். அதே மாதிரியும் ஆகிவிடுமாம். அடுத்தவர்களைத் திருப்திப்படுத்துவதற்கு என்ன வழி? பொதுவாக அடுத்தவர்கள் எங்களிடம் இருந்து என்னத்தை எதிர்பார்க்கிறார்கள்? நமது புகழ்ச்சியைத்தான் எதிர்பார்க்கிறார்கள். பாராட்டைத்தான் எதிர்பார்க்கின்றார்கள்.

வில்லியம் ஜேம்ஸ்– அமெரிக்க தத்துவஞானி, மனோதத்துவ நிபுணர். அவர் என்ன சொல்கிறார் தெரியுமா?“மனித இயல்பின் ஆழமான தத்துவம் என்னவென்றால் பாராட்டைப் பெறுவதற்காக ஏங்குவதுதான்” என்கின்றார்.

இந்த இரகசியத்தை நாம் புரிந்து கொண்டால் போதும். வாழ்க்கையில் வெற்றியடைவது சுலபம். இந்த விபரங்களையெல்லாம் எனக்கு வேண்டப்பட்ட ஒருத்தரிடம் சொல்லிக் கொண்டிருந்தேன்.

உடனே அவர்.. “சேர் நீங்கள் சொல்கின்ற பிரகாரம் நடந்து கொள்வதற்கு இப்பவே ஆரம்பித்து விடுகிறேன்” என்று சொல்லிவிட்டு ஒரு பேப்பரையும் பேனாவையும் எடுத்து வைத்துக் கொண்டு எழுத ஆரம்பித்து விட்டார். “என்ன எழுதுகின்றீர்கள்?”என்றேன். “ பாராட்டுக் கடிதம் எழுதுகின்றேன். போன வாரம் இந்தப் பத்திரிகையிலே வந்த சிறுகதையைப் பாராட்டி எழுதுகின்றேன். கதாசிரியரைப் புகழ்ந்து நாலு வார்த்தை எழுதப் போகின்றேன்...” என்றார்.

“ கதாசிரியர் யாரு? ” என்று கேட்டேன். அவர் மெதுவாக அருகில் வந்து என் காதோடு காதாக.. “ நான் தான் சேர் அது” என்றார்.

# கறுப்புப் பட்டியலில் பெயரிடப்பட்டவர்களை நீக்குமாறு

# மங்கள அழுத்தம் கொடுத்ததாக ஆணைக்குழுவில் வாக்குமூலம்

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பிற்கு ஆதரவளித்ததாக கறுப்புப் பட்டியலில் பெயரிடப்பட்டிருந்த இரண்டு பேரை, அதிலிருந்து நீக்குமாறு முன்னாள் அமைச்சர் மங்கள சமரவீர தனக்கு அழுத்தம் கொடுத்ததாக கிரித்தலே இராணுவ முகாமின் கட்டளை அதிகாரியாக செயற்பட்ட லெப்டினன் கேணல் ஷம்மி குமாரரத்ன தெரிவித்துள்ளார்.

2015 ஆம் ஆண்டு வெளிவிவகார அமைச்சராக மங்கள சமரவீர செயற்பட்டபோதே தனக்கு இவ்வாறு அழுத்தம் கொடுத்ததாக அவர் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார்.

அரசியல் பழிவாங்கல் குறித்து ஆராயும் ஜனாதிபதி ஆணைக்குழுவில் சாட்சியமளித்தபோதே அவர் இந்தத் தகவலை வெளியிட்டுள்ளார்.

இம்மானுவேல் அடிகளார் மற்றும் சுரேன் சுரேந்திரன் ஆகியோரின் பெயர்கள், தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பிற்கு ஆதரவளித்தவர்கள் எனக் கறுப்புப் பட்டியலில் பெயரிடப்பட்டிருந்ததாக அவர் குறிப்பிட்டுள்ளார்.



அவர்கள் இருவரும் தமது நண்பர்கள் எனவும் தாம் பிரித்தானியாவுக்கு விஜயம் மேற்கொண்ட காலப்பகுதியில் அவர்களுடன் நல்லுறவை பேணி இருந்ததாகவும் மங்கள சமரவீர தன்னிடம் கூறியதாக ஷம்மி குமாரரத்ன தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில், கறுப்புப் பட்டியலில் பெயரிடப்பட்டிருந்த குறித்த இரண்டு பேரை, அதிலிருந்து நீக்குமாறு முன்னாள் அமைச்சர் மங்கள சமரவீர தனக்கு அழுத்தம் கொடுத்ததாகவும் ஷம்மி குமாரரத்ன தெரிவித்துள்ளார். (ஐ-4)

# உலகில் ஆபத்தான படையணி வரிசையில் இலங்கை ஆழ ஊடுருவும் படையணி

(கொழும்பு)

இராணுவத்தின் எல்.ஆர்.ஆர்.பி.என்ற ஆழ ஊடுருவித் தாக்கும் படையணி உலகின் ஆபத்தான மூன்றாவது படையணி எனப் பட்டியலிடப்பட்டுள்ளது என மிலிட்டரி. இன்போ என்ற இணையத்தளம் இதனை தெரிவித்துள்ளது.

ஐக்கிய அமெரிக்காவின் கடற்படை உலகின் முதலாவது ஆபத்தான படையாக பட்டியலிடப்பட்டுள்ளது. இந்த நிலையில் முதல் 10 ஆபத்தான படைப்பிரிவுகளை மிலிட்டரி. இன்போ பட்டியலிட்டுள்ளது.

அதில்,ஐக்கிய அமெரிக்காவின் கடற்படையான **SEALs**, ரஷ்ய சம்மேளனத்தின் விசேட நடவடிக்கை படை, இலங்கையின் ஆழ ஊடுருவும் படை, ஐக்கிய அமெரிக்காவின் விசேட படை, பிரித்தானியா வின் விசேட வான்படை (**SAS**), இஸ்ரேலின் விசேட படை (சயீரேட் மட்கள்) **Sayeret Matkal**, பிரான்ஸின் தேசிய ஜெண்டமேறி ஊடுருவல் குழு (**Gendarmerie Intervention Group**), ஸ்பானியாவின் யுனிடாட் டீ ஒபேரசின்ஸ் எஸ்.பி.சி.அல்ஸ்) (**Unidad de Operaciones Especiales**), இந்தியாவின் கடற்படை பிரிவான மார்கோஸ் (**MARCOS**), பாகிஸ்தானின் இராணுவ விசேட சேவைக்குழு (**Pakistan Army Special Service Group**)என பட்டியலிடப்பட்டுள்ளது. (ஐ-2)

# மதத்திற்கு எதிரான செயற்பாடுகளால் முஸ்லிம்கள் அரசிலிருந்து விலகியுள்ளனர்

## பைசல் ஹாசிம் விளக்கம்

(கொழும்பு)

மதரீதியாக ஏற்றுக் கொள்ள முடியாத விடயங்கள் முன்னெடுக்கப்படுவதன் காரணமாகவே முஸ்லிம் மக்கள் இவ் அரசாங்கத்தை விட்டு விலகி செயற்படுவதாக பாராளுமன்ற உறுப்பினர் பைசல் ஹாசிம் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் பாராளுமன்றத்தில் இடம்பெற்ற 4 மாதங்களுக்கான இடைக்கால கணக்கறிக்கை தொடர்பான விவாதத்தில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

உடலை எரிப்பது என்பது தமது மார்க்கப்படி முடியாத விடயமாகும். இதனை முஸ்லிம் மக்கள் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். இதுபோன்ற செயற்பாடுகளினால் முஸ்லிம் மக்கள் இவ் அரசாங்கத்திடமிருந்து விலகுவதனைக் காணக் கூடியதாக உள்ளது.

எனினும் எமக்கு அரசாங்கத்தின் மேல் எவ்வித் கோபமுமில்லை. முஸ்லிம் மக்களினுடைய பிரச்சினைகளை இவ் அரசாங்கம் உணர்ந்து செயற்படுமாகவிருந்தால் தற்போது காணப்படும் இடைவெளியினைக் குறைத்துக் கொள்ள முடிமெனவும் 13,19



ஆம் சீர்திருத்தங்களில் குறைபாடுகள் காணப்பட்டால் சிறுபான்மை இனத்திற்கு பாதகம் விளைவிக்காத வண்ணம் இவற்றில் மாற்றங்கள் மேற்கொள்ளப்பட வேண்டுமென வும் பாராளுமன்ற உறுப்பினர் பைசல் ஹாசிம் தெரிவித்துள்ளார். (ஐ-6)

# நிரந்தர நியமனம் வழங்குமாறு 600 ஆசிரியர்கள் போராட்டத்தில்



(ஹற்றன்)

பெருந்தோட்ட உதவி ஆசிரியர்களாக 2015 ஆம் ஆண்டு நியமனம் பெற்ற சுமார் 600 ஆசிரியர்கள் தமக்கு இதுவரை நிரந்தர நியமனம் வழங்கப்படவில்லை என நுவரெலியாவில் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

2015 ஆம் ஆண்டு வர்த்தமானி அறிவித்தல் மூலம் ஆசிரிய உதவியாளர்களாக நியமிக்கப்பட்ட இவர்கள் தங்களுடைய மேற்படிப்பை பூர்த்தி செய்தவுடன் இவர்களை ஆசிரியர்களாக உள்வாங்குவது என தீர்மானிக்கப்பட்டு இவர்களுக்கான பயிற்சிகள் வழங்கப்பட்டன.

இவர்கள் கொட்டகலை யதன்சைட் ஆசிரியர் பயிற்சி கல்லூரி, அட்டாளைச்சேனை, மட்டக்களப்பு, யாழ்ப்பாணம் ஆகிய கல்லூரிகளில் தங்களுடைய பயிற்சிகளை 2018 ஆம் ஆண்டு நிறைவு செய்து கொண்டவர்கள் ஆவர்.

ஏனைய மாவட்டங்களில் ஆசிரிய உதவியாளர்களாக உள்வாங்கப்பட்டவர்கள் பயிற்சிகளை நிறைவு செய்த பின்பு அவர்கள் ஆசிரியர்களாக உள்வாங்கப்பட்டு அவர்களுக்கான நிலுவைத் தொகையும் வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

எனவே இந்த ஆசிரியர்கள் தங்களையும் ஆசிரியர்களாக உள்வாங்கி தங்களுடைய நிலுவைத் தொகையையும் தங்களுடைய நிரந்தர நியமனத்தையும் பெற்றுத் தருமாறு கோரிக்கை விடுத்து நேற்று முன்தினம் போராட்டத்தில் ஈடுபட்டனர். (ஐ-4)

# தனிமைப்படுத்தலிலிருந்து 630 பேர் வீடுகளுக்கு

(கொழும்பு)

தனிமைப்படுத்தலை நிறைவு செய்த மேலும் 630 பேர் நேற்று தமது இருப்பிடங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக கொவிட்-19 பரவலை தடுப்பதற்கான தேசிய செயற்பாட்டு மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

இதற்கமைய நாட்டில் இது வரை 33 ஆயிரத்து 41 பேர் தனிமைப்படுத்தலை நிறைவு செய்து தமது வீடுகளுக்கு திரும்பியுள்ளதாகவும் தற்போது நாடளாவிய ரீதியில் 70 மத்திய நிலையங்களில் 7 ஆயிரத்து 386 பேர் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாக இராணுவ ஊடகப் பேச்சாளர் பிரிகேடியர் சந்தன விக்கிரம சிங்க தெரிவித்துள்ளார். (ஐ-6)



# புலம்பெயர்ந்த ஈழத் தமிழர்கள் ஓர் உலகளாவிய ஆய்வு

54

## கலாநிதி முருகர் குணசிங்கம்

மேற்கூறிய அமைப்புகளது தமிழ் கற்கைநெறிப் பொறுப்பாளர்கள் மற்றும் ஆசிரியர்கள் அளித்த புள்ளி விபரங்களின்படி இப்பிரிவில் ஏறத்தாழ 500 மாணவர் தமிழ் மொழியைக் கற்கின்றனர்.

மேற்கூறியவற்றில் இருந்து கனடாவில் தமிழ்க் கல்வியை முன்னெடுப்போரது நோக்கங்கள் வேறுபட்டு இருப்பதையும் அதன் விளைவாக வெவ்வேறு பாடத்திட்டங்களைக் கொண்டு இருக்கின்ற நிலையையும் அறிந்து கொள்ளலாம்.

இதனால் பொதுவான பாட நூல்களையோ பயிற்சி நூல்களையோ ஆக்க முடியாதுள்ளதோடு ஒரு பொதுத் தேர்வையும் நடத்த முடியாத நிலையும் காணப்படுகின்றது.

மேலும் ஆசிரியர்களது வினைத்திறன் மற்றும் மொழித்திறன் மேம்பாட்டுப் பணிகளையும் மேற்கொள்ள முடியாத சூழல் உள்ளது.

இச்சிக்கலைத் தீர்ப்பதற்கு தமிழ் கற்பிப்போர் யாவரும் ஒன்றுகூடி ஒரு பொதுவான பாடத்திட்டத்தையும் பாட நூல்களையும் உருவாக்கவும் கற்பிக்கவும் திட்டமிட்டுச் செயலாற்ற வேண்டும்.

கனடாவில் சீன மொழியைக் கற்பிப்போருக்குச் சீன அரசே பாடத்திட்டங்களை ஆக்கிப் பாடநூல்களை அச்சிட்டு அனுப்பி வருகின்றது.

### தமிழ்க் கல்வியால் கிடைக்கும் நன்மைகள்

கனடாவில் விருப்ப அடிப்படையில் இளம் மழலையர் வகுப்பு முதல் பல்கலைக்கழகம் வரை தமிழைக் கற்கும் வாய்ப்புள்ளது.

இரண்டாம் நிலைக் கல்வியில் பெற வேண்டிய முப்பது திறமைத் தேர்ச்சிகளில் நான்கைத் தமிழில் பெறலாம்.

பல்கலைக்கழக நுழைவுக்குத்தமிழை ஒரு பாடமாகவும் சேர்த்துக் கொள்ளலாம். எனினும் இதுபற்றிய விளக்கம் இங்கு வாழும் தமிழரிடம் தெளிவாக இல்லை.

கனடாவில் ஒரு மாணவன் பன்னிரண்டாம் வகுப்பில் கற்கும் ஆறு பாட மதிப்பெண்களைக் கூட்டியே பல்கலைக் கழக நுழைவு வழங்கப்படுகின்றது.

இந்த ஆறு பாடங்களில் ஒன்றாகத் தமிழைச் சேர்க்கலாம். இதன்மூலம் மதிப்பெண்ணைக் கூட்டி மாணவர் பல்கலைக்கழகம் செல்லும் வாய்ப்பையும் அங்கு விரும்பும் துறையைத் தெரியும் வாய்ப்பையும் கூட்டலாம். மருத்துவம், பொறியியல், தொழில்நுட்பம், வணிகம் உள்ளிட்ட எந்தத் துறை நுழைவுக்கும் தமிழை ஒரு பாடமாகச் சேர்க்கலாம்.


இவ்விடத்தில் கணிதம், இயற்பியல் (பௌதீகம்), வேதியியல் (இரசாயனம்), உயிரியல், கணக்கியல் முதலிய பாடங்களுக்கு வழங்கப்படுவதற்கு ஒப்பான மதிப்பு தமிழுக்கும் வழங்கப்படுகின்றது.

கனடாவில் வழங்கப்படும் இந்த வாய்ப்பு தமிழர் தாயகங்களான தமிழ் நாட்டிலோ இலங்கையிலோ கூட இல்லை என்பது உளங்கொள்ளத்தக்கது.

கனடா பல்கலைக்கழகங்களில் பல்வேறு புலமைப் பரிசில் வழங்கும் திட்டங்கள் உள்ளன. இவற்றுக்கு மாணவரைத் தெரிவு செய்யும் பொழுது ஒன்பது முதல் பன்னிரண்டாம் வகுப்பு வரை மாணவர் பெற்ற மொத்த மதிப்பெண்களே கருத்திற் கொள்ளப்படுகின்றன.

தமிழ் மணவர் நான்கு தமிழ்ப் பாடங்களைக் கற்பதன் மூலம் மொத்த மதிப்பெண்களை அதிகரித்துப் புலமைப் பரிசில் பெறும் வாய்ப்பையும் கூட்டிக் கொள்ள முடிகின்றது.

இவை எல்லாவற்றுக்கும் மேலாகத் தமிழ், தமிழர் பற்றிய அறிவை வளர்ப்பதோடு தமிழ்ப் பண்பாட்டு விழுமியங்களை அறியவும் பேணவும் பின்பற்றவும் வாய்ப்பு ஏற்படுகின்றது.



தமிழ் அறிந்த பிள்ளைகள், பெற்றாரோடும் தமிழ்ச் சமூகத்தோடும் இணைந்து வாழ்வதோடு கல்வியிலும் மேம்பட்டு விளங்குவதைக் கனடாவில் காண்கின்றோம்.

தமிழ் கற்பதால் மேற்கூறிய நன்மைகள் உண்டு என்பதைக் கல்வியில் மேம்பட்ட நிலையில் உள்ள பெற்றோர் மட்டுமே உணர்ந்து இருக்கின்றனர்.

எனவே இவர்கள் தம் பிள்ளைகளைத் தமிழ் வகுப்புகளில் சேர்த்து வருகின்றனர். பொதுநிலைப் பெற்றோர் தமிழ் கற்பதனால் கிடைக்கும் நன்மைகளை அறியாத நிலையில் "கனடாவில் தமிழைப் படித்து என்ன பயன்?" என்று எண்ணித் தம் பிள்ளைகளைத் தமிழ் வகுப்புகளில் சேர்க்காது விட்டு விடுகின்றனர்.

கனடா தமிழ்ச் சமுதாய மேம்பாடு கருதிச் செயற்படும் ஊடகங்கள், தமிழ்க் கல்வியால் கிடைக்கும் நன்மைகள் பற்றிய தெளிவைப் பெற்றோருக்கு ஏற்படுத்தி அவர்களது பிள்ளைகளைத் தமிழ் வகுப்புகளில் சேர்க்க ஊக்குவிக்க வேண்டும்.

தமிழின் பெயரால் இயங்கும் அமைப்புகள் இதற்குத் துணை நிற்க வேண்டும்.

### கற்பித்தல் முறையில் உள்ள முரண்பாடுகள்

கனடாவில் இப்பொழுது தமிழ் கற்பிக்கும் ஆசிரியர்களுள் பெரும்பாலனோர் தமிழ் கற்பிப்பதற்கு வேண்டிய முறையான கல்வித் தகுதி பெற்றவர் அல்லர்.

அவர்கள் இலங்கை அல்லது தமிழ் நாட்டில் ஏதோ ஒரு பாடத்தைக் கற்பித்தோர் மட்டுமே. இவர்களுள் சிறுபான்மையோர் எங்கும் எதுவும் கற்பிக்காத வரும் ஆவர்.

இவர்கள் தாம் சொல்வதைக் கேட்டு மாணவர் கற்க வேண்டும் என்ற எதிர்பார்ப்போடு கற்பிக்க வருபவர்கள் ஆவர்.

கனடாவில் தமிழ் கற்க வரும் மாணவரோ மாணவர் மையக் கல்விக்குப் பழக்கப்பட்டோர் ஆவர். இம்மாணவர் தமிழ் வகுப்பிலும் இதையே எதிர்பார்க்கின்றனர்.

இப்பொழுது தமிழ் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு இம்முறைகளில் பழக்கம் அதிகம் இல்லை.

இம்முறைகளைப் பின்பற்ற அவர்கள் விளைவதும் இல்லை. இதன் விளைவாக குறைந்தது 20 வீதமான மாணவர்கள் கல்வியாண்டின் இடையிலே விலகி விடுகின்றனர். இவர்கள் மீண்டும் தமிழ் வகுப்பு எதிலும் இணைவது இல்லை.

கனடாவுக்கு வரும் குடிவரவாளருக்கு ஆங்கிலம் கற்பிக்கும் ஆசிரியர்கள் "ஆங்கிலத்தை இரண்டாம் மொழியாகக் கற்பித்தல்" என்னும் பயிற்சி நெறியில் வெற்றி பெறுவது கட்டாயம் ஆக்கப்பட்டுள்ளது.

இதன் விளைவாக கனடாவில் ஆங்கில ஆசிரியராகப் பணிபுரிவோர் மேற்கண்ட பயிற்சி நெறியைக் கற்று முடித்த பின்பே ஆங்கிலத்தைக் கற்பிக்கின்றனர்.

அதுபோலத் தமிழ் ஆசிரியருக்கும் தமிழில் குறிக்கப்பட்ட தகைமை தேவையென வரையறை செய்தாக வேண்டும். இதன் வழி கற்பித்தலில் எழும் சிக்கலையும் மொழியறிவு போதாது என்ற குறையையும் எளிதாகத் தீர்க்கலாம்.

அரசுக் கல்விச் சபைகள், கனடா தமிழ்க் கல்லூரி, அறிவகம் ஆகிய அமைப்புகள் தத்தம் நிறுவனங்களில் பணிபுரியும் தமிழ் ஆசிரியர்களுக்கு ஆண்டில் இரண்டு அல்லது மூன்று நாட்கள் பணிக்காலப் பயிற்சி அளிக்கின்றன.

இப்பயிற்சிப் பட்டறைகள் கட்டாயமானவை அல்ல என்பதால் தமிழ் கற்பிக்கும் அனைத்து ஆசிரியர்களும் இதில் கலந்து கொள்வது இல்லை.

பணிக்காலப் பயிற்சிப் பட்டறைகளில் கலந்து கொள்வது இல்லை. பணிக்காலப் பயிற்சிப் பட்டறைகளில் கலந்து கொள்வோரை ஊக்குவிக்கும் நோக்கத்துடன் ரொறன்ரோக் கல்விச் சபையானது பயிற்சிப் பட்டறைகளில் கலந்து கொள்வோருக்கு ஊதியம் வழங்கத் தொடங்கி உள்ளமை குறிப்பிடத்தக்கது.

முற்கூறிய அமைப்புகளுக்கு வெளியே கற்பிப்போருக்குப் பயிற்சிகள் எதுவும் வழங்கப்படுவது இல்லை.

அரசுக் கல்விச் சபைகள், பணிக்காலப் பயிற்சிப் பட்டறைகளை ஆங்கில மொழியில் நடத்துவதால் தமிழ் ஆசிரியர்களுக்குப் பெரிய பயன் விளைவது இல்லை என்று கூறப்படுகிறது.

அரசுக் கல்விச் சபைகள் தமிழ் ஆசிரியர் தெரிவுக்கு ஆங்கிலத்திலேயே நேர்முகத் தேர்வை நடத்துகின்றன. இந்நிலையில் ஆசிரியரது தமிழ் அறிவை அளவிட வழி இல்லை.

ஆங்கிலப் புலமை உள்ளோர் தமிழ் ஆசிரியராகத் தெரியப்படும் வாய்ப்பே கூடுதலாக உள்ளது. இவ்வாறு தெரிவு செய்யப்படுவோரது தமிழ் அறிவுப்புலமை குறைவாக உள்ளது என்ற குற்றச்சாட்டும் உண்டு.

இச்சிக்கலைத் தீர்க்க தமிழ் கற்பிக்க விளைவோரது தமிழ் அறிவை அளவிட்டு அறிவதற்கான அணுகுமுறையைக் கொண்டு வருவதோடு பயிற்சிப் பட்டறைகளைக் கட்டாயம் ஆக்கி அவற்றைத் தமிழில் நடத்த வேண்டும்.

கனடா தமிழ் வகுப்பு அறைகள் பன்னிலை மொழியறிவு கொண்ட மாணவரைக் கொண்டு இருப்பது மற்றுமொரு முதன்மையான சிக்கல் ஆகும்.

ஒரு தமிழ் வகுப்பில் இருபத்தைந்து மாணவர்கள் இருந்தால் அதில் ஐவர் இலங்கையில் இருந்து அண்மையில் கனடாவுக்கு வந்தவராக இருப்பதோடு தமிழ் வழியிலேயே கல்வி கற்றவராகவும் இருப்பர்.

இன்னுமொரு ஐவர் தமிழ்நாட்டில் இருந்து வந்து இருப்பர். இவர்கள் ஆங்கில வழிக் கல்வியோடு தமிழை ஒரு பாடமாகக் கற்று இருப்பர். மேலுமொரு ஐவர் ஐரோப்பிய நாடுகளில் பிறந்து அங்கு தமிழ் கற்றவராய் இருப்பர். இன்னுமொரு பத்துப்பேர் கனடாவில் பிறந்தவராக இருப்பர்.

(தொடரும்)

# வதந்திகளுக்கு முற்றுப்புள்ளி வைத்தார் கிம் சூறாவளி தொடர்பான எச்சரிக்கைக்கூடத்தில் ஆஜர்

(பியாங்யாங்)

கொரோனா வைரஸ்தொற்று மற்றும் 'பாவி' சூறாவளி ஆகியவற்றால் ஏற்படக்கூடும் அபாயங்களை எதிர்கொள்ள தயார்படுத்திக் கொள்ளுமாறு, வடகொரிய ஜனாதிபதி கிம் ஜாங் உன் அந்நாட்டு அதிகாரிகளுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளார்.

கிம்மின் உடல்நலம் குறித்த வதந்திகள் மற்றும் அவர் தனது சகோதரியான கிம் ஜாங்கிற்கு அதிகாரத்தை பகிர்ந்தளித்தார் போன்ற செய்திகள் வெளியான நிலையில், கட்சிக்கூட்டத்தில் கிம் ஜாங் உன் கடந்த செவ்வாய்க்கிழமை பங்கேற்றுள்ளார்.

பொலீட்புரோ கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய கிம், 'வைரஸ் தொற்று பரவாமல் இருக்க அதிகாரிகள் எடுத்த முயற்சியில் சில குறைபாடுகள்' இருப்பதாக தெரிவித்தார்.

இதுவரை வடகொரியாவில் கொரோனா தொற்று இருப்பது உறுதி செய்யப்படவில்லை என்றாலும் வைரஸ் பரவல் ஏற்பட்டால் அது அங்கு பெரும் தாக்கத்தை உண்டாக்கும் என்று கருதப்படுகிறது. அத்துடன், இந்த வார இறுதியில் பாவி என்று பெயரிடப்பட்டுள்ள சூறாவளி வடகொரியாவை தாக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

வடகொரியாவில் இதுவரை எந்த தொற்று பாதிப்பும் ஏற்படவில்லை என அந்நாடு கூறி வந்தாலும் உலகநாடுகளுக்கு இது தொடர்பாக சந்தேகம் நீடித்து வருகிறமை குறிப்பிடத்தக்கது. (ஜ)



# சட்டவிரோதமாக தங்கியிருந்த 13 பேர் கைதாகினர்

(கொழும்பு)

கல்கிஸை - சேரம் வீதி பகுதியிலுள்ள ஹோட்டலொன்றில் வைத்து விசா அனுமதிப்பத்திரம் இல்லாமல் சட்டவிரோதமாக நாட்டில் தங்கியிருந்த 13 வெளிநாட்டவர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

குடிவரவு குடியகல்வு விதிமுறைகளை மீறும் விதத்தில் விசா அனுமதிப் பத்திரமின்றி வெளிநாட்டவர்கள் நாட்டில் தங்கியிருப்பதாக பூகொட விசேட அதிரடிப்படையினருக்கு கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலுக்கமைய நேற்று முன்தினம் புதன்கிழமை மாலை முன்னெடுக்கப்பட்ட திடீர் சுற்றிவளைப்பின் போதே இவர்கள் கைது செய்யப்பட்டனர்.

சந்தேகநபர்களில் 9 வெளிநாட்டுப் பெண்களும் 4 வெளிநாட்டு ஆண்களும் உள்ளடங்குகின்றனர். கைது செய்யப்பட்டவர்களிடம் விசாரணைகளை முன்னெடுத்த போது ஒரு சந்தேகநபரிடமிருந்து சட்டவிரோதமாக இலங்கைக்கு கொண்டு வரப்பட்ட 10.300 சிகரெட்டுக்கள் கைப்பற்றப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். சந்தேகநபர்கள் மேலதிக விசாரணைக்காக கல்கிஸை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். (ஜ-4)

# பாராளுமன்ற அலுவல்கள் பற்றிய குழு உறுப்பினர்களின் பெயர்கள் அறிவிப்பு!



(கொழும்பு)


26 பாராளுமன்ற உறுப்பினர்களைக் கொண்ட பாராளுமன்ற அலுவல்கள் பற்றிய குழு உறுப்பினர்களின் பெயர்கள் நேற்று வியாழக்கிழமை காலை சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்த்தனவினால் பாராளுமன்றத்தில் அறிவிக்கப்பட்டது. இதன்படி, பாராளுமன்ற நிலையியற் கட்டளையின்படி சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்த்தன தவிசாளராக செயற்படுவார் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், பிரதிச் சபாநாயகர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய, பாராளுமன்ற குழுக்களின் பிரதித் தவிசாளர் அங்கஜன் இராமநாதன், சபை முதல்வர் மற்றும் அமைச்சர் தினேஷ் குணவர்த்தன, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, ஆளும் கட்சியின் முதற்கோலாசான் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ, எதிர்க்கட்சியின் முதற்கோலாசான் லக்ஸ்மன் கிரியெல்ல ஆகியோர் அதிகாரபூர்வமாக அங்கத்துவத்தை பெறுவர்.

இவர்களுக்கு மேலதிகமாக சமல் ராஜபக்ஷ, நிமால் சிறிபால டி சில்வா, பேராசிரியர் ஜி.எல் பீரிஸ், டக்ளஸ் தேவானந்தா, டலஸ் அழகப்பெரும, விமல் வீரவன்ச, மகிந்த அமரவீர, வாசுதேவ நாணயக்கார, பிரசன்ன ரணதுங்க, மகிந்த சமரசிங்க, கயந்த கருணாதிலக்க, ரவூப் ஹக்கீம், அநுரகுமார திசாநாயக்க, டிலான் பெரேரா, றிசாத் பதியுதீன், ஆர்.எம் ரஞ்சித் மத்தும பண்டார, மனோ கணேசன், எம்.ஏ.சுமந்திரன், அலி சப்ரி ரஹீம் உள்ளிட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் செயற்படுவர் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ஜ-4)



# நாட்டிற்கு ஆபத்தான விடயங்களை அரசாங்கம் செயற்படுத்தக் கூடாது



## 19 ஆவது திருத்தம் குறித்து எரான்

(கொழும்பு)

**மூன்றில் இரண்டு பெரும்பான்மையைத் தமக்கு மக்கள் பெற்றுக் கொடுத்துள்ளனர் என்று கூறிக் கொண்டு நாட்டுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் திருத்தங்களை கொண்டு வருவதற்கு அரசாங்கம் முயற்சிக்கக் கூடாது என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் எரான் விக்கிரமரத்ன தெரிவித்தார்.**

ஐக்கிய மக்கள் சக்தியின் தலைமையகத்தில் நேற்று முன்தினம் புதன்கிழமை இடம் பெற்ற விசேட ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

19 ஆவது அரசியலமைப்புத் திருத்தத்தின் மூலம் பிரஜைகளின் உரிமைகள் பலப்படுத்தப்பட்டுள்ளன. தகவலறியும் உரிமையும் பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளது. வெளிநாட்டவர்கள் இந்நாட்டை ஆட்சி செய்யும் போது ஏற்படும் சிக்கல் நிலைமைகளைக் கருத்திற் கொண்டே இரட்டைப் பிரஜாவுரிமை இருப்பவர்கள் நாட்டின் ஆட்சிப் பொறுப்பை ஏற்க முடியாது என்ற ஏற்பாடு இந்தத் திருத்தத்தின் ஊடாக கொண்டுவரப்பட்டுள்ளது.

இதேவேளை நாட்டின் நிர்வாகப்பிரிவுகள் அரசியல் ஆதிக்கத்திற்கு உள்ளாகியிருந்தமையினால், அதனை நிவர்த்தி செய்வதற்காகச் சுயாதீன ஆணைக் குழுக்கள் உருவாக்கப்பட்டன. பாராளுமன்றம் நிறைவேற்று அதிகாரம் மற்றும் நீதிமன்றத்தின் சுயாதீனத் தன்மையினூடாகவே நாட்டின் சுயாதீனத் தன்மையும் பாதுகாக்கப்படும். இவற்றை நோக்காக கொண்டே 19 ஆவது அரசியலமைப்புத் திருத்தம் கொண்டுவரப்பட்டது.

அதற்கமைய 19 ஆவது அரசியலமைப்பு திருத்தத்தின் ஊடாகக் கொண்டுவரப்பட்ட சுயாதீன ஆணைக்குழுக்கள் தொடர்பில் ஜனாதிபதி எந்த தலையீடுகளையும் செய்ய முடியாது. ஆலோசனைகளை மாத்திரமே முன்வைக்க முடியும். அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் அரசசாரா நிறுவனங்களைச் சேர்ந்தவர்கள் சுயாதீன ஆணைக் குழுவுக்கு நியமிக்கப்பட்டதனாலேயே சிக்கல்கள் ஏற்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார். இவர்கள் அனைவருமே 19 ஆவது அரசியலமைப்புத் திருத்தத்திற்கு ஆதரவாக கையுயர்த்தியவர்கள் தற்போது மாறுபட்ட கருத்துகளைக் கூறிவருகின்றார்கள்.

இந்நிலையில் வெளிநாட்டுப் பிரஜை ஒருவர் நாட்டின் தலைமைத்துவ பொறுப்பிற்கு நியமிக்கப்பட்டால், அவர் எந்த நாட்டுக்கு ஆதரவாகச் செயற்படுவார் என்பதை உறுதியாகக் கூற முடியாது. அதனாலேயே இரட்டைப் பிரஜாவுரிமை உள்ளவர்களுக்குப் பாராளுமன்ற உறுப்புரிமையையோ, அமைச்சுப் பொறுப்புகளையோ அல்லது பிரதமர் பொறுப்பையோ பெற்றுக் கொள்ள முடியாது என்ற ஏற்பாடு கொண்டுவரப்பட்டுள்ளது. இதனை மாற்றுவதற்கே அரசாங்கம் முயற்சிக்கின்றது.

அரசாங்கத்திற்கு மக்கள் மூன்றில் இரண்டு பெரும்பான்மையைப் பெற்றுக் கொடுத்துள்ளனர் என்பதற்காக நாட்டுக்குப் பொருத்தமற்ற சட்டங்களை உருவாக்க அரசாங்கம் முயற்சிக்க முடியாது.

தங்களுக்கு பெரும்பான்மை கிடைக்கப் பெற்றுள்ளது என்று குறிப்பிட்டு "நாட்டிலுள்ள ஆண்கள் பெண்களைக் கொலை செய்யலாம்" என்ற ஒரு சட்டத்தைக் கொண்டு வருவதற்கு அனுமதி வழங்க முடியுமா? இந்நிலையில் மக்களினதும் நாட்டினதும் சுயாதீனத் தன்மைக்குப் பாதிப்பை ஏற்படுத்தும் வகையிலான திருத்தங்களை கொண்டு வருவதற்கு இடமளிக்க முடியாது என அவர் தெரிவித்தார். (ஐ-4)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2097

### முருகன்

நம்பிக்கை போல் ஒரு நண்பனும் இல்லை



பயத்தை போல் ஒரு பகைவனும் இல்லை

### ரம்யா

செடியில் பூக்கும் மலரை விட



நொடியில் பூக்கும் மழலையின் புன்னகை அழகு

### சுகன்யா

அதிக ஆசை இல்லாதவர்கள் மட்டும் தான் அதிக சந்தோசத்துடன் வாழ்கிறார்கள்.



### கௌசிக்

வலியும் வேதனையும் சொன்னால் புரியாது!



பட்டவனுக்குத்தான் தெரியும்!

### பிரதீப்

முடியாது என எதையும் விட்டு விடாதே!



முயன்று பார்...நிச்சயம் முடியும்!

### கனகா

புன்னகை என்ற முகவரி உங்களிடம் இருந்தால்...



நண்பர்கள் என்ற கடிதம் உங்களுக்கு வந்து கொண்டே இருக்கும்...

**நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.**

# வைத்தியர் ஷாபியின் சத்திரசிகிச்சை விவகாரம்;

# சடலத்தை தோண்டி எடுக்க உத்தரவு



(குருநாகல்)

குருநாகல் போதனா வைத்தியசாலையின் பிரசவ மற்றும் மகப்பேற்று பிரிவின் வைத்தியராக இருந்த சேகு சிஹாப்தீன் மொஹம்மட் ஷாபி சத்திர சிகிச்சை செய்த தாயொருவர் பிரசவித்ததாகக் கூறப்படும் சிசு, இரு நாட்களில் உயிரிழந்தமை தொடர்பில் சந்தேகம் நிலவுவதாக, தாயொருவர் முன்வைத்துள்ள முறைப்பாட்டுக்கு அமைய குருநாகல் பிராந்திய குற்றத் தடுப்புப் பிரிவு விசேட விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.


இந்நிலையில் குறித்த விடயத்தை குருநாகல் நீதவானுக்குப் பிரத்தியேக வழக்காகத் தாக்கல் செய்துள்ள பொலிஸார், அவ்வழக்கில் சந்தேக நபர்கள் எவரையும் பெயரிடாத போதும், உயிரிழந்த சிசுவின் சடலத்தை மீள அடக்க ஸ்தலத்திலிருந்து தோண்டி எடுத்து, பிரேத பரிசோதனைக்குட்படுத்த நேற்று முன்தினம் அனுமதி பெற்றுக்கொண்டனர்.

அதன்படி இன்று வெள்ளிக்கிழமை குறித்த சிசுவின் சடலத்தைத் தோண்டி எடுக்குமாறு குருநாகல் நீதவான் சம்பத் ஹேவாவசம் உத்தரவிட்டார் (ஜ-4)



# ஆன்மீகம்

## நம்மிடமே இருப்பதை வெளியே போய் தேடுவானேன்?



“துன்பம் நேர்கையில் யாழ் எடுத்து நீ இன்பம் சேர்க்க மாட்டாயா?” என்று பாடுகிறார் பாவேந்தர் பாரதிதாசன். உலக உயிர்கள் அனைத்துமே இன்பத்தை நோக்கியே இயங்குகின்றன. இன்பம் விளைவதே உயிர்களின் இயல்பு என்கிறது தொல்காப்பியம். ஐந்தறிவு வரை உள்ள உயிரினங்கள் இன்பத்தை ஓரளவு முழுமையாகவே அனுபவித்து வருகின்றன. அதனால்தான் கவிஞர்கள் பலர் பாடுகின்றார்கள்: ‘மனிதனே! நீ கிளி போல பேசு! குயில் போல பாடு ! மயில் போல ஆடு! மான் போல துள்ளு!’ ஆனால், மனிதர்களில் பலர் கன்னத்தில் கை வைத்துக் கொண்டு கப்பல் கவிழ்ந்தது போலல்லவா கவலையோடு காட்சி தருகிறார்கள். அவர்களின் ‘கவலைப் பயிர்’ செழித்து வளர அவர்களின் இல்லத்தரசிகளும் உறுதுணையாகி உதவுகிறார்களே!

‘எதிர்வீட்டுக்காரரும், நீங்களும் நன்றாகப் படித்தீர்கள்! ஒரே இடத்தில்தான் உத்தியோகமும் பார்க்கிறீர்கள். அவர் வீட்டை எவ்வளவு விசாலமாக, அழகாகக் கட்டியிருக்கிறார்! நீங்களும் வீடு என்ற ஒன்றை ஏதோ பேருக்கு அல்லவா கட்டியிருக்கிறீர்கள்?’ மனைவியின் ஏக்கப் பெருமூச்சும், ஏளனப் பேச்சும் கணவரின் துயரத்திற்கு மேலும் தூபம் போடுகிறது. வசதி நிறைந்தவர்களின் கார், பங்களா, தோட்டம், வாழ்க்கைமுறை இவற்றைப் பலர் தங்கள் நிலையோடு ஒப்பிட்டுப் பார்த்தால் ஏக்கமே மிஞ்சும். வசதியானவர்களோ, தங்களைவிட வசதியானவர்களோடு ஒப்பிட்டு குமைகிறார்கள். ‘உன்னை விட அதிகமாகப் படித்தவனோடு உன்னை ஒப்பிட்டுப் பார்த்து உன் கல்வி அறிவைப் பெருக்கிக் கொள். உன்னை விட வசதி குறைந்தவரின் வாழ்வைப் பார்த்து நீ பெற்ற வாழ்க்கை வசதிகளில் மகிழ்ச்சி கொள்,’ என்கிறார் குமரகுருபரர்.

**‘தம்மின் மெலியாரை நோக்கு தமது உடைமை**

**அம்மா பெரிதென்று அகம் மகிழ்க! தம்மின்**

**கற்றாரை நோக்கிக் கருத்து அழிக!**

**எற்றே இவர்க்கு நாம் என்று!**

அருளாளர் குமரகுருபரரின் அறிவுரைதான் எவ்வளவு அற்புதமானது!

காஞ்சிப்பெரியவர் கூறுகிறார்: “இப்போது அரசாங்கம் மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதாக அடிக்கடி கூறி வருகின்றது. அதற்காகவே பல பொருட்களை விநியோகிக்கும் திட்டங்களும் வகுக்கப்படுகின்றன. உண்மையில் வாழ்க்கைத் தரம் என்பது வஸ்துக்களின் பெருக்கத்தில் இல்லை. தேவைகளை அதிகமாக்கி அவற்றிற்காக ஆலாப் பறப்பதால் நிறைவு ஒருவருக்கும் கிட்டிவிடாது. நாம் மேல் நாட்டுக்காரர்கள் மாதிரி போக, போக்கியங்களுக்காகப் பறக்கிறோம். போகத்தின் உச்சிக்குப் போன மேல் நாட்டுக்காரர்களோ அதில் நிறைவே இல்லை என்பதால் நம்முடைய யோகத்திற்கு, வேதாந்தத்திற்கு, பக்திக்குக் கூட்டம் கூட்டமாக வந்து கொண்டிருக்கிறார்கள். இதைப் பார்த்துக்கூட நாம் அறிவு பெறவில்லை என்றால் அது நம் அதிர்ஷ்டக் குறைவே”!

ஆடம்பரமாக வாழ, அதிகமாகத் தேவைகளைப் பெருக்கிக்கொண்டு அதற்காகவே சம்பாதிப்பதைத் தேடிப் போவதால் மனிதர்களின் நிம்மதி குலைந்து விடுகிறது.

**‘இன்பம் எங்கே! இன்பம் எங்கே! என்று தேடு - அது**

**எங்கிருந்த போதும் அதை நாடி ஓடு!’**

என்று முதலில் பாடுபவன் கடைசியில் இப்படித்தான் பாடுவான்:

**எங்கே நிம்மதி! எங்கே நிம்மதி!**

**அங்கே எனக்கோர் இடம் வேண்டும்!**

ஒரு காலனியில் அறுபது வீடுகள். அவர்கள் தாங்கள் வழிபட எல்லோருமாக நன்கொடை தந்து காலனிக்கென ஒரு கோயிலைக் கட்டிக் கொண்டார்கள்.

(தொடரும்)

# செய்தித்துளிகள்

## 211 பேர் நாடு திரும்பினர்

(கொழும்பு)

ஹொங்கொங், கட்டார் மற்றும் குவைத் ஆகிய நாடுகளிலிருந்து மொத்தமாக 211 இலங்கையர்கள் நாடு திரும்பியுள்ளனர்.

அதன்படி ஹொங்கொங்கிலிருந்து ஸ்ரீலங்கா எயார்லைன்ஸ் நிறுவனத்துக்குச் சொந்தமான யு.எல்.-1425 என்ற விமானத்தில் மொத்தமாக 42 இலங்கையர்கள் நேற்று முன்தினம் இரவு 8.30 மணியளவில் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்தனர்.

மேலும் கட்டார், டோஹாவிலிருந்து கட்டார் எயார்வேஸ் நிறுவனத்துக்குச் சொந்தமான கியூ.ஆர்.-668 என்ற விமானத்தில் 12 இலங்கையர்கள் நேற்று அதிகாலை 1.45 மணியளவில் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தனர்.

அதேபோல் குவைத்திலிருந்து ஸ்ரீலங்கா எயார்லைன்ஸ் விமான நிறுவனத்துக்குச் சொந்தமான யு.எல்.-230 என்ற விமானத்தில் 157 இலங்கையர்கள் நேற்று அதிகாலை 2.36 மணிக்கு கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தனர்.

விமான நிலையத்தை வந்தடைந்த அனைவரையும் பி.சி.ஆர்.பரிசோதனைகளுக்குட்படுத்தும் செயற்பாடுகளும் முன்னெடுக்கப்பட்டன. (ஜ-4)

## சுருட்டு விற்பனை நிலையங்கள் சுற்றிவளைப்பு!

(ஹற்றன்)

ஹற்றன், மஸ்கெலியா ஆகிய நகரங்களில் கலால் திணைக்கள அதிகாரிகளினால் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் அனுமதிப்பத்திரமின்றி சட்டவிரோதமான முறையில் நடத்தப்பட்டுவந்த 30 இற்கு மேற்பட்ட விற்பனை நிலையங்கள் அடையாளம் காணப்பட்டு அவற்றுக்கு எதிராக நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளன.

கடந்த 24 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட இச்சுற்றிவளைப்பு நடவடிக்கையின் போது சட்டவிரோதமான முறையில் பொதி செய்யப்பட்ட சுருட்டுகளை விற்பனை செய்த வியாபாரிகளுக்கு 3 ஆயிரம் தொடக்கம் 5 ஆயிரம் வரையில் தண்டப் பணம் விதிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் சட்டவிரோதமான முறையில் பொதி செய்யப்பட்ட சுருட்டுகள் கலால் திணைக்கள அதிகாரிகளினால் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன. (ஜ-4)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | மருதனார்மடம் ரூபா | சாவகச்சேரி ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 150 | 140 | 120 | 120 |
| உருளைக்கிழங்கு | 120 | 125 | 120 | 140 |
| பச்சைமிளகாய் | 200 | 160 | 200 | 200 |
| தக்காளி | 100 | 110 | 100 | 120 |
| மரவள்ளிக்கிழங்கு | 120 | 110 | 110 | 100 |
| கோவா | 140 | 170 | 150 | 160 |
| கரட் | 120 | 160 | 170 | 200 |
| பூசணி | 100 | 100 | 100 | 100 |
| புடோல் | 100 | 100 | 60 | 100 |
| வாழைக்காய் | 140 | 120 | 120 | 120 |
| சின்ன வெங்காயம் | 120 | 100 | 150 | 140 |
| பெரிய வெங்காயம் | 120 | 125 | 120 | 120 |
| பாகற்காய் | 180 | 200 | 170 | 200 |
| வெண்டிக்காய் | 60 | 60 | 60 | 80 |
| கருணைக் கிழங்கு | 150 | 180 | 140 | 160 |
| பயற்றங்காய் | 120 | 140 | 110 | 120 |
| லீக்ஸ் | 100 | 100 | 100 | 100 |
| பீற்றூட் | 80 | 100 | 100 | 120 |
| கறிமிளகாய் | 250 | 300 | 280 | 300 |
| முருங்கைக்காய் | 180 | 200 | 170 | 200 |
| போஞ்சி | 350 | 340 | 280 | 300 |
| கத்தரிதம்புள்ள | 120 | 100 | 100 | 100 |
| கீரை - 1 பிடி | 50 | 25 | 50 | 40 |
| தேசிக்காய் | 100 | 100 | 100 | 120 |
| தேங்காய் (ஒன்று) | 70 | 75 | 80 | 60-80 |
| இராசவள்ளி | — | — | 150 | — |
| வெங்காயப்பூ | 200 | 200 | 150 | 200 |
| முள்ளங்கி | 80 | 80 | 60 | 80 |
| பொன்னாங்காணி | 50 | 25 | 40 | 30 |
| வல்லாரை | 20 | 50 | 20 | 20 |
| ஈரப்பலா | 60 | 70 | 60 | 80 |




## கூனனை ஏமாற்றிய கதை

ஒருமுறை ராஜகுருவை தெனாலிராமன் அவமானப் படுத்தி விட்டார். இராமன் மீது பொறாமை கொண்ட ராஜகுரு இந்தக் குற்றச்சாட்டை அரச வைக்குக் கொண்டு வந்து மன்னனையும் தூண்டி விட்டார்.

ராஜகுருவை அவமதித்தது மன்னனையே அவமதித்ததாகும். எனவே இதற்கு மன்னிப்பே கிடையாது. எனவே மன்னர் ராஜகுருவையே தண்டனையளிக்கும்படி கேட்டுக் கொண்டார்.

உடனே ராஜகுரு தெனாலி ராமனை கழுத்து வரை மண்ணில் புதைத்து விட்டு யானையின் காலால் தலையை மிதித்துக் கொல்ல வேண்டும்" என்று தீர்ப்பு வழங்கினார். மன்னரும் அப்படியே செய்யுங்கள்" என்றார்.


உடனே காவலர்கள் தெனாலிராமனை காட்டுக்குள் ஒற்றையடிப் பாதை வழியாக இழுத்துச் சென்று ஆள் நடமாட்டமில்லாத இடத்தில் நின்றார்கள். அந்த இடத்தில் ஒரு பெரிய பள்ளம் தோண்டினார்கள்.

தெனாலிராமனை அந்தப் பள்ளத்தில் இறக்கி கழுத்தளவு மண்ணால் மூடிவிட்டனர். பின் யானையைக் கொண்டுவர அரண்மனைக்குச் சென்றனர்.

தெனாலிராமன் தப்பிச் செல்ல வழி தெரியாமல் மண்ணுக்குள் தவித்துக் கொண்டிருந்தார். இந்த நிலையில் தூரத்தில் ஒற்றையடிப் பாதை வழியாக யாரோ வருவது தெரிந்தது.

"ஐயா" என்று அழைத்தார். அந்த மனிதன் அச்சத்துடன் வந்தார். "பயப்படாதீர்கள். இங்கே வாருங்கள்" என்றான்.

அராமனின் அருகே அமர்ந்தார். "யாரய்யா உம்மை மண்ணுக்குள் புதைத்தது?" என்றார்.



இராமன் வந்தவனின் முதுகைப் பார்த்தான். அவன் முதுகு வளைந்து கூனனாகியிருப்பதை அறிந்த இராமன் அவரிடம் சாமர்த்தியமாகப் பேசினான். ஐயா நானும் கூனன்தான்.

ஒரு பெரியவர் என்னிடம் ஒருநாள் முழுவதும் மண்ணுக்குள் புதைந்திருந்தால் கூன் நிமிர்ந்து விடும் என்று சொன்னார். அதன்படி நானும் காலை முதல் மண்ணுக்குள்ளேயே இருக்கிறேன்.

என்னைத் தூக்கி விடுங்கள் என் கூன் நிமிர்ந்து விட்டதா பார்க்க ஆசையாக இருக்கிறது" என்றான். கூனனும் இராமனை வெளியே எடுத்தார். இராமன் தன் கூனல் நிமிர்ந்து விட்டதாக மகிழ்ச்சி கொள்வது போல நடித்தார்.

அதை உண்மையென நம்பிய கூனன் தன்னையும் மண்ணில் புதைக்கும்படி கேட்டார். தன் கூனல் நிமிர வழி செய்யும்படி வேண்டிக் கேட்டுக் கொண்டார். தெனாலிராமனும் மண்ணால் மூடிவிட்டுத் தன் வீட்டுக்குச் சென்றான்.

யானையுடன் வந்த காவலர்கள் தாங்கள் விட்டுச் சென்ற இடத்தில் இராமனுக்குப் பதிலாக வேறொருவன் இருப்பதைப் பார்த்துத் திகைத்தனர்.

அந்தக் கூனனை அழைத்துக் கொண்டு மன்னரிடம் சென்று இராமனின் தந்திரத்தைக் கூறினர். இராமனின் திறமையைக் கண்டு அவனை மன்னித்து விடுதலை செய்தார் மன்னர்.

# ராஜராஜ சோழப்பேரரசின் வரலாறு

## இலங்கையில் பறந்த புலிக்கொடி!

சோழர் படையில் ஒன்பது இலட்சம் பேர் இருந்ததால் மேலைச் சாளுக்கியப் படை மிகவும் திணறியது. சோழர்-சாளுக்கியர் போர் என்று இன்றளவும் விவாதிக்கப்பட்டு வரும் இந்தப் போர் சோழர்களின் வலிமையான படைக்கு இன்னொரு சான்றாக அமைந்தது.

தென்னகத்தில் சோழர்களின் வீரத்திற்கு நிகரானவர்கள் யாரும் அல்லர் என்பதை இன்னொரு முறை நிரூபிக்கும் போராக இது அமைந்தது.

யானைப்படையும் குதிரைப்படையும் ஆயிரக் கணக்கில் இருந்தன. சோழர்படை பற்றிச் சாளுக்கியர்கள் நிறையக் கேள்விப்பட்டிருந்தாலும் முதல் முதலாக அதை நேரில் பார்த்தபோது அவர்களுக்கு திக் என்றிருந்தது.

கத்தி, கேடயம், வேல், வாள் என்று இந்த ஆயுதங்களைக் கொண்டு இன்னும் பல ஆயிரம் பேர் போருக்குத் தயாராக நின்று கொண்டிருந்தார்கள்.




சாளுக்கிய மன்னர் விக்ரமாதித்யா

பார்த்த கணத்திலேயே பின்வாங்கி ஓடுவது என்பது கேளிக்கைக்கு ஆளாகும் என்பதால் சோழர் படையில் ஏதாவது குழப்பம் விளைவித்து ஒரு சாதகமான சூழலை ஏற்படுத்திக் கொள்ளலாம் என்கிற நினைப்பில் மேலைச் சாளுக்கியர்கள் போரைத் தொடங்கினார்கள்.

ஆனால் அவர்கள் நினைத்தது எதுவும் நடக்கவில்லை. வாழ்வின் அவலங்களில் ஒன்று போர்கள். இன்றைய காலகட்டத்தில் போரைப் பற்றிய நம் மதிப்பீடு இவ்வாறாகவே இருக்கும்.

ஆனால் அன்றைய காலகட்டத்தில் ஒரு மன்னர் போர் நடவடிக்கைகளில் துரிதமாகச் செயற்படாவிட்டால் அவர் மன்னராக மதிக்கப்பட மாட்டார்.

சிற்றரசருக்குரிய தகுதியைக் கூட அவர் இழந்து விடுவார். போரில் ஈவு இரக்கத்துக்கு இடம் கிடையாது. மனிதர்கள் உருவில் பாம்புகளும் தேள்களும் உலவுகின்ற உலகத்தில் தற்காப்பு இல்லாவிட்டால் நிலைமை விபரீதம் என்பதை எல்லா மன்னர்களும் புரிந்து கொண்டிருந்தார்கள்.

இந்தப் போர் பல ஆண்டுகள் நீடித்தது. சோழர் படையின் தொடர்ச்சியான வேகத்தில் மிரண்டு போன சத்யாஸ்ரயன் பின்வாங்க ஆரம்பித்தார்.

மன்னர் பின்வாங்கியதால் சாளுக்கிய படையும் போரில் தோற்றுப் புறமுதுகைக் காட்டி ஓடத் தொடங்கியது.

சோழர்கள் விடாமல் அவர்களை ஓட ஓட விரட்டினார்கள். இலட்சக் கணக்கான சோழவீரர்கள் முன்னால் எறும்புகள் போல நசுக்கப்பட்டார்கள் சாளுக்கியர்கள்.

இறுதியில் மேலைச் சாளுக்கியர்களின் அத்தனை பகுதிகளும் சோழர் வசம் வந்தன.

சாளுக்கிய நாட்டில் கிடைத்த பெருஞ் செல்வத்தை எடுத்துக் கொண்டு தஞ்சாவூர் திரும்பியது சோழர் படை.

(தொடரும்)

பேசப்போவது எல்லாவற்றையும் நன்றாக யோசி. ஆனால் யோசிப்பதையெல்லாம் பேசிவிடாதே.
– டெலானி

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## எங்களிடம் இல்லாதுபோன நயத்தக்க நாகரிகம்

என் எதிராளி எதைச் செய்தாலும் அதை எதிர்ப்பதுதான் என் கடமை என்று யார் நினைத்தாலும் அஃது பெரும் பிழையாகவே முடியும்.

ஒருமுறை கர்மவீரர் காமராஜர் அவர்களின் தேர்தல் பிரசாரக் கூட்டம் நடந்து கொண்டிருக்கிறது.

காங்கிரஸ் தொண்டர் ஒருவர் மேடையில் உரையாற்றிக் கொண்டிருக்கிறார்.

அவரின் உரை பேரறிஞர் அண்ணாதுரையை கிண்டல் செய்வதாக இருக்கிறது.

இவ்வாறு பேரறிஞர் அண்ணாதுரையை தாக்கிப் பேசினால் அஃது காமராஜருக்கு மகிழ்வாக இருக்கும் என்ற நினைப்பிலேயே அந்தத் தொண்டர் அவ்வாறு பேசினார்.

அந்நேரம் யாரும் எதிர்பார்க்காத வகையில் கர்மவீரர் காமராஜர் எழுந்து, பேச்சை நிறுத்துமாறு கண்டிப்பாக உத்தரவிடுகின்றார்.

மேடையில் இருந்தவர்களும் சபையோரும் திகைத்துப் போயினர்.

காமராஜர் ஒலிவாங்கிக்கருகில் வருகிறார். குறித்த நபர் அண்ணாதுரைக்கு எதிராகப் பேசியது குறித்து வேதனை அடைகிறேன் என்று கூறிவிட்டு அமர்ந்த காமராஜர்; அண்ணாவைத் தாக்கிப் பேசிய தொண்டரை அழைத்து எச்சரிக்கை செய்கிறார்.

அறிஞர் அண்ணாதுரையை விமர்சிப்பதற்கு உனக்கு தகுதி உண்டா? அவர் எத்தகைய பேரறிஞர். அவரைத் தாக்கிப் பேசுவதற்கும் ஓர் இங்கிதம் இருக்க வேண்டும் எனக் கடிந்து கொள்கிறார்.

கர்மவீரர் போன்ற தலைவர்களுக்கு இனி நாம் எங்கு போவது.

எவருக்கும் எதுவும் சொல்லலாம். எப்படியும் தூற்றலாம். வசைபாடலாம் என்றதொரு வழக்கத்துக்குள் நாம் ஆளாகி விட்டோம். இனி அதனின்றும் மீண்டெழுந்து காமராஜர் போன்ற பெருந்தலைவர்கள் காட்டிய பாதையில் நடப்பதென்பது சாத்தியப்படப் போவதில்லை.

இதில் வேதனையென்னவென்றால், பெரியவர்கள் செய்கின்ற சின்னத்தனமான விமர்சனங்கள் எங்கள் இளம் சந்ததியினரை – மாணவர் சமூகத்தைக் கடுமையாகப் பாதித்து விடுகின்றது.

எப்படியும் பேசலாம். நாக்கூசாமல் குற்றம் சுமத்தலாம். வசைபாடலாம் என்ற நிலைமை வந்த பின்பு, எங்கள் மாணவர்களை வழிப்படுத்துவது எங்ஙனம் என்பதுதான் நம்முன் இருக்கின்ற பெரும் பிரச்சினை.

எதுஎவ்வாறாயினும் நடந்து முடிந்த பொதுத் தேர்தலின்போது நம் அரசியல்வாதிகளில் பெரும்பாலானவர்கள் செய்த தேர்தல் பிரசாரம் என்பது சாக்கடைச் சேற்றை மற்றவர்கள் மீது வாரி வீசுவது போல் இருந்தது.

பதவிக்காக எப்படியும் மற்றவர்களைத் தூற்றலாம், எந்த அதர்மத்தையும் செய்யலாம் என்பதான அவர்களின் மனநிலை பட்டவர்த்தனமாக வெளிப்பட்டது.

ஆக, இத்தகையவர்கள் பதவியைப் பெற்றால் அவர்கள் எப்படி நடந்து கொள்வார்கள் என்பதை ஊகிப்பது கடினமன்று.

## பட்டதாரிப் பயிலுநர்களுக்கு நியமனக் கடிதம் வழங்கல் தொடர்பான அறிவித்தல்

(யாழ்ப்பாணம்)

தொழிலற்ற பட்டதாரிகளுக்கு அரச நிறுவனங்களில் பயிலுநராக தெரிவு செய்யப்பட்ட நல்லூர் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பட்டதாரிப் பயிலுநர்களின் நியமனக் கடிதம் 2020.09.02 ஆம் திகதி தொடக்கம் நல்லூர் பிரதேச செயலகத்தில் வழங்கப்படும்.

தெரிவு செய்யப்பட்ட பட்டதாரிப் பயிலுநர்கள் தேசிய அடையாள அட்டை, பிறப்புச் சான்றிதழ், கிராம அலுவலரால் வழங்கப்படும் வதிவிடச் சான்றிதழ், பட்டச் சான்றிதழ், விபரங்கள் அடங்கிய பெறுபேற்று அட்டவணை, டிப்ளோமா பட்டதாரியொருவராயின் அல்லது அரச பல்கலைக் கழகமல்லாத பட்டம் வழங்கும் நிறுவனம் ஒன்றின் பட்டதாரியாயின் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரித்து உமது பெயரில் வழங்கப்பட்ட கடிதம் ஆகிய ஆவணங்களின் மூலப்பிரதி மற்றும் பிரதியுடன் பிரதேச செயலகத்தில் நேர்முகத் தேர்வுக்கு சமுகமளித்து நியமனக் கடிதத்தைப் பெற்றுக் கொள்ள முடியும் என நல்லூர் பிரதேச செயலாளர் எ.அன்ரன் யோகநாயகம் அறிவித்துள்ளார். (ம-3)

## 400 லீற்றர் கோடா கைப்பற்றப்பட்டது

(கரணவாய்)

கசிப்பு வடிப்பதற்காக தயார் நிலையில் வைக்கப்பட்டிருந்த 400 லீற்றர் கோடா நேற்று வியாழக்கிழமை நெல்லியடி பொலிஸாரால் கைப்பற்றப்பட்டது.

நேற்று முற்பகல் வடமராட்சி - முள்ளிவெளி காட்டுப்பகுதியில் கசிப்பு உற்பத்தி இடம்பெறுவதாக பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலையடுத்து அப்பகுதிக்கு சென்ற பொலிஸார் இரண்டு பரல்களில் காணப்பட்ட 400 லீற்றர் கோடாவினை மீட்டு பொலிஸ் நிலையம் கொண்டு சென்றனர்.

இச்சம்பவம் தொடர்பில் எவரும் கைது செய்யப்படாத நிலையில் மேலதிக விசாரணைகளை நெல்லியடி பொலிஸார் மேற் கொண்டு வருகின்றனர். (ஜ-5-8-60)

## இந்து சமய தத்துவங்கள் ஐந்நூறு

விபூதியைப் பூசிக்கொண்டு சந்தனம், குங்குமம் இவைகளைச் சிறிது மேல் நோக்கிய வண்ணம் இட்டுக் கொள்ள வேண்டும். மேல் நோக்கியிடுவது அறிவுக் கண்ணைக் குறிக்கும். முதலில் விபூதியை இட்டுக்கொண்டு அதனடியில் குங்குமம் இட வேண்டும். (தொடரும்)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை 29ஆம் திகதி சனிக்கிழமை காலை 8 மணியிலிருந்து பிற்பகல் 5 மணிவரை

**யாழ் பிரதேசத்தில்** மூளாய், மூளாய் வைத்தியசாலை, KMK கடலுணவு தொழிற்சாலை, பாரதி வீதி கம்பர்மலை, பொக்கணை, அச்சு வேலி, பொக்கணை, அச்சுவேலி சந்நிதி வீதி, தம்பாலை, இடைக்காடு, வளலாய், அச்சுவேலி வைத்தியசாலை, பத்தானை கேணியடி, , பத்தானை கேணியடி, சுழிபுரம் சந்தி, கள்ள வேம்படி, சத்தியகாடு, வடலியடைப்பு, கோண்டாவிலிலிருந்து இராஜவீதி கோப்பாய் வரை, கல்வியியற் கல்லூரி, 51ஆம் பிரிவு கோப்பாய்இராணுவ முகாம், கோண்டாவில் வோட்டர் வேர்கஸ், இராஜேஸ்வரி திருமணமண்டபம் ஆகிய இடங்களிலும்,

**வவுனியா பிரதேசத்தில்** ஆண்டியப் புளியங்குளம், நித்தியநகர் ஆகிய இடங்களிலும்

**மன்னார் பிரதேசத்தில்** கொக்குபடையான், கொண்டாச்சி கிராமம், மறிச்சுக்கட்டி, முள்ளிக்குளம், கரடிக்குழி, பாலக்குழி, முள்ளிக்குளம் கடற்படைமுகாம், நீலாமடுவிலிருந்து சிலாவத்துறையூடாக அரிப்பு வரை ஆகிய பிரதேசங்களிலும் மின்சாரம் தடைப்படும்.

## அச்செழு மதுரை மீனாட்சிக்கு இன்று கொடியேற்றம்

(யாழ்ப்பாணம்)

அச்செழு மத்தி திருவருள்மிகு நாகதம்பிரான் ஸ்ரீ மதுரை மீனாட்சி அம்மன் தேவஸ்தானத்தின் மஹோற்சவப் பெருவிழா இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 9.00 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து பதினொரு தினங்கள் திருவிழா இடம்பெறவுள்ளது.

அந்த வகையில் எதிர் வரும் 5 ஆம் திகதி சனிக்கிழமை இரவு 7.00 மணிக்கு முத்துச் சப்பறமும் 6 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9.00 மணிக்கு தேர்த் திருவிழாவும் மறுநாள் திங்கட்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும் என ஆலய பரிபாலன சபையினர் அறிவித்துள்ளனர். (ம-3,78)

## ஹெரோயின் பயன்படுத்திய நால்வர் உரும்பிராயில் கைது

(யாழ்ப்பாணம்)

தோட்டத்திற்கு நீர் இறைக்கும் மோட்டார் வைக்கும் கிடங்குக்குள் ஹெரோயின் போதைப் பொருள் நுகர்ந்து கொண்டிருந்த நான்கு பேர் கோப்பாய் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்களிடம் இருந்து 160 மில்லிகிராம் ஹெரோயினும் மீட்கப்பட்டுள்ளது.

இந்த சம்பவம் உரும்பிராய்ப் பகுதியில் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்றுள்ளது. இந்த சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

கோப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட உரும்பிராய் செல்வபுரம் பகுதியில் தோட்டத்திற்கு நீர் இறைக்கும் மோட்டார் வைக்கும் கிடங்குக்குள் இளைஞர்கள் ஒன்று கூடி போதைப்பொருள் பாவிப்பதாக கோப்பாய்ப் பொலிஸாருக்கு இரகசிய தகவல் கிடைத்துள்ளது.

கிடைக்கப்பெறற்ற தகவலின் அடிப்படையில் பொலிஸார் மேற்கொண்ட சுற்றிவளைப்புத் தேடுதலின்போது ஹெரோயின் போதைப்பொருள் நுகர்ந்து கொண்டிருந்த நான்கு பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். இவ்வாறு கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களிடம் இருந்து 160 மில்லிகிராம் ஹெரோயினும் மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களை நீதிமன்றில் முற்படுத்துவதற்கான நடவடிக்கையை கோப்பாய்ப் பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (ம-3,8)

## வாழ்வைப் பொன்னாக்கும் வைர வரிகள்

பிரார்த்தனை என்பது அமைதியை நாடும் முயற்சி. ஆனால் அதை நாம் சிறுநிறு காரியங்களுக்காக்கூட பயன்படுத்த நினைப்பது கொஞ்சமும் சரியல்ல. -சின்மயானந்தர்

## அறிந்துகொள்ள வேண்டிய ஆன்மீகத் தகவல்கள்

### பூஜைக்குரிய மலர்கள்

**வெள்ளை ரோஜா :** வேலை தேடுவோருக்கு நேர்முக தேர்வில் வெற்றி பெறுவோமா என்ற அச்சம். வேலை சரியில்லை என்ற கிரக பயம். வறுமை பயம், வாங்கிய கடனை திருப்பிச் செலுத்த முடியுமோ என்ற பயம். எதிலும் அச்சம், எப்பொதும் அச்சம் மீள வழியே இல்லையா என்று வேதனைபடுபவர்கள், வெள்ளை ரோஜாக்களால் இறைவனை வழிபட அச்சம் பறந்தோடும் , தைரியம் கொடிகட்டும், பகைவரும் நண்பராவர்.

வெள்ளை ரோஜாவின் தன்மை அப்படி. அது இனிமையானது தன்னம்பிக்கை அழிப்பது.


**மஞ்சள் ரோஜா :** தொலைந்து போன நிம்மதியை திரும்ப பெற வேண்டுமா? ரோஜாவை இறைவனுக்கு சமர்ப்பியுங்கள்.

பொறாமை, பகைமை, காரணமாக மனதில் ஏற்படும் நெருடலில் குடும்ப மகிழ்ச்சி காணாமல் போய் விடும். குரோதம் தொலைந்து கணவன், மனைவி குதூகலத்துடன் வாழ்ந்திட ரோஜா கொண்டு இறைவனை வணங்க வேண்டும்.

**சிவப்பு ரோஜா:** இந்துக்கள் ஊழ்வினையில் நம்பிக்கை உள்ளவர்கள், இன்றைய துன்பம் நேற்றைய தவறுகளின் விளைவு என்று எண்ணுவோம், வாழ்வின் கர்மவின்னைகள் நீங்கி விட்டால் நாம் புது மனிதராவோம், நமது வாழ்வும் புது வாழ்க்கை ஆகிவிடும். கர்ம வினைகளில் நம்பிக்கை உடையவர்கள். சிவப்பு ரோஜா கொண்டு இறைவனை அர்ச்சிக்க, கர்மவினைகள் நீங்கி பேரானந்தம் வந்தடையும். (முற்றும்)

# ஐ.பி.எல்.தொடருக்கு மீண்டும் ஏற்பட்டுள்ள சிக்கல்

## வெளியானது முக்கிய தகவல்




ஐக்கிய அரபு அமீரகத்தில் நடைபெறவுள்ள ஐ.பி.எல். தொடரில் சிக்கல் ஏற்பட்டுள்ளதன் காரணமாக போட்டிக்கான அட்டவணை இன்னும் அறிவிக்கப்படவில்லை என்ற தகவல் வெளியாகியுள்ளது.

கொரோனா வைரஸ் பரவல் ஐக்கிய அரபு அமீரகத்தில் ஓரளவிற்கு குறைவாக இருப்பதன் காரணமாகவே, இந்தியாவில் நடக்க வேண்டிய ஐ.பி.எல். தொடர் அங்கு நடத்த திட்டமிடப்பட்டது.

இதையடுத்து தொடருக்காக வீரர்களின் வருகை, மைதானத்தை சரி செய்தல் போன்ற வேலைகள் ஐக்கிய அரபு அமீரகத்தில் தீவிரமாக நடைபெற்று வருகின் றது.

போட்டி ஆரம்பமாவதற்கு இன்னும் சில நாட்களே இருப்பதால், அட்டவணை இன்று வரை அறிவிக்கப்படவில்லை. இதற்கு காரணம் என்ன என்று பார்த்த போது, இதற்கும் கொரோனா தான் காரணம் என்பது தெரியவந்துள்ளது.

ஐக்கிய அரபு அமீரகத்தில், டுபாய், ஷார்ஜா, அபுதாபி ஆகிய மூன்று மைதானங்களில் தான் ஐ.பி.எல்.தொடருக்கான அனைத்து போட்டிகளிலும் நடைபெறவுள்ளன.

இதில் தற்போது அபுதாபியில் கொரோனா வைரஸ் வெகு தீவிரமாக அதிகரித்து வருவதாக கூறப்படுகிறது. இதனால் இங்கு போட்டியை நடத்துவதற்கு கடும் பாதுகாப்பு வேலைகள் நடைபெற்று வருகின்றன.

ஆனால், இந்த மைதானத்தில் ஐ.பி.எல்.தொடர் நடத்தப்பட முடியவில்லை என்றால் போட்டிகளை குறைக்கவும் போட்டிகளின் எண்ணிக்கையை குறைத்து விடலாம் என்றும் ஐ.பி.எல். நிர்வாகம் முடிவு செய்யும் என்றும் கூறப்படுகிறது.

ஒருவேளை இந்த மைதானத்தில் போட்டிகள் நடத்தப்படவில்லை எனில் 60 போட்டிகளில் குறைந்தது 20 போட்டிகளையாவது ஐ.பி.எல்.நிர்வாகம் குறைத்துவிடும் என்றும் தகவல் வெளியாகியுள்ளது. (4)

# டில்லி அணிக்கு புதிய பந்து வீச்சு பயிற்சியாளர்



அவுஸ்திரேலிய அணியின் முன்னாள் வேகப்பந்து வீச்சாளரான ரியான் ஹாரிஸ் டில்லி கப்பிட்டல்ஸ் அணியின் பந்து வீச்சு பயிற்சியாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

ஐ.பி.எல்.இருபது-20 லீக்கில் விளையாடும் அணிகளில் ஒன்று டில்லி கப்பிட்டல்ஸ். இந்த அணியின் தலைமை பயிற்சியாளராக ரிக்கி பொண்டிங் உள்ளார். பந்து வீச்சு பயிற்சியாளராக ஜேம்ஸ் ஹோப்ஸ் நியமிக்கப்பட்டிருந்தார். தற்போது அவர் சொந்த வேலைகாரணமாக விலகியுள்ளார்.

இதனால் அவுஸ்திரேலியாவின் முன்னாள் வேகப்பந்து வீச்சாளரான ரியான் ஹாரிஸ் நியமிக்கப்பட்டுள்ளார். ரியான் ஹாரிஸ்க்கு பயிற்சியாளராக நல்ல அனுபவம் உள்ளது.


பிரிஸ்பேனில் உள்ள தேசிய கிரிக்கெட் மையத்தில் பயிற்சியளராக இருந்துள்ளார். அதன் பின் தேசிய அணிக்கும் பயிற்சியாளராக இருந்துள்ளார். இருபது- 20 போட்டியில் பிரிஸ்பேன் ஹீட் அணியில் பந்து வீச்சு பயிற்சியாளராக பணியாற்றியுள்ளார். கடந்த வருடம் கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணியின் பந்து வீச்சு பயிற்சியாளராக இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (4)




# நொதேன் பிறீமியர் லீக் - 2K20




| POS | TEAM | PLAY | WON | LOST | POINTS | NRR |
|---|---|---|---|---|---|---|
| 01 | CHANKANAI TOP 11 | 2 | 2 | 0 | 04 | 3.55 |
| 02 | KING COBRAS JAFFNA | 4 | 2 | 2 | 04 | 1.14 |
| 03 | VADA STRIKERS | 4 | 2 | 2 | 04 | [illegible] |
| 04 | CHAVA SPARTON | 1 | 1 | 0 | 02 | [illegible] |
| 05 | KOKUVIL STARS | 1 | 1 | 0 | 02 | 0.98 |
| 06 | URELU ROYALS | 1 | 1 | 0 | 02 | 0.40 |
| 07 | JARL ARROWS | 1 | 1 | 0 | 02 | 0.30 |
| 08 | AA SUPER KING | 4 | 1 | 3 | 02 | -0.73 |
| 09 | ARIYALAI KILLADIKAL 100 | 4 | 1 | 3 | 02 | -1.13 |
| 10 | NORTH SUPERIORS | 0 | 0 | 0 | 00 | 0.00 |
| 11 | VALVAI RHINOS | 0 | 0 | 0 | 00 | 0.00 |
| 12 | JAFFNA ROYALS | 0 | 0 | 0 | 00 | 0.00 |
| 13 | NO NAME | 1 | 0 | 1 | 00 | -0.20 |
| 14 | INUVIL UNITTED STAR | 1 | 0 | 1 | 00 | -0.30 |



# விக்னேஸ்வரன்...

வில் ஆற்றிய உரையை ஹன்சார்ட்டில் இருந்து நீக்குமாறு ஆளும் மற்றும் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் பாராளுமன்றில் விடுத்த கோரிக்கைக்கு பதிலளிக்கையில் சபாநாயகர் இதனைக் கூறியுள்ளார்.

பாராளுமன்றத்தின் கன்னி அமர்வில் தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் தலைவரும் யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் ஆற்றிய உரை தொடர்பில் பாராளுமன்றில் நேற்றும் காரசார விவாதம் இடம்பெற்றது.

எனினும், விக்னேஸ்வரனின் உரை அவைக் குறிப்பில் இருந்து நீக்கப்படாது என சபாநாயகர் அறிவித்தார்.

பாராளுமன்றத்தில் முதல் அமர்வில் உரையாற்றிய விக்னேஸ்வரன், தமிழ் மொழி உலகின் மிகப் பழமையான மொழி என்றும், இலங்கையின் முதல் பழங்குடி மக்களின் முதல் மொழி என்றும் கூறியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-3)

# யாழ்.பல்கலைக்...

ராக கணித புள்ளி விபரவியல் துறையின் சிரேஷ்ட பேராசிரியர் எஸ்.சிறிசற்குணராஜா தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

நேற்று வியாழக்கிழமை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவால் யாழ்ப்பாண பல்கலைக்கழகத் துணைவேந்தராக சிறிசற்குணராஜா நியமிக்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதியின் மேலதிக செயலாளரினால் அறிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் துணைவேந்தராகவிருந்த பேராசிரியர் ஆர்.விக்னேஸ்வரன் கடந்த வருடம் ஏப்ரல் மாதம் 30ஆம் திகதி உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் நீக்கப்பட்டிருந்தார்.

இதனைத் தொடர்ந்து புதிய துணைவேந்தரைத் தெரிவு செய்யும் வரை பேராசிரியர் க.கந்தசாமி தகுதிவாய்ந்த அதிகாரியாக நியமிக்கப்பட்டார்.

இந்நிலையில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் புதிய துணைவேந்தர் பதவிக்காக கடந்த மே 15ஆம் திகதி விண்ணப்பங்கள் கோரப்பட்டிருந்தன.

பல்கலைக்கழகத் துணைவேந்தர் வெற்றிடத்திற்காக ஆறு பேர் விண்ணப்பித்த நிலையில் மத்திய மதிப்பீட்டுக் குழு மற்றும் பேரவையின் மதிப்பீடுகளின் அடிப்படையில் மூன்று பேர் ஜனாதிபதிக்குப் பரிந்துரைக்கப்பட்டனர்.

இதனடிப்படையில் மூவரினது பெயர்களையும் கடந்த 13ஆம் திகதி பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு கல்வி அமைச்சுக்கு அனுப்பி வைத்திருந்தது.

இதனையடுத்துப் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு, கல்வி அமைச்சு ஆகியவற்றின் பரிந்துரைகளுடன் கிடைத்த மூன்று பெயர்களிலிருந்து மதிப்பீட்டிற்கமைய முதல் நிலையைப் பெற்றிருந்த பேராசிரியர் எஸ். சிறிசற்குணராஜாவை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் புதிய துணைவேந்தராக நியமித்துள்ளார்.

இன்று காலை 8 மணியளவில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் அமைந்துள்ள பரமேஸ்வரன் ஆலயத்தில் விசேட பூசை இடம்பெற்று காலை பதவியேற்பு நிகழ்வு இடம்பெறும். (ம-3,18)

# கோட்டா அரசு...

அதில் கருத்து தெரிவிக்கும்போதே வடக்கு - கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் சங்கத் தலைவி யோகராசா கனகரஞ்சனி இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

அண்மையில் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல ("புலிகள் அமைப்பில் இருந்தவர்கள் காணாமல் போயிருந்தால், அவர்கள் வெளிநாட்டுக்கு சென்றிருப்பார்கள். புலிகளின் குடும்பங்களுக்கு நட்டஈடு அல்லது நிவாரணம் வழங்கினால் பயங்கரவாதத்தை ஊக்குவிப்பது போலாகும்") எனத் தெரிவித்திருந்தார்.

இவர்கள் அண்மையிலே மட்டுமல்ல நாங்கள் எங்களுடைய உறவுகளை தேடுகின்ற காலந்தொட்டு இவ்வாறே கூறி வருகின்றனர்.

போர்க்குற்றத்தை நிராகரித்து போர்க்குற்றம் ஒன்று இலங்கையில் நடைபெறவில்லை என்று கூட பேசி வந்தார்கள். போர்க்குற்றம் இடம் பெற்றமைக்கான ஆதாரம் இல்லை என்று கூட கூறியிருந்தார்கள்.

ஆனால் யுத்தம் நடந்த பிற்பாடு கையளித்து காணாமல் ஆக்கப்பட்ட, இலங்கை அரசை நம்பி ஒப்படைக்கப்பட்ட, எமது பிள்ளைகளுக்கு என்ன நடந்தது என்று கூறும் பொறுப்பு இந்த அரசுக்கு உள்ளது.

ஆட்சி மாற்றங்கள் வரலாம். அரசு மாறலாம். ஆனால் எங்களுடைய உறவுகளுக்கான நீதி வரும் வரைக்கும் நாங்கள் இந்த போராட்டத்தை கைவிடப் போவதில்லை. இதை சர்வதேசம் கவனத்தில் கொண்டு இலங்கை அரசிற்கு அழுத்தத்தைக் கொடுத்து கால அவகாசம் கொடுக்காமல் எங்களுக்கான நீதியை பெற்றுத்தர வேண்டும் எனக் கருத்துத் தெரிவித்தார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்,

நாளை மறுதினம் 30ஆம் திகதி காணாமல் ஆக்கப்பட்ட எமது பிள்ளைகளுக்கான நீதி வேண்டியும் அவர்களை மீட்டுத்தர வேண்டியும் வடக்கு மாகாணத்தில் யாழ்ப்பாணத்தில் மாபெரும் போராட்டம் ஒன்றினை வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட சங்கம் ஏற்பாடு செய்துள்ளது.

நாங்கள் எமது வீடுகளில் உட்புகுந்து கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்ட எமது பிள்ளைகளைத் தேடிக் கொண்டு வருகின்றோம். இதற்கு இலங்கை அரசு எந்த தீர்வும் வழங்காது 14 ஆண்டுகளாக சிரித்துக் கொண்டு இருக்கின்றது.

எங்களுக்கான ஒரு நீதியை இன்று சர்வதேசம் பெற்றுத்தர வேண்டும். அதற்கான இந்த தூய்மையான உன்னதமான இந்த போராட்டத்தை புலம்பெயர் நாடுகளில் இருக்கின்ற எங்களுடைய உறவுகளும் அந்தந்த நாடுகளிலேயே எங்களுக்காக குரல் கொடுக்க வேண்டும் என்றார். (ம-3,100,101,350)

# பாராளுமன்றில்...

பெற்றுள்ளன.

கடந்த வாரம் பாராளுமன்றத்தில் உரையாற்றியிருந்த விக்னேஸ்வரன், தமிழர்களே இலங்கையின் பூர்வீக குடிகள் என்று குறிப்பிட்டிருந்தார்.

இதனையடுத்து ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் மனுச நாணயக்கார விக்னேஸ்வரனின் உரையை பாராளுமன்ற குறிப்பிலிருந்து நீக்க வேண்டும் என்று சபாநாயகரிடம் கோரிக்கை விடுத்திருந்தார்.

இந்நிலையில் நேற்று பாராளுமன்றம் கூடியபோது, மனுச நாணயக்கார தாம் பிரச்சினை எழுப்பியபோதும் ஹன்சார்ட்டில் விக்னேஸ்வரனின் உரை பதிவு செய்யப்பட்டுள்ளது என்று சுட்டிக்காட்டினார்.

விக்னேஸ்வரனின் கருத்துக்களுக்கு பதிலளிக்க வேண்டும் என்றும், பிளவுபட்ட இலங்கையை விக்னேஸ்வரன் ஊக்குவிக்கின்றார் எனவும் மனுச நாணயக்கார தெரிவித்தார்.

இதனை நிராகரித்த சபாநாயகர், உறுப்பினர்களுக்கு தமது கருத்தை வெளிப்படுத்தும் உரிமை உள்ளது என்று தெரிவித்தார்.

எனினும் சபாநாயகரின் நிலைப்பாட்டை ஏற்க மறுத்த மனுச நாணயக்கார விக்னேஸ்வரனின் நிலைப்பாட்டிற்கு தனது எதிர்ப்பை வெளியிட்டார்.

இதன்போது உரையாற்றிய பாராளுமன்ற உறுப்பினர் ரவூப் ஹக்கீம் கருத்துத் தெரிவிக்கையில்,

சுதந்திரத்தினை பாராளுமன்றத்தின் அனைத்து உறுப்பினர்களும் மதிக்க வேண்டும் என வேண்டுகோள் விடுத்தார். சபாநாயகரின் நிலைப்பாட்டையும் அவர் வரவேற்றார். (ம-3,6)

# விக்னேஸ்வரனை...

பாராளுமன்ற அமர்வு நேற்றுக் காலை 9.30 மணிக்கு சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் கூடிய வேளையில், கடந்த வார பாராளுமன்ற அமர்வில் விக்னேஸ்வரன் கூறிய கருத்துக்கள் தொடர்பில் ஐக்கிய மக்கள் சக்தியினர் எதிர்ப்பை வெளிப்படுத்தினர்.

ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர்களான மனுச நாணயக்கார, நளின் பண்டார ஆகியோரே தமது எதிர்ப்பை முன்வைத்தனர்.

இந்த நாட்டின் பூர்வீகக் குடிகள் தமிழர்கள் எனக் கூறிய விடயத்தை அவைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டும் எனக் கூறினோம். ஆனால், விக்னேஸ்வரனின் கருத்து அவைக் குறிப்பில் பதியப்பட்டுள்ளது.

இது ஒழுங்கு விதிகளுக்கு முரணானது. இது குறித்து அரசின் நிலைப்பாடு என்ன? அவர் கூறியது சரி என்பதை அரசு ஏற்றுக் கொள்கின்றதா? இந்த நாட்டில் இனவாதம், பிரிவினைவாதத்துக்கு இடமளிக்க மாட்டோம் எனச் சத்தியப் பிரமாணம் செய்து கொண்டோம்.

ஆனால், இதற்கு முரணான விதத்தில் விக்னேஸ்வரன் எம்.பி. செயற்பட்டுள்ளார். அவர் தேசத்துரோக கருத்தை முன்வைத்துள்ளார். அதற்கமைய அவரை பாராளுமன்றத்தில் இருந்து வெளியேற்ற வேண்டும்" என்று அவர்கள் கூறினர்.

மேலும் கடந்த வாரம் முள்ளிவாய்க்கால் நினைவுத்தூபிக்கு முன்பாக சென்ற பாராளுமன்ற உறுப்பினர்களான விக்னேஸ்வரன், கஜேந்திரகுமார் பொன்னம்பலம் அங்கு உத்தியோக பூர்வமற்ற பதவிப் பிரமாணத்தை செய்து கொண்டதாகவும், அது குறித்து அவர்களிடம் விசாரணை செய்ய வேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் அட்மிரல் சரத் வீரசேகர கடும் விமர்சனம் முன்வைத்தார். (ம-3,8)

# சாவ...

நுணாவில் பகுதியில் நேற்று கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

வீட்டு வளவு ஒன்றில் குழி தோண்டும்போது அங்கு சந்தேகத்திற்கிடமான பொருள் இருப்பதை அறிந்த வீட்டு உரிமையாளர் சாவகச்சேரி பொலிஸாருக்கு தகவல் வழங்கியுள்ளார்.

இதனையடுத்து சம்பவ இடத்திற்கு சென்ற பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளதுடன், அடையாளம் காணப்பட்ட நிலக்கண்ணிவெடியை அகற்ற நடவடிக்கை எடுத்துள்ளனர். (ம-3)

# 2 பேருக்கு...

றும் குவைத்தில் இருந்து வருகை தந்த ஒருவரே இவ்வாறு கொரோனா தொற்றுக்கு உள்ளாகி உள்ளனர்.

இதற்கமைய நாட்டில் கொரோனா தொற்றுக்குள்ளானவர்களின் மொத்த எண்ணிக்கை 2,986 ஆக அதிகரித்துள்ளதாக அரசாங்க தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது. (ம-3)


மஹஜன சம்பத
திகதி 2020/08/27
சீட்டிழுப்பு இலக்கம் 4227
G 1 7 3 5 1 9
தேசிய லொத்தர் சபை

கொவிசெத உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 27-08-2020
சீட்டிழுப்பு இலக்கம் 2522
R 13 33 36 40
தேசிய லொத்தர் சபை

மெகா பவர்
திகதி 27/08/2020
சீட்டிழுப்பு இலக்கம் 0594
Z 17 09 43 47 70

வாசனா சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் 1608 திகதி 2020/08/27
ஆங்கில எழுத்து D வெற்றி இலக்கங்கள் 08 30 58 66
தேசிய லொத்தர் சபை

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1199
சீட்டிழுப்பு திகதி 27.08.2020 வியாழக்கிழமை
A 01 35 39 67
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 53,040,619.60

அத கோடிபதி ADA KOTIPATHI
சீட்டிழுப்பு இல: 1023
வர்ணம் : நீலம்
சீட்டிழுப்பு திகதி: 2020.08.27
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 64,642,570/-
வெற்றி இலக்கங்கள் 05 36 48 50 C
ரூ. 500/- பரிசுக்கான விசேட இலக்கம் 9261
ரூ. 100/- பரிசுக்கான விசேட இலக்கம் 181
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

ராசி
வெற்றி வாரம் 2904 வர்ணம் கபிலம் திகதி 27.08.2020
வெற்றி இலக்கங்கள் 54 55 56 59 மகரம்
எதிர்வரும் சுப்பர் பரிசுத்தொகை ரூ. 2,000,000
தொ.பே.: 0112 333 546/47 Web: www.dlb.lk

ஜயோதா Jayoda
சீட்டிழுப்பு வாரம் 1684
சீட்டிழுப்பு திகதி 27/08/2020
வெற்றி இலக்கங்கள் 06 31 43 67 ஆங்கில எழுத்து T
எதிர்வரும் சுப்பர் பரிசுத்தொகை ரூ. 52,809,564
6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.
தொ.பே.: 0112 333 546/47 Web: www.dlb.lk

## க.பொ.த (உயர்தரம்) 2020 பரீட்சைகள்

பொருளியல் பகுதி 1 கருத்தரங்கு

பிரபல பொருளியல் விரிவுரையாளரும், பல வருட பரீட்சை புள்ளியிடல் அனுபவமும் கண்டி புனித திருத்துவ கல்லூரி ஆசிரியருமான

திரு. N. சிறிகுமார் BA (Hons) Econ Spc, MA, Econ, Dip in Edu)

ஒரே நாளில் 150 மாதிரி பகுதி 1 பல்தேர்வு வினாக்களின் விரிவான விளக்கத்துடனான மீட்டல்

இடம்: Institute Of Business Management No.1, 2nd Lane, Power House Road, Jaffna.

காலம்: 1 ம் திகதி செப்டம்பர் 2020 காலை 9.00 மணி முதல் 4.00 மணி வரை

உங்கள் திறமைச்சித்தியினை உறுதிப்படுத்த அரிய சந்தர்ப்பம்

மேலதிக விபரங்களுக்கு (C-1006)

IBM INSTITUTE OF BUSINESS MANAGEMENT
No. 1, 2nd Lane, Power House Road, Jaffna.
0212227770, 0777633915

## இந்திய சாஸ்திரியார் வருகை

ஓம் சக்தி அருள் வாக்கு பெற்ற பரம்பரை ஜோதிடர் சிங்கப்பூர்,மலேசியா மற்றும் பல நாடுகளில் புகழ் பெற்ற

**இரத்தினசாமி** அவர்கள்

ஜாதகம், கைரேகை, எண்கணிதம் திருமணத்தடை, கல்வித்தடை, வெளிநாடு செல்லத்தடை மற்றும் குழந்தைப் பாக்கியம், காதலில் தோல்வி, குடும்பத்தில் பிரச்சினை, தொழில் முன்னேற்றமின்மை, புதிய தொழில் தொடங்க மற்றும் எந்தப் பிரச்சினைக்கும் தொடர்பு கொள்ளவும். (3686)

முன்பதிவுக்கு: 071 574 8358, 071 392 9703, 076 682 7368

இல.101, Kandy Rd, jaffna (யாழ்.நீதிமன்றத்திற்கு அருகில்).


## மின் தடை

(யாழ்ப்பாணம்)

ஏற்கனவே அறிவிக்கப்பட்டதற்கு மேலதிகமாக மின் விநியோக மார்க்கங்களின் பராமரிப்பு வேலைகளிற்காக இன்று பிற்பகல் 1.00 மணியிலிருந்து பிற்பகல் 5.00 மணி வரை ஆனந்தபுரம், கிளிநொச்சி வைத்தியசாலை, பாரதிபுரம், கிருஸ்ணபுரம், மலையாளபுரம், இரணைமடுவின் ஒரு பகுதி ஆகிய பிரதேசங்களில் மின்சாரம் தடைப்படும் என இலங்கை மின்சார சபை அறிவித்துள்ளது. (ம-3)


## வீடு வாடகைக்குத் தேவை

யாழ். நகருக்கு அண்மையில் வீடு வாடகைக்குத் தேவை.

தொடர்புகளுக்கு (C-164)

076 682 7368

## EB பரீட்சைக்கான வகுப்புக்கள்

FR - A. கலைச்செல்வன்
ECOD - சத்தியமூர்த்தி
ICT - M.I. பாலா

சனி 9.00 - 12.00 (3715)

AMC ACADAMY
Bmc Lane,
Clock Tower Road
T.P : 077 694 4543

## போட்டிப் பரீட்சை வகுப்புக்கள்

- முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்கள் (MSO)
- புகையிரத நிலைய அதிபர்
- Central Bank M.A
- இறைவரி சேவை
- பதிவாளர் சேவை
- சட்டமாணி நுழைவு

சனி, ஞாயிறு 9.30 am

சகல பரீட்சைக்கான சகல விடயங்களும் த. தவசேகர் வழிகாட்டலில் (C-164)

T.P- 076 688 3394

யாழ்ப்பாணக் கல்லூரி பட்டப் படிப்புகள் பிரிவு (யாழ். ஆஸ்பத்திரி வீதியில் BOC ATM எதிரில்)

## CIMS COLLEGE OF INTERNATIONAL MIGRATION SKILLS

**Care Giver Course - பராமரிப்பாளர் பயிற்சி நெறி**

- கனடாவில் / வெளிநாடுகளில் வேலைவாய்ப்பை பெற்றுக்கொள்ள
- இங்கேயே படித்துக்கொண்டே 50'000/= சம்பளம் பெறக்கூடிய பயிற்சி
- எமது திறப்பு விழாவில் அனுமதி பெறுவோருக்கு மட்டும் விசேட கட்டணக்கழிவு

சிறுவர் பராமரிப்பு/ முதியோர் பராமரிப்பு/விசேட தேவையுள்ளோர் பராமரிப்பு/வீட்டு பராமரிப்பு




அரச அங்கீகாரம் பெற்ற எமது கற்கை நெறியானது அதிக செயன்முறைகளுடனும் (Practicals) பயிற்சிகளுடனும் (On the Job Training) கூடியதாக அமைவதால் எமது மாணவர்கள் மிக இலகுவாகவும் திருத்தமாகவும் வேலைகளை செய்யும் ஆற்றலை பெறுவார்கள். மேலும் எமது கற்கை நெறிகள் கனடாவின் Care Giver வேலை வாய்ப்பு மற்றும் குடிவரவு திட்டத்தினை அடிப்படையாகக்கொண்டு அமைக்கப்பட்டிருப்பதால் கனடா மற்றும் எந்தவொரு வெளிநாட்டிலும் வேலைவாய்ப்பினை பெற்றுக்கொள்ளக்கூடியதுடன் உள்நாட்டில் கூட சிறுவர் பராமரிப்பு மையங்கள், முதியோர் பராமரிப்பு மையங்கள், விசேட தேவையுள்ளோர் பராமரிப்பு மையங்கள் மற்றும் வீட்டு பராமரிப்பு போன்ற இடங்களில் உடனடி வேலைவாய்ப்பினை பெற்றுக்கொள்ளலாம். (C-160)

அனுமதிகளுக்கு - 49A, சப்பல் லேன், யாழ்ப்பாணம்

நாள் - 30-08-2020 ஞாயிற்றுக்கிழமை
நேரம் - காலை 10 மணி

0777068777

## மீண்டும்



### வெளிநாடுகளுக்கான துரித தபால்கள் பொதிகள் சேவை

அசாதாரண சூழ்நிலை காரணமாக முடங்கியிருந்த எமது சேவை மீண்டும் வழமைபோல் அனைத்து நாடுகளுக்கும் 100% பாதுகாப்புடன் நடைபெறுகின்றது. (C-113)

**அருள் குளோபல் எக்ஸ்பிரஸ்**

இல.01, பிறவுண் வீதி, நாவலர் வீதிச் சந்தி, யாழ்ப்பாணம்

தொ.பே:- 021 222 6113

**அருள்ஸ் (பிறைவேற்) லிமிட்டெட்**



இல.10, புதிய மாநகர சபை கட்டிடத் தொகுதி, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

தொ.பே:- 021 222 3536

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532

## Techno World

தொழில்நுட்பக் கல்லூரி

வெலிங்டன் சந்தி, லிங்கம் கூல்பார் அருகாமை, யாழ்.

### A/L 2020 தொழில்நுட்ப பிரிவு

### மாபெரும் விசேட செயலமர்வு

காலை 8 - மதியம் 2.30

| திகதி | பாடங்கள் |
|---|---|
| 7-9,12-15, 25-27 | தொழில்நுட்பவியலுக்கான விஞ்ஞானம் |
| 10-14,26-27 | பொறியியல் தொழில்நுட்பவியல் உயிர்முறைமைகள் தொழில்நுட்பவியல் |
| 18-21 | I.C.T, விவசாய விஞ்ஞானம், புவியியல், ஊடகக்கல்வி, கணிதம்(7),சித்திரம் |

07.09.2020 முதல்

**ஆரம்பம் 07.09.2020 (8am - 2.30pm)**

மாவட்ட முதல்நிலை பெற்ற மாணவர்கள்

**2019**

| | |
|---|---|
| மதுசாளினி | (Kili).01(BT) |
| யோகதீபன் | (JAF) 01(BT) |
| யசிதா | (MULLAI) 01(BT) |
| அருள்ராஜ் | (MAN) 01(ET) |
| தனுஜன் | (MULLAI) 02(BT) |
| தர்சன் | (KILI) 02(BT) |
| ஜீவரதன் | (MULLAI) 02(ET) |
| பிரியங்கன் | (KILI) 02(ET) |
| தக்சயன் | (MULLAI) 03(ET) |
| நிலவன் | (KILI) 03(BT) |
| ஜந்துசன் | (JAF) 03(ET) |
| லாவண்ஜா | (JAF) 04(BT) |

**2018**

| | |
|---|---|
| கலக்சிகா | (JAF) 01(BT) |
| ரஜிதா | (MULLAI) 01(BT) |
| விதுர்சன் | (KILI) 01(BT) |

**2017**

| | |
|---|---|
| கேசனா | 01(BT) |
| தமிழினியன் | 01(ET) |
| மேரிகனிஸ்ரா | 02(BT) |
| சரண்சனா | 03(BT) |
| கோகுலன் | 03(ET) |

(C-161)

தொடர்புகளுக்கு : 0770175346, 0771703549

## தேவை

கிளிநொச்சியில் இயங்கிவரும் பிரபலமான புடவையகத்திற்கு அனுபவமுள்ள விற்பனை உதவியாளர் தேவை. (C-157)

தொடர்புகளுக்கு

077 373 4109

## விரைவு பொதிகள் சேவை

V2 TRAVELS

வழமைபோல வெளிநாடுகளுக்கு பொதிகளை எமக்கூடாக அனுப்பிவைக்க முடியும்

எமது நேரடிக்கிளைகள்

- யாழ்ப்பாணம் • கிளிநொச்சி • சாவகச்சேரி
- நெல்லியடி • கொடிகாமம் • திருகோணமலை
- புதுக்குடியிருப்பு • சுன்னாகம் • மானிப்பாய்
- மருதங்கேணி • பருத்தித்துறை • வல்வெட்டித்துறை

(C-112)

0768226240

## BA பேராதனை பல்கலைக்கழகம்

### புதிய பாடத்திட்டம்

★ BA மூன்றாம் ஆண்டிற்கான விரிவுரைகள்.
ஆரம்பம் :- 29.08.2020, காலை:- 8.00 மணி

★ BA 100 Level 2019ம் ஆண்டிற்கு பல்கலைக்கழகத்திற்கு பதிவினை மேற்கொண்ட மாணவர்கட்கான விரிவுரைகள்.
ஆரம்பம் :- 29.08.2020, காலை :- 8 மணி

★ BA பழைய பாடத்திட்டத்திற்கு பரீட்சைக்கு விண்ணப்பித்த மாணவர்கட்கான வகுப்புக்கள்.
ஆரம்பம் :- 29.08.2020 (C-149)

நிர்வாகி :- ச. அருள்நங்கை

021 222 8148
077 846 9721

புதிய உயர்கல்லூரி
ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்.


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 28.08.2020 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.